
Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
11/00
දිනමුරසු වාරමලර්
செப்.14-20,1997


# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 222


## குறி தவறும் அரசியல் பூசல்



## நெருங்கும் நெருக்கடி



## டயானா ஸ்பெசல்



## முதுகில் குத்தப்பட்ட முன்னாள் தலைவர்

## சினிவிசிட்

# முரசம்

## தேவை விரைவான தண்டனை

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

மட்டக்களப்பில் நிகழ்ந்துள்ள
மாபெரும் அவலமும்
மாண்டோர் எண்ணிக்கையும்
மனதை வதைக்கிறது!

கள்ளச் சாராயம்
மனித உயிர்களை
கொள்ளை கொண்டுள்ளது!

பொதுவாகவே
மதுபானம் தீமையானதுதான்.
அதிலும் கள்ளச் சாராயம்
நின்று கொல்லும் யமன்.
நீண்டகாலமாகவே
கள்ளச் சாராய வியாபாரம்
மட்டக்களப்பில் நடந்திருக்கலாம்.
விபரீதம் பெரிதாகியதால்
விஷயம் வெளிப்பட்டுவிட்டது!

தயாரிப்பில் ஏற்பட்ட தவறு
அன்றே கொல்லுமளவுக்கு
கொடியதாக இருந்தமையால்
பலநாள் ஏமாற்று தெரிந்துவிட்டது.
எத்தனைபேரை படிப்படியாக
நின்று கொல்லப் போகிறதோ?

தனிப்பட்ட ஒருவரல்ல,
ஒரு நிறுவனமாகவே
கள்ளச் சாராய உற்பத்தி
நடத்தி வருவதாக தோன்றுகிறது!

நீதியான விசாரணை
எவ்வித தலையீடுமின்றி
நடத்தப்படுமானால்
பல தகவல்கள் வெளிவரலாம்.

மட்டக்களப்பு
மதுபானசாலைகளில் மட்டுமன்றி
வேறு பகுதிகளில் உள்ள
மதுபான சாலைகளிலும்
மிகையான இலாபம் கருதி
கள்ளச் சாராய விற்பனை
நடைபெறுகிறதா என்பதை
கண்டறிய வேண்டும்.

வழக்கமாக இவ்வாறான
குறுக்கு வழிகளில் ஈடுபடுவோர்
தனிமனிதர்களாக இருப்பதில்லை.
அவர்கள் பின்னால்
அதிகார பலம், அரசியல் பலம்
பணபலம் போன்றவை
கைகோர்த்து நிற்பதுண்டு!

இலாபப் பங்கீடுகள்தான்
இவ்வாறான முறைகேடுகளுக்கு
தூண்டுகோலாகவும்
துணிச்சலாகவும் அமைவதுண்டு!

சட்டத்தின் சந்து பொந்துகளும்
குற்றவாளிகள் என்று தெரிந்தும்
காப்பாற்ற கரம் உயர்த்தும்
சில சட்டவாதிகளும்கூட
அழிவுக் கிருமிகளான நபர்களுக்கு
துணிச்சல் வரக் காரணம்தான்.

விசாரணைகள், கைதுகள்
என்று வெளியாகும் செய்திகள்
அப்போதைய சூட்டைத்
தணிப்பனவாக மட்டும்
இருந்துவிடக்கூடாது!

குற்றவாளிகளை
தகுந்த ஆதாரங்களுடன்
சட்டத்தின் முன் நிறுத்துவதும்
இதுபோன்ற வழக்குகளை
துரிதமாக விசாரணை செய்து
தண்டனை வழங்குவதும்தான் முக்கியம்!

பகிரங்கமாகத் தெரிந்த
குற்றவாளிகள்
தப்பிக்கொள்ளும்போதுதான்
பாதிக்கப்பட்டவர்கள்
சட்டத்தை தம் கையில் எடுக்கும்
நிலையும் தோன்றுகிறது!

மட்டக்களப்பில் நிகழ்ந்த
மாபெரும் அவலத்தில்
பலியானவர்களின் குடும்பத்தினருக்கு
'முரசு' ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கிறது.
அவர்கள் துயரில்
முரசும் பங்குகொள்கிறது!

மட்டக்களப்பு சாவுகள் தொடர்பாக
உடனடியாக
இலங்கை அரச வானொலி
வெளியிட்ட செய்தி
மிக அநாகரிகமான
பிரசாரமாகவே அமைந்திருந்தது!

"பயங்கரவாதிகள்
சாராயத்தில் விஷம் கலந்தனர்
என்று சந்தேகிக்கப்படுகிறது"
என்று செய்தி சொன்னார்கள்.

அழுவதா? சிரிப்பதா?
என்று தெரியவில்லை.

நடந்த சம்பவம்
என்னவென்றுகூட
சரியாக விசாரிக்காமல்,
உண்மையான குற்றவாளிகள் தப்ப
அரச வானொலியே
ஆலோசனை சொல்லுகிறது?

பொதுமக்களின் சாவைவிட
புலிகள்மீது குற்றம்சாட்ட
ஒரு காரணம் வாய்த்ததே
என்று பூரித்ததுபோல,
ஏன் இந்த அவசரக் குடுக்கைத்தனம்?

எடுத்ததுக்கெல்லாம்
பயங்கரவாத பூச்சாண்டி காட்டுவதை
எப்போது நிறுத்தப் போகிறார்கள்?

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## புதிய தீர்மானம்

*உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? (சங் 139:7)*



என் அன்பு சகோதரனே! சகோதரியே! என்னை யாரும் அறியார்கள். என் வாழ்வில் செய்கிற குற்றங்கள் மற்றவர்களுக்கு தெரியவே தெரியாது. என்று காலத்தை தவறாக செலவழித்துக் கொண்டு வாழ்வாயானால் வேதனைகளும், தோல்வியும், துக்கமும் தோன்றும். இந்தக் காலத்தில் கர்த்தருக்கு பிரியமாய் நடக்க, பிரியமானதைச் செய்ய நீ தீர்மானித்தால் உன் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும், ஆசீர்வாதமும் உன்னைத் தொடரும். கர்த்தருடைய கண்கள் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிற படியால் (சங்: 139:2) நாம் செய்யும் அனைத்து காரியங்களும் பரிசுத்தமாக இருக்கட்டும், நம்மை நேசிக்கிற கர்த்தர் நம்முடைய ஒவ்வொரு செய்கையையும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். தவறான தீங்கான காரியங்களில் நாம் ஈடுபடும்போது அவர் துக்கப்படுகிறார். "எனது பிள்ளை, நான் நேசிக்கிற பிள்ளை எனக்கு பிரியமில்லாத காரியங்களைச் செய்கிறதே, தன் காலத்தை பிரயோஜனப்படுத்தாது தன் செய்கைகளை உணராது வீணாக்குகிறதே!" என்று கலங்குகிறார்.

அருமை சகோதரனே! சகோதரியே!, இதுவரை உன் காரியம் எப்படிப் பட்டதாயிருந்தாலும் இன்று உன்னை காண்கிற கர்த்தரின் சமூகத்தில் ஒப்பு வித்து புதிய தீர்மானம் செய். கர்த்தர் நமது வாழ்விலுள்ள சகல காரியங் களையும் காண்கிறவர் என்று அறிந்து உணர்ந்து பரிசுத்தமாய், பிரயோ ஜனமாய் வாழ நம்மை அர்ப்பணிப்போம். புதிய தீர்மானத்தை உள்ளத்தின் ஆழத்தில் எடுப்போம்.

தி. பெஞ்சமின் தேவபாலன்.

## அண்டை வீட்டாரை நேசிக்கும் பாங்கு

சமுதாய வாழ்வில் பல்வேறு உறவு முறைகள் காணப்படுகின்றன. அந்த உறவு முறைகளில் முக்கியத்துவம் வாய்ந்த உறவு முறையாக அண்டை வீட்டாரோடு நாம் கொள்ளும் உறவு முறை அமைந்திருக்கிறது.

* நாம் எவ்வளவு தூரம் அண்டை வீட்டாரோடு தொடர்பு கொண்டு இணக்கத்தோடும், நேசத்தோடும் வாழவேண்டும் என்பதை கீழ்வரும் போதனைகள் மூலம் வலியுறுத்தப்படுகிறது:

1. உங்களது முகங்களை கிழக்கிலோ, மேற்கிலோ அடிக்கடி திருப்பிக்கொள்வதன் மூலம் நன்மை புரிபவர்களாக மாட்டீர்கள். மாறாக யார் உண்மையில் ஈமான் கொண்டு நல்லமல்கள் புரிந்து ஏழைகளையும், விதவைகளையும், அநாதைகளையும், அண்டை வீட்டார், அயல் பாகக்காரர்களையும் அனுசரித்து பேணி நடந்து கொள்கிறாரோ அவர்களே உண்மையில் நன்மைகள் புரிந்தவர்களாவர். (அல்-குர்ஆன்)

2. அண்டை வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் உண்டு மகிழ்பவன் உண்மையான விசுவாசியாக மாட்டான் (அல்-ஹதீஸ்)

* இந்நபி மொழி பின்வருமாறு மேலும் இவ்வுறவை தெளிவு படுத்துகிறது: நபி (ஸல்) அவர்களிடம் ஜிப்ரீல் (அலை) அண்டை வீட்டார் விவகாரத்தில் நாம் கொள்ள வேண்டிய உறவு முறை ஒருவர் தனதுவாரிசு சொத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட பங்கை கொடுத்துதவ வேண்டுமென்ற அளவுக்கிருந்தது என அண்டை வீட்டாரின் உரிமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

இதனை உணர்ந்து நாம் அண்டை வீட்டாரோடு நேசக் கரம் கொண்டு செயற்படுவோமாக.

பெனாஸிர் ஸாஹிர், மருதமுனை-03.

# கவிதைப் போட்டி இல. 219

இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:



## பரிசுக்குரிய கவிதை

### அரசியல்

'காது கடிப்பு'ம்
'காது குத்தலு'ம்
கடைசியில்-
தோல்வியில்தான்
முடியுமோ(?)!

எஸ். பிரபா-பதுளை.

### இ(க)டி வீரர்!

ஆளை-
இடித்து
பேர் வாங்கும்
வீரரும் உண்டு!
காதைக்
கடித்து
பேர் வாங்கும்....
வீரரும் உண்டு!

ஆமிஷான்-பதுளை.

### மத்தியஸ்தம்?

கடித்துக் குதறும்வரை,
காணாமல் இருந்துவிட்டு,
பரிதாபப் படுவதுதான்
மத்தியஸ்த இலட்சணமோ?
பாரினிலே தொடர்கதையோ?

நஸபியா பஹர்தீன்- கொத்தான்தீவு,
புத்தளம்.

### போனதே புகழ்!

கையால் கிடைத்தது கீர்த்தி
வாயால் வந்தது வசை
பொய்யாய் போனது புகழ்
மெய்யாய் இதுவே நிலை!

கிருஷ்ணபிள்ளை மூர்த்தி- மட்/மெதடிஸ்த
மத்திய கல்லூரி, மட்டக்களப்பு.

### நடுவர்கள் வாரீர்!

குத்துச் சண்டைக்கு நடுவர்கள்!
குண்டுச் சண்டைக்கு நடுவரில்லை!
காலில்லை கையில்லை தலையில்லை
ஒரு காதுக்காய் பல நாடு கண்டனமாம்!
ஓர் அணியாய் சேர்ந்திங்கு
ஒருமித்து குரல் கொடுத்து
போர் முனையை முடித்துவைப்பீர்!

அலாவுடீன் ஏ.எல்.ஏ.பாபு- குச்சவெளி
திருகோணமலை.

### மாற்றம்

முதலில்
மூட்டிவிட்டு
முறுவலிப்பர்!
முடிவில்
மூர்க்கமென்று
முகம் சுளிப்பர்!

இரா.இராமகிருஷ்ணன்-
பொகவந்தலாவ.

### புது முயற்சி

அடித்தடித்து அலுத்துவிட
கடித்தெடுத்து சா(வே)தனை!

செல்வி. நிஹாரா ஏ.முத்தலிப்-
ஜயந்தி மாவத்தை, அனுராதபுரம்.

### வேதனைகள்!

விளையாட்டு வேதனையானதங்கே
வேதனை விளையாட்டாகுதிங்கே!
அதர்ம வழி எங்குமே இல்லாதிருக்க
வேண்டுமே பலமான மத்தியஸ்தம்!

பெரியண்ணா- தவசிகுளம், வவுனியா.

### இனத்தைக் கடிப்பதா?

ஆட்டைக் கடித்து-பின்
மாட்டைக் கடித்து-தன்
இனத்தையே கடிக்கும் நிலை-இந்த
மனிதனுக்கு வந்ததெப்போ?

ச. மகாலிங்கம்- வெலிமடை குரூப், வெலிமடை.



### மோதல்

இங்கும் தினம் தினம்
இதுதான் நடக்கிறது!
மத்தியஸ்தர் மட்டும்
இங்கில்லையாதலால்,
இழக்கப்படுவதும்
காணாமல்போவதும்,
காதுமட்டுமல்ல...!

பூ. இதயரெத்தினம்- ஆரையம்பதி-03.

### யுத்தம்!

அங்கே
'மல்'யுத்தம்!
இங்கே
'ஷெல்'யுத்தம்!

ந. ரதீஸ்வரன்-
தம்பிலுவில்-02.

### திறமை

வல்லவனுக்கு
புல்லும் ஆயுதம்;
டைசனுக்கு
பல்லும் ஆயுதம்!

இரா. இராஜா-
நோத்கோ,
பொகவந்தலாவ.

# கவிதைப் போட்டி இல.222



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டை யில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 20.09.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.222
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

முரசம் தந்த 'கிரிக்கெட்டும், கால்பந்தாட்டமும்' தான் இம் முதல் மடலின் தூண்டல்.

தவறாது வாசிக்கும் பகுதிகளுள் முரசம் முக்கிய மானது. 'கிரிக்கெட்டும் கால்பந்தாட்டமும்' முத்தான கருத்துக்கள். ஆனால் சிந்தனை- சிந்திக்க வேண்டிய வர்களிடம் ஏற்படுமா? தமிழ்க் கட்சிகளே மூளைச் சலவை செய்யப்பட்ட நிலையில் சகோதரக் கட்சி களுக்கு என்ன கவலை? காலமறிந்து கூறப்பட்ட கருத்து- பாராட்டுக்கள்.

ச.சி.தேவி, ஹாவேலிய, நுவரெலிய.

இனிய முரசே!

உன்னை சில காலம் பிரிந்துவிட்டேன். உனை பார்க்காமல் நான் பட்ட வேதனை... அப்பப்பா... சந் தித்தேன்! என் ஆசை தீர புரட்டி புரட்டி ருசித்தேன்; நீ தரும் பூலான் தேவியின் தொடர்கதை, சிறு கதைகள், சினிமாப் பகுதி வெகு ஜோர்:

கே.பாக்கியராஜா, டோகா, கட்டார்.

## காலையில் கிடைக்காத "முரசு"

முரசு இங்கு வியாழன் மாலையில் அல்லது வெள்ளிக்கிழமைதான் கிடைக்கின்றது. சில வேளை களில் முரசை வாங்குவதற்காக அக்குறணையிலிருந்து கண்டிக்கு போக வர ஐந்தும் ஐந்தும் (5+5=10) பத்து ரூபா செலவழிக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு முரசின் அபிமானிகள் ஆளாகின்றனர். இதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறும், வியாழன் காலை முரசு கிடைக்க ஆவன செய்யுமாறும் முரசு அபிமானி கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

மொஹமட் பஸ்லான், மள்வானஹின்னை, அக்குறணை.

முரசாரே!

கனடா, கலைவாணி இராஜகுமாரனின் படைப் பான 'அக்கரையில் கரைபவர்கள்' என்னும் சிறுகதை இன்றைய புலம்பெயர்ந்த தமிழர்களின் உண்மை நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டியது. 'மாறியது நெஞ்சம்', 'காலமறியா காரியம்' ஆகிய கதைகளும் கருத்தாழம் மிகுந்தவையாக இருந்தன.

இரா.வினோத்குமார், அட்டன்.

## பூலானின் நிலை

மல்லாவின் மரணம் பூலானை மட்டுமல்ல எம்மையுமே துயரத்தில் ஆழ்த்தியது. மல்லா இறந்ததும் பூலானின் நிலையை பார்த்தீர்களா? 'வேட்டை நாய்க்கு எலும்பு கிடைத்தது' போலாயிற்று. காம வெறியர்களை சுட்டுப் பொசுக்க இன்னொரு மல்லா தோன்றமாட்டானா? என்று ஏங்குகின்றோம்.

கே.திலகா, பொதுபிடிய வீதி, இறக்குவானை.

## அதுதான் பரபரப்பு

அன்பான முரசுக்கு!

வடக்கு- கிழக்கில் குண்டுகளும், ஷெல்களும் குறி தவறுவது வாடிக்கை. குறி சரியாக அமைந்தால் அது தான் விதிவிலக்கு எனலாம். எத்தனையோ குடிமனைகள் சிதிலமாகிக் கிடக்கின்றன. எத்தனை எத்தனை உயிர்கள் மாண்டுபோயின. கிறிஸ்தவ தேவாலயம் மீது குண்டு விழுந்தால் சற்று அதிகமாகவே பரபரப்பு காட்டுவது ஏன்? வெளியுலகில் கண்டனங்கள் கிளம்பிவிடுமோ என்ற கவலையால்தானே! இல்லாவிட்டால் அதுபற்றியும் பொறுப்பில் உள்ளவர்கள் கவலைப்பட்டிருக்க மாட் டார்கள்.

செல்வி. சி.பிலோமினா, நீர்கொழும்பு.

## வீரப்பன் பரவாயில்லை

வீரப்பன் பேட்டி நன்றாக இருந்தது. அதிகாரவர்க் கத்தைப் பற்றி ஆழமாக புரிந்து வைத்திருக்கிறான். இலங்கைப் பிரச்சனையிலும் வீரப்பனுக்கு தெரியும் உண்மைகள் கூட இங்குள்ள தமிழ்க் கட்சிகளுக்கு தெரியவில்லையே. தீர்வுப் பொதி நாடகத்தில் தாங்களும் நடித்தால் போதும் என்று காலம் பூராவும் நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எம்.சோதீஸ்வரன், கற்குடா.

## படித்ததும்-பார்த்ததும்

இனிய முரசுக்கு!

இளவரசி டயானா, டோடி அல்ஃபயட் காதல் கதையை முரசில் படித்துவிட்டு மூடிவைத்ததும், இருவரும் விபத்தில் பலியான காட்சியை தொலைக் காட்சியில் காணநேர்ந்தது.

அரச குடும்ப பாரம்பரியங்கள், பகட்டுகள் என்பவற் றால் பாதிக்கப்பட்ட சாதாரண பெண்மணியின் மரணம் அரச குடும்பத்தினருக்கு ஒருவேளை மகிழ்ச்சியாய் இருக்கலாம். ஏனையோருக்கு சோகம்தான்.

வி.ஜெயராணி, கொழும்பு-10.

'லேடீஸ் ஸ்பெஷல்'-மெருகேறுகிறது. காத்திரமான தகவல்களை சிரத்தையுடன் தருகிறீர்கள். எனினும் பெண்களுக்கு நம்பிக்கையூட்டும் கருத்துக்களையும் தரவேண்டும். உளுத்துப்போன மரபுசார் எண்ணங்களையும் தோலுரித்துக் காட்டவேண்டும்.

ஏ.சுமதி, கந்தப்பளை.

## பரிவு தோன்றுமா?

வீரப்பன் விவகாரத்தின் பின்னணியில் உள்ள அரசியலை 'முரசு' இனம் காட்டியிருந்தது. எனக் கொரு கேள்வி- வீரப்பனை நியாயப்படுத்தி பேசுகின்ற கலைஞர், இலங்கைப் பிரச்சனையில் மட்டும் இருபக்க (இந்தியா-இலங்கைத் தமிழர்) சரி, பிழைகளை ஆராய்ந்து பேச மறுப்பது ஏன்? பலன் இருந்தால்தான் பரிவும் தோன்றுமா?

எம். ஆமிஷா, கல்முனை.

## நயமும் பயமும்

'வசையும் இன்பம்' இலக்கிய நயம் அருமை. கூடவே பயமும் வந்துவிட்டது. என் மனைவியும் இதுதான் சாட்டென்று என்னை திட்டித் தீர்த்துவிட்டால்...? மனைவியின் கண்ணில் படாமல் நான் முரசை ஒளித்துவைத்ததால் சிறிது நஷ்டமும் ஏற்பட்டது. 'முரசு' வாங்கவில்லை என்று நினைத்து தானும் ஒரு 'முரசு' வாங்கிவந்துவிட்டதால் வந்தது சிறு நஷ்டம். ம்... உமக்கு திருப்திதானே! ரசிகனுக்கு தர்ம அடி கொடுக்க வேண்டும்.

பூ.செல்வராசா, மட்டக்களப்பு.

பாம்புக்கு எவ்வளவுதான் பால் வார்த்தாலும், அதன் பிறவிக் குணத்தை அது காட்டத்தான் செய்யும் என்பதற்கு 'ஸ்ரீராம்' ஓர் உதாரணம். 'மல்லா' வளர்த்த பாம்பு அவனையே தீண்டி விட்டது. 'பூலான்' பாவம், பருந்தின் கையில் கோழிக்குஞ்சு போல் ஆகிவிட்டாளே! 'மல்லா'வின் புகைப்படத்தை பிரசுரித்த 'முரசு'க்கு என் இனிய வந்தனங்கள்!!!

ஏ.சீ.எம்.மஷ்ஹூர், தெஹிகஸ்தலாவை,
பலாங்கொடை.

தித்திக்கும் தேனமுதை அள்ளித்தரும் முரசுக்கு எனது வந்தனங்கள்!

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் நன்று. அதிலும் ராஜேஸ்குமார் தரும் 'உடைந்த இரவு', சிந்திக்க வைக்கும் 'சிந்தியாவின் பதில்', 'பூலான் தேவி' தொடர் அனைத்தும் வியப்பில் ஆழ்த்துகின்றன. சுவையான பல அம்சங்களை சுவைப்பட சுடச்சுட தரும் முரசுக்கென் வாழ்த்துக்கள்.

வி.காசிதேவன் சந்ரலதா, புலத்கொகுபிடிய.

# கிழக்கில்-தமிழ் முஸ்லிம் கலவரத்துக்கு தூபம்?
# பொதுமக்கள் மத்தியில் பலத்த சந்தேகம்!

கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே கலவரத்தை தூண்டிவிட சில சக்திகள் தூபம் போட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பில் கள்ளச் சாராயத்தால் ஏற்பட்ட அனர்த்தங்களின்போது விஷமத்தனமான வதந்தி ஒன்றை பரப்ப முயற்சிக்கப்பட்டதாம்.

முஸ்லிம்கள் சிலர்தான் சாராயத்திற்குள் விஷம் கலந்தனர் என்று கதை கட்டிவிட திட்டமிடப்பட்டது என்றும், மது பானசாலை உரிமையாளர்கள் செய்த கலப்படம்தான் அனர்த்தங்களுக்கு காரணம் என்று தெளிவாக தெரிந்தமையால் அந்த சதி முயற்சி கைகூடாமல் போய்விட்டது என்றும் கூறப்படுகிறது.

இதன்பின்னரே காத்தான்குடியில் முஸ்லிம் மீனவர்களது படகுகளை எரித்து விட்டு புலிகள்மீது பழிபோடும் முயற்சி செய்யப்பட்டதாம்.

நடைபெற்ற நாசகார வேலைக்கு புலிகள் காரணமல்ல என்று பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா உடனடியாக தெரிவித்திருந்தார். நாசவேலையில் ஈடுபட்டோர் காத்தான்குடி மீனவர்களுக்கும் முன்னர் பரிச்சயமானவர்களாக இருந்தமையால் புலிகள் காரணமல்ல வென்று உடனடியாக தெரியவந்துவிட்டது. இதனால் கலவரத்தை தூண்டும் முயற்சி பயனளிக்காமல் போய்விட்டது. இச் சம்பவத்தின்பின்னர் 'தமிழ் முஸ்லிம் நல்லுறவுக்கான அமைப்பு' என்ற பெயரில் காத்தான்குடியில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரி ஹர்த்தாலும் நடத்தப்பட்டது.

துண்டுப்பிரசுரத்தில் "காத்தான்குடியில் மீனவர்களின் படகுகளை தீயிட்டு அழித்தது ரெலோ இயக்கத்தினரே" என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது. "தமிழ், முஸ்லிம் மக்களின் நல்லுறவைச் சீர் குலைக்கும் வகையில் திட்டமிட்டு சுமத்தப்பட்ட நாச வேலையே இதுவாகும்" என்று பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பு நிறைந்த பகுதியான காத்தான்குடி பாலமுனைக் கடற்கரையில் இச் சம்பவம் நடைபெற்றிருப்பதால் நாச வேலையில் ஈடுபட்டவர்களுக்கு பின்பலமாக வேறொரு சாரார் இருந்துள்ளனர் என்று காத்தான்குடி மக்கள் சந்தேகிக்கின்றனர்.

# யாழ் குடாநாட்டில் சோதனை முகாம்கள் குறைப்பு!
## வன்னி நடவடிக்கைக்கு படை நகர்வு

வன்னியில் பருவ மழைக்காலம் தொடங்க முன்பாக 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கையை துரிதப்படுத்தும் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது.

புலிகளின் தாக்குதல்கள் காரணமாக ஜயசிக்குறுய் படையினர் மத்தியில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்பவும், படையினர் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

யாழ் குடாநாட்டில் இருந்தும் ஒரு தொகைப் படையினர் வன்னிக்கு நகர்த்தப்படுவதாக தெரிகிறது. இதன் காரணமாகவே யாழ்ப்பாணத்தில் வீதிச் சோதனை நிலைகள் பல வாபஸ் பெறப்பட்டுள்ளன என்று கருதப்படுகிறது.

யாழ் நகரில் உள்ள வின்சர் தியேட்டர் சந்தி, லைடன் சந்தி, ஜின்னா பள்ளி வாசல் சந்தி, சிறாம்பியடிச் சந்தி, நாவலர் சந்தி, ரெயில்வே கடவைச் சந்தி, கந்தர் மடம் சந்தி, முலவைச் சந்தி, இராசாவின் தோட்டம், ஸ்ரான்லி வீதிச் சந்தி,ஆஸ்பத்திரி வீதிச்சந்தி, கோவில் வீதிச் சந்தி ஆகியவற்றில் இருந்த காவலரண்கள் முற்றாக அகற்றப் பட்டுள்ளன.

வேறு சில காவலரண்களில் முள் கம்பிகள் அகற்றப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக மின் கம்பிகள் போடப்பட்டு வருகின்றன.

வீதித் தடையாகப் போடப்பட்ட பனைக் குற்றிகளும் அகற்றப்பட்டு வருகின்றன. யாழ் வைத்தியசாலை ஊழியர்கள் சிரமம் இன்றிச் செல்வதற்கு தனியான பாதை ஒன்றும் கன்னாதிட்டிச் சந்தியில் படையினரால் திறக்கப்பட்டுள்ளது.

### புலிகள் ஊடுருவல்

படையினர் யாழ் குடாநாட்டில் இருந்து வன்னிக்கு நகர்த்தப்படும் முயற்சியை முறியடிக்க புலிகளின் அணிகள் யாழ் குடாநாட்டில் தமது நடவடிக்கைகளை தீவிரமாக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் வடமராட்சிப் பகுதியில் புலிகளின் அணிகள் அதிகளவில் ஊடுருவியுள்ளதாக படை வட்டாரங்களுக்கு தகவல் எட்டியுள்ளதாம்.

இதனையடுத்து தீவிர தேடுதல்,சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் வடமராட்சிப் பகுதியில் படையினரால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை 05.09.97 அன்று வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடற்படையினர் போர் நிறுத்தத்தைமீறி கடற்புலிப் படகுகள்மீது தாக்குதல் நடத்தினர் என்றும், தமது பதில் தாக்குதலில் இரண்டு டோராப்படகுகள் சேதம் அடைந்தன என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

### கப்பல் தாக்குதல்

09.09.97 அன்று சீனாவுக்கு சொந்தமான கப்பல் ஒன்று கடற்புலிகளால் தாக்கப்பட்டது. திருமலை-புல்மோட்டையிலிருந்து இல்மனைட் இராசாயனப் பொருளை ஏற்றிச் செல்லும்போதே தாக்குதல் நடந்தது. தமிழ் பிரதேச வளங்கள் அபகரித்துச் செல்லப்படுவதாக முன்னர் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இத் தாக்குதல் தொடர்பான பின்னணி விபரங்களை உடனடியாக அறிய முடியவில்லை. அவை பற்றிய விபரங்கள் அடுத்த வார முரசில் தரப்படும்.

# காத்தான்குடியில் படகுகள் எரிப்பு!
## அடையாளம் காட்ட மக்கள் தயார்!

மட்டக்களப்பு காத்தான்குடியில் கடந்த 04.09.97 அன்று நள்ளிரவு 64 மீன்பிடி வள்ளங்களும், தோணிகளும் அவற்றின் உபகரணங்களுடனும் வலைகளுடனும் சேர்த்து எரிக்கப்பட்டன. நாசமாக்கப்பட்ட இந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 70இலட்சம் இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

காத்தான்குடி 'நதியா' கடற்கரையிலும் அதிலிருந்து 2 1/2 மைல்கள் தூரமுள்ள பாலமுனைக் கடற்கரையிலுமே இந்த நாசகாரச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சம்பவதினம் இரவு இந்த இடங்களுக்குச் சென்ற ஆயுததாரிகள் காத்தான்குடி நதியா கடற்கரையில் கடலுக்குச் செல்ல ஆயத்தமாக இருந்த 4 மீனவர்களையும், பாலமுனையில் 9 பேரையும் அழைத்துச் சென்று தாக்கி அவர்களைப் பற்றைகளுக்குள் படுக்கச் செய்துவிட்டே மேற்படி வள்ளங்கள், தோணிகள், வலைகள், உபகரணங்களுக்குத் தீவைத்ததாகக் கூறப்படுகிறது.

சம்பவத்திற்கு முதல் நாள் இதே பகுதிகளுக்கு வந்த ரெலோ இயக்கத்தினர் மீனவர்களிடம் மீன் மற்றும் உதவிகள் கேட்டு தர்க்கம் செய்து எச்சரித்திருக்கின்றனர். "புலிகளுக்கு நீங்கள் வழங்கும் நிதி உதவிகளை நாம் அறியாதவர்களல்ல. நாம் நினைத்தால் எதற்கும் ஒரு முடிவு கட்டுவோம்" என்ற தோரணையில் எச்சரித்து விட்டுச் சென்றனராம்.

வெள்ளிக்கிழமையில் பெரும்பாலும் முஸ்லிம் மீனவர்கள் கடலுக்குச் செல்வதில்லை என்பதும் அன்று மீன்பிடித் தோணிகளும் வள்ளங்களும் கடற்கரையிலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என்பதையும் தெரிந்து கொண்டு இந்த சந்தர்ப்பத்தையும் சாதகமாகப் பயன்படுத்தியே தீவைக்கப்பட்டிருக்கிறது.

ஆரையம்பதியிலுள்ள விஷேட அதிரடிப் படையினருடன் இணைந்து நீண்ட காலமாக ரெலோ இயக்கத்தினர் செயற்பட்டு வருகின்றனர். அப்பகுதயில் இரவு பகலாக நடமாடுபவர்கள் ரேலோ இயக்கத்தவர்களே. தமக்கு நன்கு பரிச்சயமான முகங்களே தீவைப்பு நடத்தியதாகவும் மீனவர்கள் கூறுகிறார்கள். நீதியான, தமக்குப் பாதுகாப்பான விசாரணை ஒன்றுவரும் பட்சத்தில் தாங்கள் ஆளடையாளம் காட்டத் தயாராய் இருப்பதாகவும் மீனவர்கள் கூறுகிறார்கள்.

சம்பவம் நடைபெற்ற பின்னர் அப் பகுதியிலுள்ள விஷேட அதிரடிப்படையினரோ பொலிசாரோ இச் சம்பவத்திற்குப் பெரிய முக்கியத்துவமளிக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. பாலமுனை மக்களுக்கு இன்னமும் பாதுகாப்பளிக்கப்படவில்லையென்றும் கூறப்படுகிறது.

தீவைப்பு இடம்பெற்ற அன்றைய பொழுது காத்தான்குடி, பாலமுனை மீனவர்களுக்கு சோகமாகக் கழிந்தன. பல வறிய மீனவர்கள் ஓலமிட்டு அழுதார்கள்.

நடந்த சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 06.09.97 அன்று மட்டக்களப்பு, காத்தான்குடிப் பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதோடு, ஜனாதிபதிக்கும் நடந்த சம்பவங்களை விளக்கும் துண்டுப் பிரசுர பிரதியும் அனுப்பிவைக்கப் பட்டது.

# தாக்குதல்கள் மேலும் விரிவாக்கப்படும்!
## மக்களை விலகியிருக்குமாறு அறிவித்தல்

படைமுகாம்கள், ஏனைய இயக்க முகாம்கள் ஆகியவற்றின் அருகிலுள்ள மக்கள் அங்கிருந்து விலகியிருக்குமாறு புலிகள் அறிவித்தல் வெளியிட்டுள்ளனர். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட புலிகள் இயக்க அரசியற் துறையினரால் வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்தில் மேற்கண்ட அறிவித்தல் கொடுக்கப் பட்டுள்ளது.

அப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது; எமது பேராளிகளின் மன உறுதியாலும், அவர்கள் சிந்திய செங்குருதியாலும் தமிழீழத் தேசம் படிப்படியாக விடுதலை பெற்றுவருகிறது. இவ்வேளையில் எமது தாக்குதல்களை மேலும் விரிவுபடுத்துவதற்கு நாம் பல திட்டங்களை வகுத்துள்ளோம்.

அதற்கமைய அண்மைக் காலங்களில் மட்டு-அம்பாறை மாவட்டத்திலுள்ள படையினரின் பல முகாம்கள் எமது எறிகணை வீச்சுக்கு இலக்காகின. இப்படியான தாக்குதல்களில் எமது மக்களாகிய நீங்கள் சிறிதும் பாதிக்கப்படக்கூடாது என்பதை சிரமேற் கொண்டுள்ளோம்.

எனவே உங்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவம், மற்றும் விசேட அதிரடிப்படை, பொலிஸ்படை மற்றும் ஏனைய இயக்க முகாம்களுக்கு பக்கங்களில் உள்ள வீடுகளில் விசிப்பதை தவிர்த்து கொள்ளுமாறும், அவற்றில் இருந்து 500 மீட்டர் தூரத்துக்கு அப்பால் நகர்ந்து செல்லுமாறும் வேண்டுகிறோம்" என்று புலிகள் தமது அறிவித்தலில் தெரிவித்துள்ளனர்.

# ஓட்டவீராங்கனை சுசந்திகா
## இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்

கடந்த ஆகஸ்ட் 29ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இராணுவத்தினரின் பெருவிழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் கலந்துகொள்ள பிரமுகர்கள் 1500 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். இந்தப் பட்டியலில் தடகள விளையாட்டில் வெள்ளிப்பதக்கம் வென்றவரான சுசந்திகா ஜயசிங்காவின் பெயரும் இடம்பெற்றிருந்தது.

இராணுவம் தொடர்பான விழாவல்லவா? அழைக்கப்பட்ட விருந்தினர்களின் பட்டியல் பலமுறை- பல அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டபோது சுசந்திகாவின் பெயரைக் கண்டதும் இராணுவ அதிகாரிகளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் பட்டியலில் சுசந்திகா ஜயசிங்கவின் பெயரும் இருக்கக் காணப்பட்டது.

தப்பி ஓடியவர்களுக்கு பொது மன்னிப்பளிக்கப்படும் என்று அறிவித்தும் பெரும்பாலானோர் திரும்பவில்லை. இதனால் அவர்களைத் தேடிப்பிடித்து 'கோட்மார்ஷல்' (இராணுவமுறை விசாரணை) நடத்தித் தண்டனை வழங்கல் முறை நடத்துவதற்கான முயற்சிகள் நாடெங்கும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இவ்வேளையில், இந்தப்பட்டியலில் இடம்பெற்ற ஒரு நபருக்கு இராணுவ விழா ஒன்றில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது: அதிகாரிகள் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும்போது, மற்றுமொரு இராணுவ அதிகாரி ஒரு உபயோகமான கருத்தை வழங்கினார். சுசந்திகாவை 'இவருடைய சேவை மேற்கொண்டு தேவைப் படாது' என்ற பட்டியலில் சேர்த்து விடலாம் என்றாராம்.

எது எவ்வாறாயினும் சுசந்திகா இந்த விழாவில் தலை காட்டவில்லை. இத்தகவலை சண்டே ரைம்ஸ் வெளியிட்டுள்ளது.

# இதய அஞ்சலி



உருவம் குள்ளம்- உள்ளம் உயரம்
தொண்டின் சிகரம்- தூய்மையின் வடிவம்
உடையும் வெள்ளை-உள்ளம் அதனிலும் வெள்ளை
உலகில் சிறந்த பெண்மணி நீயே
உயிரின் உயிராய் ஆனாய் தாயே!
சென்று வா அம்மா! உன் நினைவுகள் வாழும்!
சிகரமே உனக்கு முரசின் அஞ்சலி.

# கலப்பட மது வியாபாரம்
## விசாரணைகளை திசை திருப்ப முயற்சியா?

மட்டக்களப்பில் மதுபானத்தில் செய்யப்பட்ட கலப்படத்தால் பலியானோர் தொகை 59 ஆக அதிகரித்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் மருத்துவமனைக்கு கொண்டுவரப்படாமலேயே மரணமானோர் தொகையும் அதிகம் என்று தகவல் கூறுகின்றன. பிந்திக் கிடைத்த தகவல் ஒன்றின்படி மொத்தமாக பலியானோர் தொகை நூறைத் தாண்டியுள்ளது என்று தெரிகிறது.

மது அருந்தியதால் ஏற்பட்ட மரணம் என்று சொல்ல வெட்கப்பட்டு மாரடைப்பால் மரணம் என்றும், வேறு காரணங்களும் கூறப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளன. இதேவேளை இயற்கையாக மரணமடைந்த சிலரையும் மதுபானம் அருந்தியதால் மரணமானதாக கதைகள் பரவியிருந்தன.

இதற்கிடையே மட்டக்களப்பில் மதுபான கலப்படம் காரணமாக பாரிய மனித உயிரிழப்புக்களும், பாதிப்புக்களும் ஏற்பட்டும்கூட விசேட விசாரணை எதனையும் அரசாங்கம் முடுக்கிவிடாதது குறித்து அதிருப்தி நிலவுகிறது.

### அலட்சியப் போக்கு

மருத்துவமனையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டோர் தொடர்பாக வைத்திய அதிகாரிகள் சிலர் அலட்சியமாக நடந்து கொண்டுள்ளனர். விபரீதத்தை உடன் உணர்ந்து மாவட்ட வைத்தியசாலைகள் அனைத்துக்கும் மாற்று மருந்து தொடர்பான அறிவித்தலை வழங்க மாவட்ட வைத்திய அதிகாரி துரிதமாக செயற்பட்டாரா என்றும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பொது மருத்துவமனையில் தாதிகளும், ஊழியர்களும் தம் கைப் பணத்தைப் போட்டு லெமன் ஜின் வாங்கி மாற்று மருந்தாக கொடுத்து பலரை காப்பாற்றினார்கள் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பிட்ட மருத்துவ மனை பொறுப்பதிகாரியின் மந்தமான செயற்பாட்டால் அதிருப்தி அடைந்தே அவ்வாறு செய்தனராம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனுமதி பெறப்பட்ட 24 மதுச்சாலைகள் உள்ளன. 10ற்கு மேற்பட்ட மதுச்சாலைகள் கள்ளத்தனமாக இயங்கிவருகின்றன. அனுமதி பெறப்பட்ட மதுச்சாலைகள் முதல் கள்ளத்தனமாக இயங்கும் மதுச்சாலைகள் வரை கலப்பட சாராயம் நீண்டகாலமாக விற்பனை செய்யப் பட்டு வந்துள்ளதாம்.

கலால் திணைக்கள அதிகாரிகள் பலர் தாங்கள் பெறவேண்டியதைப் பெற்றுக் கொண்டு, கலப்பட சாராய வியாபாரத்திற்கு உறுதுணையாக இருந்துள்ளனராம். இந்த விடயத்தில் மட்டக்களப்பில் உள்ள கலால் திணைக்கள அதிகாரி ஒருவரின் பெயரும் பிரபலமாக அடிபடுகிறது.

### திசை திருப்பலா?

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் இரண்டுபேர் மதுபான சாலை ஊழியர்கள். ஏனையோர் மதுபான சாலை ஊழியர்கள். கைது செய்யப்பட்டுள்ள உரிமையாளர்களில் ஒருவர் ராமகிருஷ்ணன். இவர் பல மதுபானசாலைகளை அனுமதிப்பத்திரம் இல்லாமலேயே நடத்தி வந்திருக்கிறார்.

தற்போது நடைபெறும் விசாரணைகளை திசை திருப்ப உள் முயற்சிகள் சில நடப்பதாகவும், மதுபான சாலை உரிமையாளர்களிடம் இலஞ்சமாக மாத வருமானம் பெற்ற தரப்பினர் அதற்கு உதவுவதாகவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

"தென்னிலங்கையில் இவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால் பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பர். விசாரணைக் கமிஷன்களும் அமைக்கப்பட்டிருக்கும். மட்டக்களப்பில் நடந்ததால்தான் மந்தகதியில் காரியங்கள் நடக்கிறதோ?" என்று பொது மக்கள் அதிருப்பதி தெரிவிக்கின்றனர். கலால் திணைக்கள அதிகாரிகள்மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்தும் அதிருப்தி நிலவுகிறது.

விசாரணை கோரியதுடன் மட்டக்களப்பு பா.உ.க்களும் ஒதுங்கிக்கொண்டுவிட்டனரே என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

# போர் பிரதேசங்களுக்கு பொலிசார்
## இடமாற்ற உத்தரவுகள் பறக்கின்றன

கொழும்பு மாநகரிலுள்ள பொலிஸ் தலைமை நிலையம் மற்றும் சுற்று வட்டாரங்களிலுள்ள நிலையங்கள் ஆகியவற்றில் இதுவரை பணிபுரிந்து வந்த பொலிஸ் அதிகாரிகளை வெவ்வேறு வெளி இடங்களில் பணிபுரிவதற்கு பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.எஸ். ராஜகுரு, இடமாற்றம் செய்துள்ளார். ஜயசிக்குறுய் நடவடிக்கையின்போது விடுவிக்கப்பட்ட வன்னிப் பிரதேசங்களில் கடமையை ஏற்கவும் இவர்களில் சிலர் அனுப்பப்படுகின்றனர்.

செப்டம்பர் 20ம் திகதி முதல் இவ்விடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது. மொத்தம் 70 அதிகாரிகள் இவ்வாறு இடமாற்றம் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையிலும் பலாலியிலும் இதுவரை காலமும் தற்காலிய தலைமை நிலைய இன்ஸ்பெக்டர்களாகக் கடமை புரிந்தவர்கள் இப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

போர்ச் சுவடே தெரியாத பாதுகாப்பான பிரதேசங்களில் இதுவரை கடமையாற்றிவந்த ஆயிரக் கணக்கான பொலிஸ்காரர்கள் யுத்தப் பிரதேசங்களுக்கும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் விரைவில் இடமாற்றம் செய்யப்படவிருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

# புதைத்த நகையை மீட்டனர்
## 51வது படையணி உதவி

யாழ் குடாநாட்டில் இருந்து ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெயர்ந்த தமிழர் ஒருவர் மீண்டும் தன் வீட்டுக்குச் சென்றார். வீடு இராணுவ முகமாக மாறியிருந்தது. 51வது படையணி இராணுவத்தினர் அங்கு நிலை கொண்டிருந்தனர்.

அவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்த வீட்டு வளவுக்குள் நகைகளையும், பணத்தையும் புதைத்து வைத்துவிட்டுத்தான் இடம் பெயர்ந்து போயிருந்தாராம்.

எப்படியோ 51வது படையணி தளபதியிடம் விஷயத்தை தெரிவித்துவிட்டார். படையணித் தளபதியும், படையினரும் முன்வந்து புதைத்ததை மீட்க உதவினார்களாம்.

என்னே ஆச்சரியம் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான 50 பவுண் நகையும், ஒன்றரை இலட்சம் ரூபாய் பணமும் மூன்று குழிகளில் அப்படியே இருந்தனவாம். நகைகளை போத்தல் ஒன்றில் போட்டும், பண நோட்டுக்களை பெரிய பிளாஸ்ரிக் போத்தலில் போட்டு பொலித்தீன் பையால் சுற்றியும் புதைத்து வைத்திருந்தாராம்.

# சிறுமிமீது பாலியல் வல்லுறவு

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் உள்ள கதிரிப்பாய் என்ற இடத்தில் ஆண்டு ஒன்றில் கல்விபயிலும் ஆறுவயதுச் சிறுமி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக செய்தி வெளியாகியிருந்தது.

இச்சிறுமி பாடசாலைக்கு சென்று கொண்டிருந்தபோது சோதனைச் சாவடியில் இருந்த சிப்பாய் ஒருவரால் இழுத்துச் செல்லப்பட்டதாகவும், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் பெற்றோரால் முறையிடப்பட்டது. இதனையடுத்து இராணுவ உயரதிகாரி பிறப்பித்த உத்தரவின் பிரகாரம் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சிறுமியை பரிசோதித்த சட்ட வைத்திய அதிகாரி அச் சிறுமிக்கு உடல் ரீதியான பாதிப்பு எதுவும் இல்லை என்று உறுதிப்படுத்தியுள்ளாராம். பெற்றோரும் அதனை ஏற்றுள்ளனராம்.

# படையினர் வாபஸ்

மட்டக்களப்பு- புளியந்தீவுப்பகுதியில் இரு இடங்களில் நிலைகொண்டிருந்த படையினர் கடந்த 07.09.97 அன்று விலகிக் கொண்டுள்ளார்கள். ஏரிக்கரை வீதி, கோவிந்தன் வீதிச் சந்தியில் உள்ள வீடொன்றில் இருந்த படையினர் விலகிக் கொண்டதும் உடனடியாக அங்கு 'புளொட்' இயக்கத்தினர் முகாமிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பொதுநூலகக் கட்டடத்தின் ஒரு பகுதியில் முகாமிட்டிருந்த படையினரும் இதே தினம் அங்கிருந்து அகன்று விட்டனர்.


# தமிழரால் எழுதப்பட்ட தனிச் சிங்களக் கடிதம்

## தவறான முறை – பிழையான விபரங்கள்

(திருமலை நிருபர்)

இங்கே காணப்படும் தனிச்சிங்களக் கடிதம் வடக்கு- கிழக்கு மாகாண திணைக்களத் தலைவரொருவரால் அவரது உத்தியோகத்தரான ஒரு தமிழருக்கு எழுதப் பட்டது.

வடக்கு- கிழக்கு மாகாண நீர்வழங்கல் சமுகமளிக்கும்படி இக்கடிதமூலம் மட்டக் களப்பு நீர் வழங்கற் சபை உத்தியோகத்தர் கோரப்பட்டிருக்கிறார். நீதிமன்றுக்கு சமுக மளிக்க வேண்டிய திகதி 25.08.97. ஆனால் கடிதத்தில் 29.08.97 எனக் குறிப்பிட்டபடியால் அவ்வுத்தியோகத்தர் கடிதத்தின் பிரகாரம் சமுகமளித்தபோது பெரும் சிக்கலை எதிர்



ජාතික ජලසම්පාදන හා ජලාපවහන මණ්ඩලය,

මඩකලපුව.

අංක:43/2902 දරණ ජලබිලපතය සම්බන්ධයෙන් පැවැත්වෙන

නඩුවට පෙනී සිටින ලෙස දැන්වීම

මෙම ... 13165/97 ...

සභායක සාමාන්‍යාධිකාරී (උ.නැ),

ත්‍රිකුණාමලය

சபையின் பிரதி பொது முகாமையாளர் ஒரு தமிழர். அவரால் எழுதப்பட்ட கடிதத்தில் மருந்துக்குக்கூட தமிழ் கிடையாது. அது மட்டுமல்ல, கடிதமும் பிழையான விபரங்களையே கொண்டுள்ளது.

சபை சார்ந்த வழக்கு ஒன்றுக்குச் நோக்க வேண்டி ஏற்பட்டது. தனது செலவில் வழக்கறிஞரை ஏற்பாடு செய்து நீதிமன்றில் தெரிவாகி நிலைமையை விளக்க வேண்டிய தாயிற்று.

தமிழனே தமிழை அமுல் படுத்தத் தடையாக இருக்கும் போது, அரசாங்கத்தை நொந்து என்ன பயன்? அதிகாரப் பகிர்வுத் திட்டம் பற்றி விவாதித்து என்ன லாபம்? முதலில் அடிமைப்புத்தி விலக வேண்டும்!

# உயரதிகாரி செய்த மோசடி!

## சம்பளப் பணம் சுருட்டல்

வடக்கு-கிழக்கு மாகாண கணக்காய்வாளர் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தனது நியமனத் திகதியில் மாற்றம் செய்து பெருந்தொகையான பணத்தைச் சம்பளம் என்ற பெயரில் மோசடி செய்த சம்பவம் ஒன்று கசியத் தொடங்கியுள்ளது.

22.03.90ல் தனது 57வது வயதில் கொழும்பு கணக்காளர் நாயகம் அலுவலகத்திலிருந்து ஓய்வு பெற்ற இவ்வதிகாரி மாகாண கணக்காய்வாளர் திணைக்களத்தில் 1.4.90ல் மீள் வேலை வாய்ப்புப் பெற்றுக் கொண்டார்.

எனினும் இடைமுறிவுகளின்றிப் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு சம்பள ஏற்றம் வழங்க அரசு முன் வந்த சுற்றறிக்கையொன்றுக்கமைய சம்பள ஏற்றங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, தனது மீள் நியமனத் திகதியை 23.03.90 என மாற்றி வசதிகளை அனுபவித்துள்ளார்.

அது மட்டுமன்றி சுற்றறிக்கை 2/97ன் பிரகாரம் புதிய சம்பள அதிகரிப்புகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அச் சுற்றறிக்கையின் 20:1 பிரிவுக்கமைய, ஏற்கனவே மாற்றம் செய்யப்பட்ட மீள் நியமனத்திகதி சாதகமாக அமையவே, அதிகரித்த புதிய சம்பளங்களையும் பெற்று வருகிறார்.

இதன் மூலம் இவர் பல்லாயிரக் கணக்கான ரூபாய் மோசடியில் ஈடுபட்டமை சந்தேகமறக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த மோசடிகள் தலைமைச் செயலாளருக்கும் அண்மையில்தான் தெரிய வந்துள்ளது.

தனது மோசடிகளுக்குச் சார்பாகப் பிழையான தரவுகளைக் கொடுத்து கௌரவ ஆளுநரின் கையொப்பமும் பிழையான வழியில் பெறப்பட்டுள்ளது தான் வேடிக்கையான சங்கதி. புதிய சம்பள அதிகரிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக 24.03.1997 திகதியிட்ட பி.ஏ/01/001 கடித மூலம் ஆளுநரின் அனுமதியை அலுவலக நடைமுறைகளுக்கு மாறாக இவர் பெற்றுள்ளார்.

ஏனைய ஊழியர்கள் மோசடி செய்யக்கூடாது என்பதில் அக்கறையுள்ள திணைக்களத்தின் தலைமை அதிகாரி, மோசடி செய்வதைத் தொழிலாகவும் உத்தியோகக் கடமைகளைப் பொழுது போக்காகவும் கொண்டுள்ளாரோ என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

பீடிகளுக்கும் ஊது வத்திக்கும் வித்தியாசம் தெரியாத சமூகத்தில் என்னதான் செய்யத் தோன்றாது?

# முறையற்ற இடமாற்றங்கள்

பலாங்கொடை கல்வி வலயத்திற்குட்பட்ட நான்கு தமிழ்ப்பாடசாலைகளில் கடமையாற்றி வந்த நான்கு விஞ்ஞான, கணித, வர்த்தக, ஆங்கில ஆசிரியர்கள் அப்பகுதியிலுள்ள பிரபல முஸ்லிம் பாடசாலையொன்றுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளனர். இதனால் இப் பாடசாலைகளில் கல்வி கற்று வந்த மாணவர்கள் நிர்க்கதியடைந்துள்ளனர் என இ.தொ.கா. துணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.ஏ.எம்.டீ.ராஜன் கடந்த இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் கவலை தெரிவித்தார். இந்த இட மாற்றங்கள் அப்பாடசாலைகளின் நிர்வாகங்களிடம் வினவாது பின் கதவால் செய்யப்பட்டுள்ளன. இடமாற்றங்கள் செய்வதற்கு சில ஒழுங்கு முறைகள் இருக்கும்போது இவ்வாறு முறையற்ற விதத்தில் செய்யப்படும் இட மாற்றங்களால் மலையகப் பாடசாலைகள் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

# வைத்தியரை இடமாற்றுங்கள்!

(காரைதீவு நிருபர்)

"காரைதீவு பொது வைத்தியசாலையில் ஒரு வைத்திய அதிகாரி (M.O) இருந்தும் இரவு வேளைகளில் வைத்தியம் பெற முடியாமலுள்ளது. நோயாளிகளுடன் கடிந்து பேசி நோயைக் கூட்டுகிறார். வெளிநோயாளர் பிரிவு நேரகாலமற்று பூட்டப்படுகிறது. இவர் பொறுப்பேற்ற காலம் தொடக்கம் சீரான வைத்தியம் இல்லை. இவரை இட மாற்றுங்கள்"

இவ்வாறு காரைதீவு பொதுமக்கள் சார்பாக க.சின்னத்தம்பி என்பவர், ஈ.பி.டி.பி. செயலதிபர், மாகாண- பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர், அபிவிருத்திக்குழு, பிரதேச செயலர் ஆகியோருக்கு பதிவுத் தபால் அனுப்பிவைத்துள்ளார்.

இப்படி ஏகப்பட்ட முறைப்பாடுகள் பிரஸ்தாப பெண் வைத்தியருக்கெதிராக கிடைக்கப் பெற்றுள்ளதாக பிரதேச செயலாளர் எஸ்.இராமகிருஷ்ணன் தெரிவிக்கிறார்.

விரைவில் அங்குள்ள ஏனைய ஆஸ்பத்திரி ஊழியர்கள் மறியல் போராட்டமொன்றையும் செய்யவுள்ளனராம். "மரியாதைக் குறைவாக பேசும் இவரது சேவை தேவையில்லை!" என பல பொதுமக்கள் நச்சரிக்கின்றனர்.

# படை கேட்கும் கிடுகுமட்டை

குருமண்வெளியில் உள்ள விஷேட அதிரடிப்படை முகாமில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் குருமண்வெளி, மகிழூர், எருவில், கோடைமேடு ஆகிய கிராமங்களில் உள்ள 15 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களிடம் கையொப்பம் வாங்குவது வழக்கம்.

23.8.97, 24.8.97 ஆகிய இரு தினங்களும் இளைஞர்கள் கிடுகுமட்டையுடன் வரிசை வரிசையாக முகாமிற்கு செல்வதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. கிடுகு மட்டை இல்லாதவர்கள் திருப்பி அனுப்பப் பட்டனர். அவர்கள் ஒரு மட்டைக்கு 7/- ரூபாய் கொடுத்து கிடுகு வாங்கி சென்றனர்.

இச்செயல் என்ன விதத்தில் நியாயம்? ஏழைகளாகிய எங்களிற்கு கிடுகுமட்டை வழங்க வேண்டிய அரசே எங்களிடம் இருந்து கிடுகுமட்டை வாங்குவது சரியா?

குருவூரான்.

விளம்பரப் பகுதி


**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும்
தொலைபேசி மூலம் தொடர்பு
கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218

**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் நிறைவேறாத
பிரச்சனைகளுக்குத் தீர்வு
கண்டு எதிர்கால வாழ்வில்
மகிழ்ச்சியும். வெற்றியும்
பெறுவதற்கு மட்டக்களப்பு
மாந்திரீக சக்தி உதவி
புரியும். பரம்பரை வைத்திய
நிபுணர் டாக்டர் 'குட்டி'
அவர்களுடன் விபரங்களுடன்
தொடர்பு கொள்ளுங்கள்.
இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,
NINTAVUR-21
SRI LANKA.

**மலையாள மாந்திரீகம்**

உலக மாந்திரீக சக்கரவர்த்தி
பி.கே.சாமி J.D.G.A.N.& JP
ஸ்ரீதுர்க்கா தேவி மாந்திரீக
உச்சாட பீடம்
இல.162, கொட்டாஞ்சேனைவீதி,
மே.பீல்ட் றோட், கொழும்பு-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு
கொள்ள வேண்டிய இலக்கங்கள்:
FAX-00941342464
TEL-00941431137
உள் நாட்டவர்கள் தொடர்பு கொள்ள
வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
342463, 344831

**UNION**
யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night
Latch & Sliding Locks,
(English Origin)
**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

**STUDY HOTEL MANAGEMENT IN SWITZERLAND**

Applications are invited from Sri Lankans for 2 1/2 year Diploma Course in Hotel Management offered by the Swiss Hotel Management School, Switzerland.

Eligibility: G.C.E (O/L) and above, age over eighteen and a good knowledge of English.

Each academic year consists of five months classroom study and seven months practical training. During practical training the students are paid a stipend of SFR. 2,000 to 2,500 per month and can save at least SFR. 10,000.

**Students can apply scholarship for SFR. 10,000.** Students and parents are invited to meet the Sri Lankan Representative of the Swiss Hotel Management School at the following address personally from 13th Sept. 97 onwards, during office hours for an interview, discussion and information regarding school fees, system of payment etc. **Enrolment forms are issued only to students who are successful at the interview.**

**DALUWATTA & JAFFE ASSOCIATES,**
LG 15, People's Park, Pettah,
Colombo-11.
Tel: 320139
(Behind Gunasinghepura Private Bus Stand)

**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr. P. ஆறுமுகம் அவர்களை
கல்முனை செப்டம்பர் 13, 14 15, 16
T. M. M. பாமசியிலும் T.P. 065-29329
செப்டம்பர் 20 முதல் 30 வரை
கொழும்பில் Dr. P. Arumugam, Ahamed Tourist inn. Bang Building No:10, Reclamation Road, (Entrance Bankshall St., Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101.
கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யலாம்


**31வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



**சுந்தரம் லோகேஸ்வரன் (சண்முகம்)**
அவர்கள் (யாழ்.ஆறுகால்மடம்-கொக்குவில்)

ஜனனம்-19.09.1932-யாழ்ப்பாணம்
மரணம்-02.08.1997- சூரிச்,சுவிஸ்

விருட்சம் வீழ்ந்தது!
விழுதுகள் இங்கே
வேதனையில் அழுதிட
கிளைபரப்பி, விழுதிறக்கி
நிழல் தந்த விருட்சமே!
உங்கள் ஞாபக வேர்களில்
புதுத்தளிர் எறிந்து
நீங்களாய் முளைப்போம்!
உங்களை மறக்கோம்.

தகவல்:-பரன்(பரந்தாமன்),
கஜன் (கஜேந்திரன்-கஜன் வீடியோ விசன்-சூரிச்), லோகன் (லோகராஜா)
தொடர்புகளுக்கு:-

*உங்கள் இழப்பின் துயரத்தில்....*
*மனைவி, மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.*

KOLBENACHER STR-14, 8052 ZURICH, SWISS-077-662234-089.411,90,39- 01-3013752

எம் தந்தையின் இழப்புச் செய்தியறிந்து நேரடியாகவும் தொலைபேசி மூலமும், தொலைச்செய்தி மூலமும் அனுதாபம் தெரிவித்துக்கொண்ட உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் நெஞ்சத்தால் நன்றிகள்.


**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

**தொழில் வாய்ப்புக்கள் நிறைந்த கம்ப்யூட்டர் பயிற்சி நெறி**

தேசிய (NCCA, NIBM) சர்வதேச (ACS, IDPM) கம்பியூட்டர் பயிற்சி நெறிகளுக்கு இது ஓர் முன்பள்ளியாகும்.
மொழி மூலம் : தமிழ், ஆங்கிலம்.



**Certificate In Computer Studies**
காலம் : 3 மாதம் கட்டணம் : 1950.00
விண்ணப்ப முடிவு திகதி : 15-09-1997.

**Certificate In Typesetting**
காலம் : 3 மாதம் கட்டணம் : 4000.00

**Internet & E-Mail Training Course**
காலம் : 1 மாதம் கட்டணம் : 950.00

**எமது ஏனைய சேவைகள் :-**
- தவணைக் கட்டண வசதிகள் உள்ளன.
- கம்பியூட்டர் விற்பனை, பராமறித்தல், பழுது பார்த்தல்.

தரமான சேவை தயவான கட்டணம்

**MICS** 36, Second Cross Street, Puttalam.
☎ 032 - 65370. E-Mail : Infak@slt.lk

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# போர் முனையில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர்
# திரைமறைவில் தொடரும் உதவிகள்

நாரதர்

அமெரிக்க வெளியுறவுத் துறையின் தெற்காசிய உதவிச் செயலாளர் சார்ல் இன்டர் பெர்ட் மற்றும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பணிப்பாளர் ஸ்டீல் மான் ஆகியோர் இலங்கைக்கு திக் விஜயம் செய்துள்ளனர்.

**வன்னியில் 'ஜயசிக்குறுய்' படையினர் வசம் உள்ள பகுதிகளுக்கும் ஓமந்தைவரை சென்று அங்குள்ள நிலவரங்களை நன்கு கண்டு வந்துள்ளனர்.**

போர்முனைக்கு சென்று பார்க்க வேண்டிய அவசியம் வந்தது ஏன்? தமது இராணுவப் பயிற்சிகளும், பிற உதவிகளும் நன்கு பயன்படுத்தப்பட்டு பலன் அளிக்கிறதா என்று பார்வையிடச் சென்றிருக்கலாம்.

இலங்கையில் நடைபெறும் யுத்தத்துக்கும் தமக்கும் சம்பந்தமே கிடையாது என்று அமெரிக்கா முன்னர் மறுப்பறிக்கை விட்டிருந்தது.

**ஆனாலும் அமெரிக்க கொமாண்டோக்கள் இங்கு வந்து யால காட்டுக்குள் படையினருக்கு பயிற்சி கொடுத்ததும், அமெரிக்காவில் வைத்துப் படை உயரதிகாரிகளுக்கு சிறப்பு பயிற்சி தரப்பட்டதும் தெரியாத விஷயங்கள் அல்ல.**

இப்போது அமெரிக்காவின் தெற்காசிய விவகாரத்துக்கு பொறுப்பானவர்கள் நேராக போர் முனைக்கே சென்று பார்வையிட்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியில் வழங்கப்படும் ஒத்துழைப்பின் பலாபலன்கள் திருப்தி அளித்தால், மேலும் உற்சாகமான ஒத்துழைப்புக்கள் கொடுப்பதற்காகத்தான் நிலவரங்களை நேரடியாக கண்டறியச் சென்றனர்..

அமெரிக்க வெளியுறவுத் துறையின் தெற்காசிய பிரிவு உதவிச் செயலாளர் பதவி என்பது பிரதி வெளிநாட்டமைச்சர் பதவிக்கு சமமானது.

**அமெரிக்காவின் பிரதி வெளிநாட்டமைச்சர் இன்னொரு நாட்டின் போர் முனைக்கு விஜயம் செய்வதும், அது இரகசியமாக வைக்கப்பட்டதும் சாதாரண விடயம் அல்ல.**

**இலங்கை இனப்பிரச்சனை விடயத்திலும், தற்போதைய போர் நகர்வுகளிலும் அமெரிக்காவின் ஈடுபாடு மேலோங்கத் தொடங்கியிருப்பதன் ஒரு கட்டம்தான் இது.**

இந்தியாவையும் பகைக்காமல், அமெரிக்காவையும் விலக்காமல் இரு பக்கமிருந்தும் ஆதரவைத் தேடும் இலங்கை அரசின் வெளிநாட்டுக் கொள்கைக்கு கிடைத்துள்ள பலனே இதுவாகும்.

இந்தியாவுக்கும் இங்குள்ள போர் நிலவரம், இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகள் பற்றி இலங்கை அரசு அடிக்கடி விளக்கம் கொடுத்துவிடுகிறது. இந்தியாவை மீறி, இந்தியாவுக்கு தெரியாமல் இங்கு ஒன்றும் செய்யமாட்டோம் என்பது போன்ற அணுகுமுறை அதுவாகும்.

**ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையின் யுத்த நிலவரங்களையும், அதன் விளைவுகளையும் கண்டும் காணாதது போல இருக்கலாமே தவிர, ஒரு வரையறைக்கு மேல் இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியாக உதவ இயலாது.**

பரஸ்பர ஆலோசனைகள், கடல் கண்காணிப்புக்கள், நட்புறவு அணுகுமுறைகள் என்றளவில் இந்திய அரசு இலங்கை அரசுடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டாலும், வெளிப்படையாக இலங்கை அரசை மிகையாக ஆதரிக்க முடியாது.

ஏனெனில் தமிழ்நாட்டில் அதற்கு எதிரான உணர்வுகள் எழத்தொடங்கிவிடும். தமிழக அரசியல் கட்சிகளும் எதிர்ப்புக் குரல் கொடுக்கத் தொடங்கலாம்.

எனவே-இலங்கைப் பிரச்சனை ஒரு உள்நாட்டுப் பிரச்சனை. அதில் நாம் ஒருமுறை தலையிட்டு கையைச் சுட்டுக் கொண்டோம். இனிமேல் தலையிட மாட்டோம் என்று சொல்லிக்கொண்டிருக்கக் கூடியதாகவே இந்திய அரசின் அணுகுமுறைகள் அமைந்திருக்கும்.

இலங்கை அரசுக்கு பெரிதும் உதவுவதாக தெரிந்தால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏன் உதவக்கூடாது என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் போகும்.

இந்திய அரசுக்குள்ள தர்மசங்கட நிலையை இலங்கை அரசும் புரிந்து வைத்திருக்கிறது. இந்தியா வெளிப்படையாக உதவாவிட்டாலும் இப்போதுள்ள புரிந்துணர்வும், பரஸ்பர நட்புறவுமே பெரிய சாதகம் என்றளவில், அவற்றுக்கு பாதகம் இல்லாமல் நடந்துகொள்வதுதான் இந்தியா தொடர்பான இலங்கை அரசின் கொள்கையாகும்.

ஆனால் போரை தொடர்ந்து நடத்தவும், தள்ளாடும் பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்புவதற்கு உதவிகள் பெறவும் அமெரிக்காவினதும், மேற்கு நாடுகளதும் கடைக்கண் பார்வையும், கரிசனையும் இலங்கை அரசுக்கு பெரிதும் தேவையாகும்.

அதேசமயம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான சக்திகளுடன் இலங்கை அரசு நெருக்கமாக உறவாடுகிறது என்ற சந்தேகமும் ஏற்பட்டுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியும் இருக்கிறது.

ஆனால் இந்தியாவின் இன்றைய பிரதமர் ஐ.கே.குஜ்ரால் சற்று அதிகமாகவே இலங்கை அரசுடன் நெருக்கமாக இருப்பதால், இலங்கை அரசின் வெளிநாட்டு உறவுகள், தொடர்புகளை சந்தேகக் கண்கொண்டு நோக்கப்போவதில்லை.

அதுமட்டுமன்றி புலிகளை எதிர்த்து போரிட இலங்கை அரசுக்கு வெளிநாட்டு உதவிகள் அத்தியாவசியமானவை என்பதையும் இந்திய அரசு அங்கீகரித்துள்ளது.

**தம்மால் அத்தகைய உதவிகள் வழங்குவதில் சங்கடங்கள், உள்நாட்டு அரசியல் நிலவரத் தடைகள் இருப்பதால் அமெரிக்காவிடமோ, மேற்கு நாடுகளிடமோ இலங்கை அரசு உதவி பெறுவதை இந்தியா கண்டும் காணாமல்தான் இருந்தாக வேண்டும்.**

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா செய்யும் உதவிகளை கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் இந்தியா, இலங்கை விவகாரத்தில் மட்டும் அமெரிக்க உதவிகள் தொடர்பாக கண்டும் காணாமல் இருக்கும் போக்கைத்தான் கடைப்பிடிக்கிறது.

**இத்தகைய நிலையை அமெரிக்கா மிகவும் புத்திசாலித்தனமாக கையாளத் தொடங்கியுள்ளது. வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல தனது மூக்கை மெல்ல மெல்ல நுழைக்கத் தொடங்கியுள்ளது.**

சோவியத் யூனியனை பல துண்டுகளாக உடைத்துப்போட்ட பின்னர் தட்டிக் கேட்க ஆளில்லாத சண்டப் பிரசண்டனாகவும், போட்டியே இல்லாத உலகப் பொலிஸ்காரனாகவும் மாறியிருக்கிறது அமெரிக்கா.

ஆனால், தெற்காசியப் பிராந்தியத்தில் மட்டும் அமெரிக்கா தான் நினைத்ததை சாதிக்க முடியாமல் இருக்கிறது.

இந்தியாவும், சோவியத் யூனியனும் நட்பாக இருந்த ஒரு காலத்தில், தெற்காசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கு சவாலாக இருந்தது இந்தியாதான்.

தெற்காசியாவில் தனது தளங்களை அமைக்கவும், கரங்களை அகல விரிக்கவும் இந்தியா தடையாக இருப்பதுடன், இந்தியா ஒரு வல்லரசாக மாறிவருவதையும் அப்போதிருந்தே தன் கழுகுக் கண்களில் கோபக் கனலுடன் கவனித்துக் கொண்டிருந்தது அமெரிக்கா.

இந்தியாவைச் சூழ உள்ள நாடுகளை தன் கைக்குள் போட்டுக் கொண்டு, இந்தியாவை தனிமைப்படுத்த அமெரிக்கா விரித்த சதிவலையில் இருந்தும் இந்தியா தப்பிக் கொண்டது.

சோவியத் யூனியன் வீழ்ந்த பின்னர் இந்தியாவை அணைத்துக்கொண்டு அதன் வல்லரசுப் பலத்தை உடைக்க நட்பு நாடகம் ஆடிப்பார்த்தது அமெரிக்கா.

பாகிஸ்தானுக்கு உதவிகள் நிறுத்தம். இந்தியாவுடன் கை குலுக்கல் என்றெல்லாம் இராஜதந்திர நாடகங்கள் பலவற்றை அமெரிக்கா அரங்கேற்றினாலும்கூட, இந்தியா அணுகுண்டு தயாரிப்பில் ஈடுபடுவதை தடைசெய்ய அமெரிக்கா முயன்றபோது அதன் சுயரூபம் வெளிப்பட்டுவிட்டது.

**கட்டியணைத்தபடியே தனது கைகளை கட்டிப்போடுவதுதான் அமெரிக்காவின் நோக்கம் என்பதை புரிந்து கொண்டு இந்தியா உஷாராகிவிட்டது. அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போட மறுத்துவிட்டது.**

அதனால் காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்கா நேரடியாகவே கருத்துக்கூறி உலக அரங்கில் இந்தியாவுக்கு நெருக்கடி ஏற்படுத்த முயன்றது.

காஷ்மீர் பிரச்சனையில் மத்தியஸ்தம் செய்யத் தயார் என்றும் சமீபத்தில்



அமெரிக்கா அறிவித்திருந்தது. இந்திய அரசு அதனை காட்டமான குரலில் மறுத்திருந்தது.

இந்திய மத்திய அரசின் கூட்டரசாங்கத்தில் இடதுசாரிக்கட்சிகள் செல்வாக்கு செலுத்துவதாலும் அமெரிக்காவின் தந்திரங்கள் அங்கு பலிக்கவில்லை.

தெற்காசியப் பிராந்தியத்தில் தனது கொள்கைகளும், தந்திரங்களும் தொடர்ந்து தோல்வி கண்டு வருவதால், அத் தோல்வியில் இருந்து மீள்வதற்கான வழிகளை அமெரிக்காவின் தெற்காசிய வெளிவிவகாரத்துறை துருவித் துருவி தேடிக்கொண்டிருக்கிறது.

இலங்கை விவகாரத்தில் மறுபடி அமெரிக்கா தீவிர ஆர்வம் காட்டத் தொடங்கியிருப்பதும் அதனால்தான். இலங்கை அரசுடன் இந்திய அரசு நட்பாக இருப்பதால் இங்கே தான் காலூன்றுவதையிட்டு இந்தியா அலட்டிக்கொள்ளாது.

இலங்கை அரசும், இந்திய அரசும் புலிகளை பொது எதிரியாகக் கருதுவதால் போரில் வெல்ல இலங்கை அரசுக்கு உதவி செய்வதும் பிரச்சனையாக மாறாது என்ற கணிப்புக்களுடன் அமெரிக்கா தன் கழுகுப் பார்வையை இந்தக் குட்டித்தீவின்மீது திருப்பியிருக்கிறது.

**சந்தடி சாக்கில் உள்ளே நுழைந்து இலங்கையை தனது இலாபகரமான சந்தையாக மாற்றுவதும், உலகம் முழுமைக்குமான தனது ஆதிக்க வலைப்பின்னலில் இலங்கையையும் சேர்த்துக் கொள்வதும், தெற்காசியப் பிராந்தியத்திலும் பொலிஸ்காரன் வேலை பார்ப்பதுவும்தான் அமெரிக்காவின் உண்மையான நோக்கமாகும்.**

அமெரிக்காவின் இரட்டை முகத்தையும் சுலபமாக அடையாளம் காணமுடிகிறது.

காஷ்மீர் போராட்டமும் நீண்டகாலமாக நடைபெற்று வருகிறது; ஆனால் இங்கு மூண்டுள்ள போரின் தீவிரத்துடனும், அதன் விளைவுகளுடனும் ஒப்பிடும்போது காஷ்மீர் போராட்டம் பாரியதல்ல.

**காஷ்மீர் பிரச்சனையில் மத்தியஸ்தம் செய்யத் தயார் என்று அறிவித்த அமெரிக்கா, இலங்கை விவகாரத்தில் போரின் பங்காளியாக் மாறி நிற்கிறது.**

இலங்கை இனப்பிரச்சனை விடயத்திலும் மத்தியஸ்த கோரிக்கைகள் எழுந்துள்ளன. புலிகளும் சர்வதேச மத்தியஸ்தம் தொடர்பாக பிரஸ்தாபித்துள்ளனர். இலங்கை அரசு மத்தியஸ்தத்தை விரும்பாதபோதும் பகிரங்கமாக மறுக்கமுடியாத நிலையில் கருத்து வெளியிட்டிருந்தது.

இந்திய அரசு கேட்காமலேயே தான் முந்திக்கொண்டு அங்கு மத்தியஸ்தர் பாத்திரம் வகிக்க விருப்பம் தெரிவிக்கிறது அமெரிக்கா. எனவே இலங்கை அரசு மத்தியஸ்தம் கேட்கவில்லை என்ற வாதமும் பொருந்தாது.

**தென்னாசிய பிராந்தியத்தில் தனது ஆதிக்க நலன் என்ற நோக்கோடு அமெரிக்காவின் காய் நகர்த்தல்கள் தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரானதாகவும் மாற்றம் கொள்ளத் தொடங்கியுள்ளன.**

அமெரிக்காவின் பிரதி வெளிநாட்டமைச்சரும், தென்னாசிய பிரிவு பணிப்பாளரும் இலங்கைக்கு வந்ததின் நோக்கம் இலங்கை அரசு கோரும் உதவிகளை செய்து கொடுக்க முன்னர், ஏற்கனவே செய்யப்பட்ட உதவிகளின் பலாபலன்களைக் கண்டறியத்தான்.

போலியோ தடுப்பு வாரத்தை முன்னிட்டு இலங்கை அரசும், புலிகளும் இம்முறை போர் நிறுத்தத்தை மேற்கொள்ள இசைந்தன.

95ம் 96ம் ஆண்டுகளில் போலியோ தடுப்பு வாரத்தை முன்னிட்டு புலிகள் போர் நிறுத்தம் செய்தபோதும், இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்ய முன்வரவில்லை.

இம்முறை இலங்கை அரசும் முன்வந்திருந்தது. அமெரிக்க பிரதி வெளிநாட்டமைச்சரும், அவர் குழுவினரும் வன்னிப் போர் முனைக்கு சென்றுவர வாய்ப்பாகவே இலங்கை அரசும் போர் நிறுத்தம் செய்ய முன்வந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

**போலியோ தடுப்பு தினத்தை முன்னிட்டு கடந்த 5-6ம் திகதிகளில் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டது. போர் நிறுத்த மீறல்கள் ஆங்காங்கே நடந்தாலும்கூட 5-6-7-8ம் திகதிகளில் ஜயசிக்குறுய் படையினர் புலிகளைச் சீண்டாமல் அமைதி காத்தனர். புலிகள் ஓமந்தையில் சிறுதாக்குதல் ஒன்றை நடத்தியபோதும் படையினர் பாரிய பதிலடி எதுவும் நடத்தவில்லை.**

அமெரிக்க பிரதிநிதிகள் ஓமந்தைவரை சென்றுவர வசதியாகவே அந்த அமைதி காத்தல் நடந்திருக்கலாம்.

கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரையும் அமெரிக்கத் தரப்பு சந்தித்திருக்கிறது.

அமெரிக்கத்தரப்பு எதிர்பாராத ஒரு விடயத்தை ஐ.தே.கட்சியினர் அவர்களிடம் தெரிவித்தனராம்.

மூன்று விடயங்களை ஐ.தே.கட்சியினர் மிகத் தெளிவாக கூறியுள்ளார்களாம்.

1) **இலங்கை அரசாங்கம் ஐ.தே.கட்சியை அமுக்கப் பார்க்கிறது. அதனால் அவர்களோடு இசைவாக நடந்துகொள்ள முடியாமல் உள்ளது.**
2) **புலிகளுடன் பேசாமல் இனப்பிரச்சனையோ யுத்தமோ தீரப்போவதில்லை. யுத்தம் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சிகள் போதிய பலனளிக்கப்போவதில்லை.**
3) **தமிழ்க் கட்சிகளிடம் ஒற்றுமை இல்லை. அதனால் பொது இணக்கமான தீர்வு அவர்கள் தரப்பில் இருந்தும் வெளிவரவில்லை.**

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளான புளொட், கூட்டணி, ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகளையும் அமெரிக்க தரப்பு கடந்த 08.09.97ல் சந்தித்து உரையாடியது.

இச் சந்திப்பு தொடர்பாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகி இருந்தன. ஆனால் வெளியாகாத செய்திகளும் உண்டு.

இலங்கை அரசின் தீர்வு யோசனைகள் சிறந்தவை என்றும், அவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதுமே அமெரிக்காவின் நிலைப்பாடு என்று அமெரிக்கத் தரப்பில் இருந்து கூறப்பட்டிருக்கிறது.

அமெரிக்கத் தரப்புக்கு ஒரு இனிய அதிர்ச்சி காத்திருந்தது. புலிகளுடன் பேசாமல் பிரச்சனை தீராது என்று ஐ.தே.கட்சி கூறியிருந்தது அல்லவா?

புலிகளுடன் பேசவேண்டும் என்பதை தமிழ்க் கட்சிகள் அங்கு வலியுறுத்தவில்லை.

இதில் இன்னொரு ஆச்சரியமும் இருக்கிறது.

சமீபத்தில் அமெரிக்கா சென்ற கூட்டணி பா.உ ஜோசப் பரராஜசிங்கம் "அரசும் புலிகளும் பேசவேண்டும். புலிகள் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள்" என்று அமெரிக்க வெளிவிவகார அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்தார். அச் செய்தி முரசிலும் பெரிதாக பிரசுரமாகியிருந்தது.

**அமெரிக்காவில் இருந்து கொழும்பு வந்த அமெரிக்க பிரதிநிதிகளிடம் கூட்டணித்தலைவர் சிவசிதம்பரம் அரசியல் தீர்வு யோசனைகளையிட்டு பாராட்டுத் தெரிவித்தார். நில அதிகாரம் போன்ற விடயங்களில்தான் தெளிவில்லாமல் உள்ளது என்று கூறினார். அரசியல் தீர்வு விடயத்தில் புலிகளுடன் பேசவேண்டிய தேவை இல்லை என்று சிவசிதம்பரம் அடித்துக் கூறிவிட்டாராம்.**

சமீபத்தில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் "அரசியல் தீர்வு இழுத்தடிக்கப்படுகிறது" என்று சிவசிதம்பரம் கவலை தெரிவித்திருந்தார். வெளியே விடப்படும் அறிக்கைகளில் "புலிகளுடனும் பேசவேண்டும்" என்று கூட்டணியினர் கூறிவருகின்றனர். அறிக்கையில் ஒரு பேச்சு, அறைக்குள் இன்னொரு பேச்சு.

ஒரு கட்டத்தில் திரு.சிவசிதம்பரம் அமெரிக்க தென்னாசிய பிரிவு பணிப்பாளரிடம் "உங்களுக்கு பிரச்சனையின் பின்னணி தெரியாததால் விரிவாக விளக்கவில்லை" என்றுகூற, குறுக்கிட்ட பணிப்பாளர் "நான் இந்தப் பிரச்சனையைப் பற்றி ஐந்து ஆறு ஆண்டுகளாக ஆராய்ந்து அறிந்து வைத்திருக்கிறேன் மிஸ்டர் சிவசிதம்பரம்" என்று சொன்னாராம்.

புலிகளைப் பலவீனமாக்குதல் என்பதையே அமெரிக்கத் தரப்பு தமிழ்க் கட்சிகள் சந்திப்பில் தனது விருப்பமாக கோடிட்டுக் காட்டியிருக்கிறது.

புலிகளைப் பலவீனமாக்குதல் என்ற ரீதியில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வை மட்டுமன்றி அவர்களின் தலைவிதியையும் தமக்கு சாதகமான திட்டங்களின் பலிக்கடாவாக்கவே அமெரிக்கா விரும்பி நிற்கிறது.

**புலிகளுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே முரண்பாடுகள் இருக்கின்றன. புலிகள் தவிர்ந்த தமிழ்கட்சிகளுக்கு இடையிலும் முரண்பாடுகள் இருக்கின்றன. இந்த முரண்பாடுகளுக்குள் வெளிச் சக்திகள் நுழைய அனுமதிப்பது கூடாரத்திற்குள் ஒட்டகம் நுழைய இடம் கொடுத்த கதையாகிவிடப்போகிறது.**

முதலில் மூக்கு வரும். பின்னர் உடல் நுழையும். கடைசியாக கூடாரமே காணாமல்போய்விடும்.

இதற்கிடையே இலங்கை கடற்படைக்கு மூன்று அதிவேக தாக்குதல் படகுகளை அமெரிக்கா வழங்கியிருக்கிறது. ஆனால் நிபந்தனையுடன்.

என்ன நிபந்தனை?

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அவற்றை பயன்படுத்தக்கூடாது என்பதுதான் நிபந்தனையாம்.

அப்படியானால் வளைகுடா யுத்தம் மறுபடி ஆரம்பித்தால் இலங்கையும் அதில் கலந்து கொண்டு பயன்படுத்தத்தான் வழங்கப்பட்டுள்ளதோ?

அமெரிக்கா தமாஷ் பண்ணவும் கற்று வைத்திருக்கிறது. ■

## அதிரடி அய்யாத்துரை



***யாழ் குடாநாட்டில்*** சிவில் அதிகாரிகளை அழைத்து சீருடை அதிகாரி ஒரு கூட்டம் நடத்தினார். "சோதனை அரண்களில் நாங்களும் சைக்கிளைவிட்டு இறங்கி தலையில் வெய்யிலுக்கு போடும் தொப்பியையும் கழற்றி கையில் பிடித்த படியும்தான் போகவேண்டிக்கிடக்கு. எங்களுக்கு சனம் மரியாதை தருமோ? எங்களுக்கென்று ஒரு மரியாதை வேண்டாமோ?" எண்டு கேட்டாராம் ஒரு சிவில் அதிகாரி. "பிரபாகரன் இருக்கும் போதும் மரியாதை இருந்ததோ?" என்று சீருடை அதிகாரி கேட்டாராம். "அவை எங்களை இப்படி ஏறி இறங்க வைக்கேல்லையே!" எண்டாராம் சிவில் அதிகாரி. "சரி யோசிக்காதேயுங்கோ; உங்களுக்கு ஒரு தனி அடையாள அட்டை தரப்படும். சட்டையில் குத்திக்கொண்டு போனால் இறங்கச் சொல்ல மாட்டினம்" எண்டு கூறப்பட்டதாம். கஷ்ட காலத்திற்கு அரணில் நிற்பவர்களின் பார்வையில் கோளாறு எண்டால் என்ன செய்யிறது? எண்டு கேட்க நினைத்தாராம். ஆனால் கேட்கவில்லை.

***முன்னாள் அரச அதிகாரி*** ஒருவர் யாழில் கைதானவர் அல்லோ? யாழில் படைத்தரப்பினர் ஆதிக்கம்பெற்ற பின்னும் ரெண்டு எழுத்தாருக்கு நிதி போக ஏற்பாடு செய்தது உண்மைதானாம். மானிப்பாயில் கூட்டுறவு சங்க அதிகாரி ஒருவரை தற்செயலாக சோதனையிட, அவரிடம் எக்கச்சக்கமான பணம் இருந்திருக்குது. அதனால் சந்தேகப்பட்டு நாலு தட்டுத் தட்ட அவர்தான் ஆதியோட அந்தமாய் விஷயமெல்லாம் சொல்லி மாட்டி வைச்சுப்போட்டாராம். ஆனால் குறிப்பிட்ட அதிகாரி ரெண்டு எழுத்தாருக்கு ஒரு பக்கம் உதவிக்கொண்டு, அதிகாரத் தரப்பு ஆள் ஒருவருடன் கூட்டு வைத்துக்கொண்டு சொந்த வருவாயும் எக்கச்சக்கமாய் புரட்டியிருக்கிறாராம். அந்தப் பக்கம் இருந்து வேட்டு வராமல் பார்த்துக் கொண்டு இந்தப் பக்கமாய் நோட்டு சேர்த்திருக்கிறார். என்ரை நாதா! நாதா!

***திருவான மலையின் ஒரு பகுதியில்*** நண்டு வியாபாரி ஒருத்தர் சோதனை அரணில் தடுக்கப்பட்டாராம். உள்ளே நண்டு இருப்பதை காட்டியிருக்கிறார். கவிழ்த்துக் கொட்டிக் காட்டுமாறு கூறப்பட்டதாம். அரண் இருந்தது கடற்கரைப்பகுதி. கவிழ்த்து கொட்டினால் நண்டுகள் கடலுக்குள் ஒடிவிடும் எண்டாராம் வியாபாரி. "ஓடாது கொட்டிக் காட்டு" எண்டாராம் சீருடைக்காரர். வேறு வழியில்லாமல் கொட்ட நண்டுகள் கடலுக்குள் பாய்ந்துவிட்டனவாம். வியாபாரிக்கு பற்றிக் கொண்டு வந்துவிட்டது. விட்டாராம் ஒரு அறை. வாங்கிய அறையில் பொறி கலங்கியவர் துப்பாக்கியை தூக்கி சுடப்போக, கூட இருந்தவர் தடுத்துவிட்டாராம். பின்னர் மேலதிகாரி வந்து விசாரித்துவிட்டு "வியாபாரி செய்தது நியாயம்தான்!" எண்டு அவரை விடுவித்தாராம். அந்த மேலதிகாரியை பாராட்டலாம்தானே!

***அரசியல் தீர்வு யோசனைகள்*** தொடர்பாக சிங்களத்திலும், தமிழிலும் அரசால் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. நில விவகாரம் தொடர்பாக சிங்களத்தில் கூறும்போது, "நிலத்தின்மீது மத்திய அரசுக்கே ஆதிக்கம் இருக்கும். அதனால் பிரிவினை ஏற்படும் காரணிகள் தோன்றாது" என்று கூறப்பட்டுள்ளது. தமிழில் உள்ள விளக்கத்தில், "நிலங்களை அபகரிக்கும் செயலுக்கு முற்றுப்புள்ளியிடப்பட்டுள்ளது. நிலப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் உருவாக்கப்பட்டுள்ளது" என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது. விஷயம் ஒன்று, விளக்கம் வேறு வேறு. இப்படியான விளக்கங்களுக்கு எது பாருங்கோ வசதி? தமிழ் பேசும் மக்களுக்கு சிங்களம் தெரியாமல் இருப்பதும், சிங்கள மக்களுக்கு தமிழ் தெரியாமல் இருப்பதும்தானே? ஜனாதிபதி தமிழ் பேசும் மக்கள் சிங்களத்தையும், சிங்கள மக்கள் தமிழையும் படிக்கச் சொல்லியிருக்கிறார் எண்டு செய்தி பார்த்ததும் என் மண்டையைக் குடைந்த கேள்வி அதுதானுங்கோ!

***சம்பந்தமானவரை*** பதவி ஏற்குமாறு திருவானமலைக் கிளை கேட்பது போல கேட்க, சம்பந்தமானவர் மறுப்பதுபோல மறுக்க, ஒரு நாடகமல்லோ நடக்குது எண்டு ஒரு சிலர் கொடுப்புக்குள் பாடிக் கொண்டு இருந்தவையாம்.

***வடக்கு-கிழக்கு*** முன்னாள் சபைக்கட்சிக்கு கனவிலும் முரசுதான் வருகிறதாம். எல்லாம் அரசியல் தொடரில் வெளியாகும் உண்மைகள் ஏற்படுத்தும் புகைச்சலும், எரிச்சலும்தான். பொய்யும் புரட்டுமாய் வசை பாடல் தொடங்கியிருக்கினம். அவை இதுவும் சொல்லுவினம். இதற்கு மேலும் சொல்லுவினம். இப்பவே எரிஞ்சா இனிமேல் எரியவும் கொஞ்சம் மிச்சம் வைக்க வேண்டாமோ? சமீபத்தில் யாழ் ரியூட்டரி ஒன்றுக்குள் கொள்கை விளக்கம் செய்யப் போனபோது குறுக்குக் கேள்விகள் தொடுக்கப்பட்டதாம். "என்ன செய்யிறது? அப்ப தலைமை வேறுதானே?" எண்டு விளக்கம் சொல்லியும் எடுபடவில்லையாம். செயலாளர் வலையைப் போட்டுவிட்டு நழுவி வந்துட்டாராம். மீன்பிடி ஆலோசகர் என்பதால் எங்கு போனாலும் கையில் ஒரு வலையுடன்தான் போகிறாராம் செயலாளர். ம்.... சொன்னால் கோபம்வரும். "வாழ்க வசைவாளர்கள்." இது அண்ணா சொன்னது.

***கொழும்பில் சட்டத்தரணி நேரு*** மறைந்தது தெரியும்தானே? அவரும் குமாரரும் ஒன்றாய் இருந்து பிரிந்தவை என்பது தெரிந்த சங்கதி. ஆனால் நேரு நோய்வாய்ப்பட்டு இருக்கேக்கை குமாரரும் அவர் துணைவியாரும்தான் தினமும் ஒத்தாசையாய் இருந்தவை என்பது வெளியே தெரியாத சங்கதி. மரணச் சடங்கு விவகாரங்களையும் குமாரர்தான் கவனிச்சவராம்.

**இவ்வாரம் பொன் மொழி இதுதான்:**

**"உனது அச்சங்களை**
**உன்னுடன் வைத்துக்கொள்!**
**ஊக்கத்தை மட்டும்**
**மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்!"**

*(ஸ்டீவன்சன்)* ■

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## நினைத்தது ஒன்று—நடந்தது ஒன்று!

## பொல்லடியாய் விழுந்த புள்ளடிகள்!




**1989** பெப்ரவரி 15ல் பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடைபெற்றது.

அதற்கு முன்னர் 1977ல் தான் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றிருந்தது. அதனால் பதினொரு வருடங்களின் பின்னர் நடைபெறும் தேர்தலாக அது அமைந்திருந்தது.

அது மட்டுமல்ல இலங்கையின் பாராளுமன்ற தேர்தல் வரலாற்றிலேயே இரத்தம் தோய்ந்த தேர்தலாகவும் அது விளங்கியது.

தென்னிலங்கையில் ஜே.வி.பி.யினர் தேர்தல் நிராகரிப்பு இயக்கம் நடத்திக் கொண்டிருந்தனர். தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் வேட்பாளர்கள்மீதும், ஆதரவாளர்கள்மீதும் ஜே.வி.பி. இராணுவப்பிரிவின் துப்பாக்கிகள் குறிபார்த்துக் கொண்டிருந்தன.

ஜே.வி.பி. உறுப்பினர்களை வேட்டையாடுவது என்ற போர்வையில் தமக்கு எதிரானவர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் திட்டமிட்டு ஒழித்துக்கட்டியது தனிக்கதை.

தென்னிலங்கையில் வாக்குச் சாவடிகள் சிலவும் ஜே.வி.பி.யினரால் தாக்கப்பட்டன.

வாக்குச் சாவடிகள் தாக்கப்பட்டதையும், வாக்களிப்புநேர பதற்றத்தையும் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியினர் கள்ள வாக்குகளையும் தாராளமாகப் போட்டுத் தள்ளிவிட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியிடம் அதிகார பலமும் இருந்தது. குறுக்கு வழிகளில் கைதேர்ந்த குண்டர் பலமும் இருந்தது. இரண்டும் கைகோர்த்து நிற்க பல வாக்குச் சாவடிகளில் வாக்குப் பெட்டிகள் நிரம்பி வழிந்தன.

### இந்தியாவின் திட்டம்

வடக்கு-கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப் ஆகிய இயக்கங்கள் வாக்களிப்புத் தினத்தன்று ஆயுதங்களுடன் களத்தில் குதித்தன.

இந்தியாவைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கில் அதிகமானோர் வாக்களிப்பில் கலந்துகொண்டதாக காட்டவும் வேண்டும், ஜனநாயகத் தேர்தலாகவும் வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் நிலைப்பாடு.

வாக்களிப்புத் தினத்தன்று வாக்களிக்க வராமல் வீடுகளில் இருப்போரை எப்படியாவது வாக்குச் சாவடிகளுக்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்பதுதான் இந்தியப் படையினரின் விருப்பமும்.

இன்னொரு இரகசியத் திட்டமும் இந்தியப் படையினரிடம் இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். போன்ற இயக்கங்கள் தேர்தல் விதிகளுக்கு முரணாக செயற்படுவதையும் கண்டும் காணாமல் இருக்க வேண்டும். அதேநேரம் அக் கட்சிகள் மட்டுமே அமோக வெற்றி பெற்றுவிட்டால் நடைபெற்றது போலித்தேர்தல் என்ற பிரசாரம் எடுபட்டுவிடும்.

குத்துமதிப்பாக ஒரு கணக்கும் போட்டனர் இந்தியப் படையினர். அதன்படி தம்முடன் இணைந்து நிற்கும் இயக்கங்களும், சுயேட்சையாகப் போட்டியிடும் ஈரோஸ் குழுவினரும் ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தேர்தல் முடிவுகள் அமையவேண்டும் என்று திட்டமிட்டனர்.

அதற்கு என்ன வழி.

குறிப்பிட்ட வாக்குச் சாவடிகளில் ஈரோஸ் சின்னத்துக்கு இந்தியப் படையினரே முத்திரை குத்தி பெட்டிகளுக்குள் தள்ளிவிடுவதுதான் ஒரே வழி.

தம்மோடு இணைந்து நின்ற இயக்கங்களைவிட ஈரோஸ் வேட்பாளர்கள் வெற்றி பெறுவதையே இந்தியத் தரப்பு அதிகம் விரும்பியது.

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இந்தியா நடத்திய போலித் தேர்தல் என்ற பிரசாரம் மேலோங்கி இருந்தது. வடக்கு-கிழக்கில் இந்தியப் படை சாதித்தது ஒன்றுமில்லை, அங்கு இந்திய அரசும், அவர்களது விருப்பப்படி ஆடும் பொம்மை அரசாங்கமும்தான் இருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்திருந்தன.

நாடாளுமன்றத் தேர்தலிலும் இந்திய அரசுக்கு சார்பான குழுக்களே தனி வெற்றி பெறுமானால், அதுவும் போலித் தேர்தல் என்று சொல்லப்பட்டுவிடும் அல்லவா.

அதனால்தான் ஈரோஸ் சார்பான வேட்பாளர்களை வெற்றி பெற வைக்கவும் தம்மால் முடிந்த காரியங்களை செய்ய திட்டமிட்டனர் இந்தியப் படையினர்.

இதனால் ஈரோசுக்கு கிடைத்த பலன்கள் ஏராளம். புலிகள்தான் ஈரோஸ் பட்டியலில் போட்டியிடுகிறார்கள் என்று ஏனைய இயக்கங்கள் செய்த பிரசாரம் காரணமாக, புலிகள் இயக்க ஆதரவாளர்கள் ஈரோஸ் பட்டியலில் உள்ள வேட்பாளர்களுக்கு வாக்களிக்க முன்வந்தனர்.

ஜனநாயக தேர்தலாக வெளியுலகுக்கு காட்டவேண்டும் என்ற இந்தியத் தரப்பின் விருப்பம் காரணமாக இந்தியப் படையின் ஆதரவும், பாதுகாப்பும் ஈரோஸ் வேட்பாளர்களுக்கும் கிடைத்தது.

வாக்களிப்பு தினத்தன்று இந்தியப் படையினரே ஈரோஸ் சின்னத்துக்கு போட்ட வாக்குகளும் சேர்ந்தன.

ஈரோசுக்கு இருந்த நல்ல பெயரும், ஏனைய இயக்கங்கள் மீதான வெறுப்பும் ஈரோஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவான வாக்குகளாக மாறின.

இத்தகைய சாதகங்கள் ஏனைய இயக்கங்களுக்கு இருக்கவில்லை.

அதிகாரபலம், ஆயுதபலம், இந்தியப் படை தமது அத்துமீறல்களை கண்டுகொள்ளாது என்ற துணிச்சல் ஆகியவைதான் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். ஆகிய இயக்கங்களுக்கு சாதகமாக இருந்தன.



கூட்டணியின் நிலைதான் பரிதாபம். பொதுப்பட்டியல் வேட்பாளர்கள் கூட்டணியின் பெயரில், கூட்டணியின் சின்னத்தில்தான் போட்டியிட்டனர். ஆனால் பொதுப்பட்டியலில் இருந்த கூட்டணி உறுப்பினர்களோ பிரசாரம் செய்யவே முடியாத நிலையில் இருந்தனர்.

அவர்களிடம் ஆயுத பலமும் இருக்கவில்லை. அதிகார பலமும் இருக்கவில்லை.

கூட்டணித் தலைவர்கள் வெற்றி பெற வேண்டும். மிதவாதிகளின் பிரசன்னம் பாராளுமன்றத்தில் இருந்தால்தான் தீவிரவாதிகளை ஒரு வரையறைக்குள் வைத்திருக்கலாம் என்றெல்லாம் இந்தியத் தரப்பு விரும்பியிருந்தது உண்மை.

ஆனால் இந்தியப் படையினருடன் கூட்டணியினருக்கு அத்தனை பரிச்சயம் இருக்கவில்லை. இந்தியப் படை உதவியை பயன்படுத்தி தேர்தலில் ஏனைய இயக்கங்களுடன் ஏட்டிக்கு போட்டியாக நிற்கும் தொண்டர் பலமும் கூட்டணியிடம் இருக்கவில்லை.

கூட்டணிக்கு என்று இருக்கக்கூடிய வாக்கு வங்கி கூட்டணித் தலைவர்களை வெற்றிபெறச் செய்துவிடும் என்று இந்தியத் தரப்பும் நம்பியிருந்தது.

தேர்தல் நேரத்தில் கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கத்தை பேட்டி காணச் சென்றார் ஒரு நிருபர்.

இந்தியா- இலங்கை ஒப்பந்தம் உருவாக கூட்டணியினரும் ஒரு காரணம் என்று அமிர்தலிங்கம் கூறினார்.

புலிகளைப் பற்றியும் நிருபர் கேள்வி எழுப்பினார்.."அவர்கள் தங்கள் பாதையில் செல்கிறார்கள். நாங்கள் எங்கள் பாதையில் செல்லுகிறோம்." என்றார் அமிர்தலிங்கம்.

பின்னர் நிருபரும் அமிர்தலிங்கம் அவர்களும் பேட்டிக்கு புறம்பாக தனிப்பட்ட ரீதியில் உரையாடிக் கொண்டிருந்தனர்.

"உங்களைத் துரோகிகள் பட்டியலில் புலிகள் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் தேர்தலையும் நிராகரிக்குமாறு கூறியிருக்கிறார்கள். உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படாதா?" என்று கேட்டார் நிருபர்.

அமுதரிடமிருந்து ஒரு புன்னகை உதிர்ந்தது. அடுத்து அமுதர் செய்த காரியத்தால் நிருபரே அசந்துபோனார்.

அமுதரின் கையில் பிஸ்டல் ஒன்று குந்தியிருந்தது. அதனை காட்டிக்கொண்டே அமுதர் சொன்னார்; "நானும் பிஸ்டலுடன் தான் திரிகிறேன். தம்பிமாருக்கு மட்டும்தான் சுடத்தெரியுமோ?"

நாங்கள் ஆயுதமே ஏந்தியதில்லை என்று கூட்டணியினர் சிலர் இன்று கூறிவருவதும் நினைவுக்கு வருகிறது.

### ஆயுத முனையில்

வடக்கு-கிழக்கில் வாக்களிப்பு தினத்தன்று ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்களின் உறுப்பினர்கள் சுறு சுறுப்பாகச் செயற்பட்டனர்.

வாக்களிக்காமல் வீடுகளில் இருந்தவர்களை ஆயுதமுனையில் தங்கள் வாகனங்களில் ஏற்றி வாக்குச் சாவடிகளுக்கு கொண்டு சென்றனர்.

தங்கள் தங்கள் இயக்க வேட்பாளர்களின் இலக்கத்தையும் கூறி, உதயசூரியன் சின்னத்துக்கும் வாக்களிக்குமாறு கூறி வாக்கு சாவடிக்குள் அனுப்பிவைத்தனர்.

விருப்பு வாக்குகளை அதிகம் பெறுவது யார் என்பதில்தான் கூட்டாகப் போட்டியிட்ட இயக்கங்களுக்குள் கடும் போட்டி.

மட்டக்களப்பில் பல வாக்குச் சாவடிகளில் கட்டுக் கட்டாக வாக்குச் சீட்டுகளில் முத்திரை குத்தி உள்ளே தள்ளினார்கள்.

கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கத்தை தோற்கடித்தே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு மட்டக்களப்பில் கூட்டணிச் சின்னத்தில் போட்டியிட்ட மூன்று இயக்கங்களும் செயற்பட்டன.

இதற்கிடையே இன்னொரு வேடிக்கையும் நடந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்களால் வாக்குச் சாவடிக்கு கொண்டு செல்லப்பட்ட வாக்காளர்கள் ஈரோஸ் சின்னமான வெளிச்சவீட்டுக்கு ஆதரவாக புள்ளடியிட்டுவிட்டு வந்துவிட்டனர்.

"அம்மா பார்த்துத்தானே புள்ளடி போட்டனீங்கள்?"

"ஓம் தம்பி"

"எந்தச் சின்னம்?"

"எங்களுக்கு தெரியாதே, உதயசூரியன் தான்"

ஆனால் அவர்கள் வாக்குப் போட்டது வெளிச்சவீட்டு சின்னத்துக்கு.

யாழ்ப்பாணத்தில் கல்வியங்காடு, நல்லூர் போன்ற பகுதிகளில் வாக்களிப்பு மந்தமாக இருந்தமையால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் அப்பகுதி மக்களை கட்டாயப்படுத்தி வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

அப்பகுதிகள் புலிகள் இயக்க கோட்டைகளாக இருந்தவை. அழைத்து வரப்பட்ட அத்தனைபேரும் வெளிச்சவீட்டுக்கு நேரே புள்ளடி போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

இவ்வாறுதான் பல பகுதிகளில் நடந்தது. ஆயுதமேந்தி நிற்பவர்களுக்கு எதிராக வெளிப்படையாகக் காட்டமுடியாத எதிர்ப்பை புள்ளடி மூலம் காட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்தான் கள்ள வாக்குகள் அதிகம் போடப்பட்டன. ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ இயக்கங்கள் தான் அதில் முன்னின்றன.

ரெலோ இயக்க வேட்பாளரான ஜனாவுக்கு மட்டக்களப்பில் சில பகுதிகளில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு இருந்ததையும் மறுக்கவியலாது. அதேபோல ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக போட்டியிட்ட சாம் தம்பிமுத்துவுக்கும் செல்வாக்கு இருந்தது.

எனவே- மட்டக்களப்பு மாவட்டத்தில் அவர்களுக்கு கிடைத்தவை எல்லாம் கள்ள வாக்குகள் என்று அர்த்தமல்ல. ஆனால் கணிசமானளவு கள்ள வாக்குகள் அங்கு போடப்பட்டன என்பதே உண்மையாகும்.

### கௌரவப் பிரச்சனை

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமிர்தலிங்கம் போட்டியிட்டதால் அவரை தோற்கடித்து இந்திய அரசுக்கும் தங்கள் செல்வாக்கை காட்டவேண்டும் என்பது ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் முக்கிய குறியாக இருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் தாம் ஆளும் கட்சியாக இருந்தும், கூட்டணியின் பதாகையின் கீழ் தங்களை போட்டியிடுமாறு இந்தியா கூறியமை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துக்கு ஒரு கௌரவப் பிரச்சனையாகவும் இருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாணசபை முதல்வராக இருந்தவர் வரதராஜப் பெருமாள்.

அமிர்தலிங்கம் தேர்தலில் வென்று அவரது குரல் மறுபடி ஓங்கி ஒலிக்கத் தொடங்கினால், தனது குரல் அமுங்கிவிடுமோ என்ற அச்சமும் வரதராஜப் பெருமாளுக்கு இருந்திருக்கக்கூடும். ஏனெனில் தன் பலம் என்ன, அமிரின் பலம் என்னவென்று அறிந்தவர் வரதராஜப் பெருமாள்.

யாழ் மாவட்டத்தில் தங்களுக்கு கணிசமான வாக்குகள் கிடைக்கும், கணிசமான ஆசனங்கள் கிடைக்கும் என்றே ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ இயக்கங்கள் நம்பியிருந்தன.

யாழ் மாவட்ட வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தபோது நடந்த சுவையான உரையாடல் ஒன்று உதாரணம்.

யாழ் அசோகா ஹோட்டலில் கூட்டணிப் பட்டியல் வேட்பாளர்கள் தேர்தல் முடிவை அறியக் கூடியிருந்தனர்.

பொதுப்பட்டியலில் ரெலோ சார்பாக யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டவர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா. அவர் நல்ல பேச்சாளர். ஒரு காலத்தில் சுயாட்சிக் கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர். தமிழரசுக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று தனிநாட்டுக் கோரிக்கையை முதலில் முன்வைத்த கட்சிதான் தமிழர் சுயாட்சிக் கழகம்.

அசோகா ஹோட்டலில் ஏனைய வேட்பாளர்கள் இருந்த பகுதிக்குள் வந்த் ஸ்ரீகாந்தாவின் கண்ணில் முதலில் பட்டவர் மாவை சேனாதிராசா. அவர் பொதுப்பட்டியலில் கூட்டணி சார்பாக போட்டியிட்ட வேட்பாளர்.

யாழ் மாவட்டத்தில் பொதுப்பட்டியலில் நின்றவர்களில் கூட்டணியைச் சேர்ந்த எவரும் வெற்றி பெறப்போவதில்லை என்பது முன்கூட்டியே தெரிந்த விடயம். அந்தளவுக்கு பொதுப்பட்டியலுக்குள்ளேயே அவர்களை ஓரம் கட்டி வைத்திருந்தன மூன்று இயக்கங்களும்.

'மாவை சேனாதிராசாவை பார்த்ததும் ஸ்ரீகாந்தா சிரிப்பை அடக்கிக்கொண்டு "தம்பியும் வருவீர் போலத்தான் கிடக்கு" என்றார். அங்கிருந்த ஏனைய வேட்பாளர்களுக்கு ஸ்ரீகாந்தா ஜோக் விடுகிறார் என்று தெரிந்ததால் சிரிப்பை அடக்க சிரமமாகிவிட்டது.

யாழ்மாவட்ட தேர்தல் முடிவுகள் வெளியாகின.

ஸ்ரீகாந்தாவும் தோற்றுப் போனார். மாவை சேனாதிராசாவும் தோற்றுப்போனார்.

முடிவு வெளியான பின்னர் ஸ்ரீகாந்தா வைச் சந்தித்த மாவை சேனாதிராசா கேட்டார்; "அண்ணரும் வரேல்லைப்போல கிடக்கு!"

### முடிவுகள்

யாழ் மாவட்ட தேர்தல் முடிவுகள் கூட்டணியின் பெயரில் பொதுப்பட்டியலில் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்களுக்குத்தான் சாட்டை அடியாக அமைந்தன.

யாழ் மாவட்டத்தில் ஈரோஸ் ஒன்பது ஆசனங்களை கைப்பற்றியது. கூட்டணி மூன்று ஆசனங்களை மட்டுமே பெறமுடிந்தது. அந்த மூன்று பேரில் கூட்டணி உறுப்பினர் எவருமில்லை.

சுரேஸ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எஃப்.), க. யோகசங்கரி (ஈ.பி.ஆர்.எல்.எஃப்.), க. நவரத்தினம் (ஈ.பி.ஆர்.எல்.எஃப்.) ஆகியோரே வெற்றி பெற்ற மூவருமாவர்.

யாழ் மாவட்டத்தில் தேர்தல் சுதந்திரமாக நடந்திருந்தால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். மூன்று ஆசனங்களை பெற முடிந்திருக்குமோ என்பதுகூட சந்தேகம்தான். ஈரோஸ் யாழ் மாவட்டத்தில் ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் வாக்குகளை பெற்றிருந்தது. அவற்றில் குறிப்பிட்ட வீதமானது இந்தியப் படையினரின் உபயத்தில் கிடைத்தவை.

இந்தியப் படை உதவியின்றியே ஈரோஸ் யாழ்மாவட்டத்தில் இன்னும் அதிக ஆசனங்களை பெற்றிருக்கலாம். ஆனால் வாக்களித்தோர் எண்ணிக்கை குறைவாக இருந்திருக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்பார்த்தது நடந்தது. சொற்ப விருப்பு வாக்கு வித்தியாசத்தில் அமிர்தலிங்கம் தோல்வியடைந்தார். ஆனால் அங்கு கூட்டணி பட்டியலில் போட்டியிட்ட கருணாகரன் (ஜனா)- ரெலோ சாம் தம்பிமுத்து- ஈ.பி.ஆர்.எல்.எஃப்., பிரின்ஸ் காசி நாதர்- ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஆகியோர் வெற்றிபெற்றனர். மட்டக்களப்பில் ஈரோஸ் ஒரு ஆசனத்தை கைப்பற்றியது.

மட்டக்களப்பில் கள்ள வாக்குகள் இல்லையென்றால் அமிர்தலிங்கம் நிச்சயம் வெற்றி பெற்றிருப்பார்.

கூட்டுச் சேர்ந்தவர்களாலேயே முதுகில் குத்தப்பட்டார் அமிர்தலிங்கம்.

வன்னியில் இரண்டு ஆசனங்களை கூட்டணி கைப்பற்றியது. இராஜ குகனேஸ்வரன் (ஈ.பி.ஆர்.எல்.எஃப்., அந்தனி இம்மானுவேல் (ஈ.பி.ஆர்.எல்.எஃப்) ஆகியோரே அங்கு வெற்றி பெற்றனர்.

அதிர்ச்சியான விடயம் என்ன தெரியுமா?

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலகம் இருந்தது திருமலையில்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் ஆரவாரமான நடவடிக்கைகள் கொடிகட்டிப் பறந்ததும் திருமலையில்தான்.

ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்துள்ளோம் என்றெல்லாம் பட்டியல் காட்டியதும் திருமலையில்தான்.

வரதராஜப் பெருமாள் தனது ஆலோசகர்கள், உதவியாளர்கள் மற்றும் பரிவாரங் கள் சகிதம் தரித்திருந்ததும் திருமலையில் தான்.

அப்படியிருந்தும், கள்ள வாக்குகளின் புண்ணியத்தில்கூட திருமலை மாவட்டத்தில் ஒரு ஆசனத்தைக் கூட ஈ.பி.ஆர்.எல்.எஃப். பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ஈரோஸ். அங்கு இரண்டு ஆசனங்களை கைப்பற்றியது. அங்கு ஈரோசுக்காக இந்தியப் படையினர்கூட பெரிதாக உதவவில்லை. புலிகள் சார்பான வாக்குகளும், திருமலையில் மூதூர் போன்ற பகுதிகளில் ஈரோஸ் உறுப்பினர்கள் செய்திருந்த அரசியல் வேலைகளும்தான் வெற்றிக்கு காரணமாகின.

சலுகைகளும், ஆரவாரங்களும் அங்கு மக்களால் நிராகரிக்கப்பட்டன. திருமலை ம்க்கள் வழங்கிய தெளிவான தீர்ப்பால் ஆடிப்போனது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

அடுத்த கட்ட சுவாரசியங்கள் வரும் வாரம்.

(தொடர்ந்து வரும்)

### தீவெங்கும் விரிந்த கொலைக் களம்

*1989 ஜனவரி முதலாம் திகதி முதல் 26ம் திகதி வரை இலங்கை முழுவதும் 584 பேர் கொலை செய்யப்பட்டனர். 1989.01.26ம் திகதி மட்டும் ஒரே நாளில் 56 கொலைகள் நடந்துள்ளன. அதற்குமுதல் நாள் 37 கொலைகள் நடந்திருக்கின்றன.*

*1989 ஜனவரி- 19 முதல் 26ம் திகதி வரை-8 நாட்களில் கொலை செய்யப்பட்டவர்களின் தொகை- 206 ஆகும். 88டிசம்பரில் மொத்தம் 1200 பேர் கொல்லப்பட்டனர். மாகாணசபை தேர்தல் நடைபெற்ற அடுத்த நாளில் 101 பேர் கொல்லப்பட்டனர்.*

*1989 ஜனவரி மாதம் ஒவ்வொரு நாளும் கொல்லப்பட்டோர் விபரம் தினசரி அடிப்படையில் தரப்படுகிறது!*

*ஜன 1-30, 2ம் திகதி-23; 3ம் திகதி 22; 4ம் திகதி-30 5ம் திகதி-19, 6ம் திகதி-31, 7ம் திகதி-25, 8ம் திகதி-25, 9ம் திகதி-17, 10ம் திகதி-29, 11ம் திகதி-14, 12ம் திகதி-17, 13ம் திகதி-12, 14ம் திகதி-17, 15ம் திகதி-13, 16ம் திகதி-14, 17ம் திகதி-20, 18ம் திகதி-20, 19ம் திகதி-22, 20ம் திகதி-23, 21ம் திகதி-13, 22ம் திகதி-19, 23ம் திகதி-18, 24ம் திகதி-21, 25ம் திகதி-37, 26ம் திகதி-53.*

*29.02.89 சண்டே ரைம்ஸ் வெளியிட்ட தகவல்படி, 1989 பெப்ரவரி மாதம் முதல் 3 நாட்களில் 79 பேர் வரை கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 1989 ஜனவரியில் நாடெங்கும் நடந்த வன்முறைகளினால் 704 பேர் கொல்லப்பட்டனர் என்றும் செய்தி வெளியானது.*



தென்னிலங்கைப் படுகொலை- விரிந்த கொலைக் கலாசாரம்

# அலசுவது- இராஜதந்திரி




# உரசும் கத்திமுனையும் கோரப்படும் ஒத்துழைப்பும்

"அரசியல் தீர்வு விடயத்தில் ஐ.தே.கட்சியுடன் முதலில் இணக்கம் காணப்படவேண்டும். அதன்பின்னரே விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கு செல்லமுடியும்" என்று நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்று ஐ.தே.கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க எப்போது கூறினாலும் அப்போதெல்லாம் மேற்கண்டவாறே நீதியமைச்சர் பதிலளித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

தென்னிலங்கை அரசியலில் ஆளும் தரப்பும், பிரதான எதிர்க்கட்சியும் கீரியும் பாம்புமாகவே காட்சியளிக்கின்றன. இரு தரப்புக்கும் இடையிலான பிணக்குகள் நாளும் பொழுதும் பெரிதாகிக் கொண்டிருப்பதையே



பட்டலந்த ஆணைக்குழு முன் ரணில் சாட்சியம்

காணக்கூடியதாயுள்ளது.

**தென்னிலங்கை அரசியலில் ஆளும் தரப்பு எடுத்து வைக்கும் ஒவ்வோர் காலடியும் தமது பிரதான அரசியல் எதிரியான ஐ.தே.கட்சியை ஓரம் கட்டுவதையே முக்கிய குறியாகக் கொண்டுள்ளன.**

ஆணைக்குழுக்கள், விசாரணைக் கமிஷன்கள் போன்றவையும் பொதுஜன முன்னணியினரின் அரசியல் நோக்கங்களுடன் இணைந்ததாகவே அமைந்திருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களையும், பிரமுகர்களையும் வாய்திறக்க முடியாமல் அரசியல் ரீதியில் முடமாக்கவே ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**பட்டலந்த விசாரணை ஆணைக்குழு மிக நீண்டகாலமாக நடைபெற்றுவருகிறது. ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐ.தே.கட்சியின் முக்கிய தலைவர்கள் அரசியலில் தீவிர நிலைப்பாடுகளை எடுக்கும்போது, அவர்களது கரங்களை பின்புறமாக திருகிப்பிடித்துக் கொள்ளக்கூடியதாக விசாரணைக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருப்பதையே ஆளும் தரப்பு விரும்புவதாகத் தெரிகிறது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான விஜயபால மெண்டிசின் குடியுரிமையை பறிப்பதற்கும் ஆளும் தரப்பு முன்வந்திருக்கிறது.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் உட்பட அக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் பலர் பட்டலந்த ஆணைக்குழு முன்பாக விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

விஜயபால மெண்டிசின் குடியுரிமை பறிப்புக்கு ஆளும் தரப்பு முன்வந்துள்ளமையானது ரணில் உட்பட அக்கட்சியின் ஏனைய சிரேஷ்ட தலைவர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள மறைமுக எச்சரிக்கை என்றே கருதப்பட வேண்டியுள்ளது.

**காலவரையின்றி விசாரணைக் கமிஷன்கள் தொடர்ந்து கொண்டிருப்பது ஆளும் தரப்புக்கு சாதகமானதே. குடியுரிமை பறிப்பு என்ற அச்சுறுத்தல் ஐ.தே.கட்சித் தலைவர்களின் கழுத்தில் கத்திமுனையாக உரசிக்கொண்டே இருக்கும். பொதுஜன முன்னணியினருக்கு எதிராக தீவிர எதிர்ப்பு இயக்கத்தை ஐ.தே.கட்சி ஆரம்பிக்குமானால் அந்தக் கத்திமுனை சற்றுவேகமாகவே உரச ஆரம்பிக்கும்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் சிரேஷ்ட தலைவர் சிறிசேன குரே திடீரென்று கைது செய்யப்பட்டமையும், ஜனாதிபதியை கொலை செய்ய திட்டமிட்டதாக குற்றம் சாட்டப்பட்டமையும் அரசியல் நோக்கம் சார்ந்ததாகவே அமைந்திருந்தது.

தமது அரசியல் எதிரியான ஐ.தே.கட்சி மறுபடியும் எழுந்துவிடக்கூடாது என்பதில் ஆளும் தரப்பு கண்ணும் கருத்துமாக இருப்பதையும், அதற்காக அதிகாரத்தை பயன்படுத்தவும் தயாராக இருப்பதையுமே சிறிசேன குரேயின் கைது புலப்படுத்தியிருந்தது.

ஜனாதிபதியை கொல்லச் சதி என்பதே சிறிசேன குரே கைதுக்கான பிரதான காரணமாக வெளியே கூறப்பட்டது.

**ஆனால் தடுத்துவைக்கப்பட்டிருந்த சிறிசேன குரேயிடம் அது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கவில்லை. நீதிமன்றத்தில்கூட தமது குற்றச்சாட்டுக்களை ஆதாரப்படுத்த முடியவில்லை. அதனாலேயே சிறிசேன குரே கைது செய்யப்பட்டமை நீதிக்கு புறம்பானது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.**

சிறிசேன குரே அரசியலில் குண்டர்படைக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுத்த ஒருவர் என்பதில் சந்தேகம் இல்லை. தனது அரசியல் எதிரிகளை மிரட்ட குண்டர் படை பலத்தை பிரயோகித்தவர் என்பதும் உண்மையானதே.

ஆனால், அதே சிறிசேன குரேயை பொதுஜன முன்னணியினரும் ஐ.தே.கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த பயன்படுத்த முற்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிறிசேன குரே ஐ.தே.கட்சிக்கு புத்துயிர் ஊட்டும் ஒருவராக மாறிவிடுவாரோ என்ற அச்சம்தான் பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் பின்னர் அவர்மீது கைவைக்க காரணமாயிற்று.

எனவே- அரசியலில் குண்டர் கலாசாரத்தை ஒழித்துக்கட்டுதல், கடந்த கால அதிகார துஷ்பிரயோகங்களை கண்டுபிடித்தல், மனித உரிமை மீறல்களை கண்டறிதல் போன்றவையே தமது தற்போதைய அணுகுமுறைக்கு காரணம் என பொ.ஜ.முன்னணி ஆட்சியாளர்கள் கூறினாலும்கூட ஐ.தே.கட்சியை ஓரம் கட்டும் நோக்கம் பிரதானமாக இருப்பதையே நிகழ்ச்சிப்போக்குகள் உணர்த்தி வருகின்றன.

கடந்த கால அரசாங்கத்தில் குண்டர்கள் கலாசாரத்தை ஊக்கப்படுத்திய சிறிசேன குரே போன்ற ஒருவர்கூட ஐ.தே. கட்சியை பலவீனப்படுத்த தம்மோடு ஒத்துழைக்க முன்வருவாரானால் அவ்வாறானவர்களுடன் நட்பு வைத்திருக்கவும் பொதுஜன முன்னணியினரும் தயாராகவே இருப்பர். சிறிசேன குரேயுடன் பொதுஜன முன்னணியினருக்கு முதலில் இருந்த நட்பு அதனையே வெளிப்படுத்தியிருந்தது.

ஆட்சியில் இருந்தபோது ஐ.தே.கட்சியினரும் இதேபோன்ற அணுகுமுறையைத்தான் பின்பற்றியிருந்தனர்.

**ஐ.தே.கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருந்ததையும், மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதையும்தான் பொதுஜன முன்னணியினரால் சகிக்க முடியாதே தவிர, ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தின் அணுகுமுறைகள் பலவற்றை அடிபிசகாது தாமும் பின்பற்றிச் செல்வது இன்றைய ஆட்சியாளருக்கு கசப்பானதாக அமையவில்லை.**

மக்களின் எதிர்பார்ப்புக்கள், மக்களின் தேவைகள், விருப்பங்கள் என்பவற்றுக்குப் புறம்பான ஆட்சி அதிகாரப் போட்டிதான் பொ.ஜ. முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே கூர்மையடைந்து காணப்படுகிறது.

**17 வருடகாலமாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் தாம் சந்தித்த அரசியல் ஒடுக்குமுறைகள், பழிவாங்கல்கள், ஓரம் கட்டல்கள் என்பவற்றுக்காக, மிக நிதானமாக படிப்படியாக கணக்கு தீர்க்கத் தொடங்கியிருக்கிறது பொது ஜன முன்னணி.**

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையை பறித்தார் ஜே.ஆர். ஜெயவர்த்தனே. மிக மோசமான அரசியல் பழிவாங்கலாக அந்த நடவடிக்கை அமைந்திருந்தது.

ஜே.வி.பி. இயக்கத்தினரின் கிளர்ச்சிக் காலத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், மற்றும் ஆதரவாளர்கள் பலர் ஐ.தே. கட்சியினரால் வேட்டையாடப்பட்டு ஜே.வி.பி.என்று முத்திரை குத்தப்பட்டனர்.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலம் 'கொலையுகம்' என்று பொதுஜன முன்னணியினர் செய்த பிரசாரத்தை மக்களும் ஏற்றுக்கொண்டே 17 வருடகால ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

**ஆனால், பொதுஜன முன்னணிக்கு மக்கள் வழங்கிய அதிகாரம் என்பது பழிக்கு பழிவாங்க வழங்கப்பட்ட சந்தர்ப்பம் அல்ல, கடந்தகாலத் தவறுகளை ஒழித்துக்கட்டி ஜனநாயக ஆட்சியை வழிநடத்திச் செல்லவே மக்கள் அதிகாரம் வழங்கினார்கள்.**

எனினும், கடந்த மூன்று வருடகாலத்தில் பொதுஜன முன்னணியினரின் அணுகுமுறைகள் 'யானைக்கு ஒரு காலம் வந்தால் எங்களுக்கும் ஒரு காலம் வரும்' என்று 17 வருடமாக காத்திருந்து கணக்குத் தீர்ப்பது போன்றே அமைந்து வருகிறது.

தமது தவறுகளுக்குக்கூட "ஐ.தே. கட்சி காலத்தில் மட்டும் என்ன நடந்ததாம்?" என்ற ரீதியில்தான் பதில் சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள்.

**எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுக்களுக்கு நேராகப் பதில் கூறுவதைவிடுத்து அக்கட்சி பதவியில் இருந்தபோது செய்த தவறுகளை அடுக்கிக்காட்டி வாயை அடைக்கச் செய்யவே ஆட்சியாளர்கள் முனைந்து வருகின்றனர்.**

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது எதிர்க்கட்சியை எதிரிக் கட்சியாக கருதியே அவர்களும் முகம் கொடுத்து வந்தனர். இப்போது பொது ஜன முன்னணி ஆட்சியாளர்களும் எதிர்க்கட்சியை எதிரிக்கட்சியாக கருதியே தமது அணுகுமுறைகளை அமைத்துக் கொண்டுள்ளனர்.

எனவே- ஜனநாயக கட்டமைப்பில் எதிர்க்கட்சி என்பது நிழல் அரசாங்கம் போன்றது. ஜனநாயக கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்களில் ஒன்று என்பதெல்லாம் நம்நாட்டு அரசியலில் மறைந்து போயுள்ளன.

இதன் விளைவாகவே பொதுவான தேசியப் பிரச்சனைகளில் ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையேயான கருத்தொருமிப்பு ஏற்படுவது என்பதும் இயலாத ஒன்றாகிவிட்டது.

**இவ்வாறான விரிசல் நிலையை இல்லாதொழிக்கும் அறிகுறிகளோ, ஆக்கபூர்வமான அணுகுமுறைகளோ இப்போதுகூட காணப்படவில்லை. அதற்கு மாறாக மேலும் விரிசல்கள் அதிகரித்தே வருகின்றன.**

**எனவே- இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாண ஐ.தே.கட்சியின் இணக்கத்தையும் பெறுவது, தென்னிலங்கை அரசியலில் ஐ.தே.கட்சியை ஓரம் கட்டும் நடவடிக்கைகளையும் தொடர்வது என்ற நிலைப்பாடு இரண்டு தோணியில் கால்வைப்பது போன்றதாகும்.**

"அரசியல் தீர்வுக்கு இணக்கம் காண ஐ.தே.கட்சியுடன் தொடர்ந்து பேசுவோம்" என்றும் நீதியமைச்சர் கூறியிருக்கிறார்.

தம்மால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணைகள், சாட்சியங்கள் என்பவற்றை பொதுஜன முன்னணியினர் ஏற்றுக்கொள்வார்களேயானால், ஐ.தே.கட்சி இந்த நாட்டின் மோசமான பயங்கரவாத கட்சி என்றுதான் கருதவேண்டியவர்களாவர்.

பட்டலந்த ஆணைக்குழு விசாரணைகளும், அங்கு அளிக்கப்படும் சாட்சியங்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய தலைமையும் கொலை யுகத்தின் பங்காளிகள் என்று நிரூபிக்கும் திசையிலேயே செல்கின்றன.

பொது ஜன முன்னணியினரும் ஐ.தே.கட்சியினர் கொலைகார காலாசாரத்தின் சிருஷ்டிகர்த்தாக்கள் என்றும், மறுபடி அவர்கள் ஆட்சிக்கு வந்தால் கொலையுகம் தொடரும் என்றுமே கூறிவருகின்றனர்.

அவ்வாறான கட்சியினர் இனப்பிரச்சனை தீர்வில் மட்டும் ஒத்துழைத்து, சமாதான யுகம் ஒன்றை உருவாக்க முன்வருவர் என்று மட்டும் ஆட்சியாளர்கள் எப்படி நம்புகின்றனர்? என்பதுதான் முன்னுக்கு பின் முரணான நிலைப்பாடாக அமைந்துள்ளது.

தென்னிலங்கையில் தனது அரசியல் எதிரியான ஐ.தே.கட்சியின் விடயத்திலும் சரி, இனப்பிரச்சனை தீர்வு விடயத்திலும் சரி குழப்பமானதும், முன்னுக்கு பின் முரணானதுமான அணுகுமுறையையே ஆட்சியாளர்கள் கொண்டிருக்கின்றனர்.

**"புலிகளுடன் பேசுவதானால் ஐ.தே.கட்சியுடன் அரசியல் தீர்வு விடயத்தில் இணக்கம் ஏற்பட்ட பின்னரே பேச முடியும்" என்று நீதியமைச்சர் கூறியிருப்பதும் ஆட்சியாளர்களின் முன்னைய கூற்றுக்களுக்கு முரண்பாடாகவே காணப்படுகிறது.**

"புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயாராக இல்லை. அரசியல் பேச்சுக்களில் அவர்களுக்கு ஆர்வம் இல்லை. அரசியல் தீர்வு பேச்சை அரசு ஆரம்பிக்க விரும்பிய தருணத்திலேயே புலிகள் போரை ஆரம்பித்தனர். அதனால்தான் போர் மூலம் சமாதானத்தை கொண்டுவர நிர்ப்பந்திக்கப்பட்டோம்" என்று ஆட்சியாளர்கள் கூறிவந்தனர்.

ஆனால், நீதியமைச்சரோ, புலிகளுடன் பேசுவதானால் அரசியல் தீர்வுடன்தான் செல்ல வேண்டும். அதற்கு ஐ.தே.கட்சியின் இணக்கம் இருக்கவேண்டும் என்றுள்ளார்.

**புலிகளுடன் தற்போது அரசியல் பேச்சு நடத்துவதாயின் வெறுங்கையுடன்தான் செல்ல வேண்டியிருக்கும் என்பதையே நீதியமைச்சர் அவர்கள் சொல்லாமல் சொல்லியுள்ளார்.**

**அரசியல் பேச்சு நடத்த ஆயத்தமில்லாத நிலையிலும், யுத்தம் நடத்த மட்டும் ஆயுத படை பலம் கையில் உள்ள நிலையிலும்தான் ஆட்சியாளர்கள் உள்ளனர் என்பதே நீதியமைச்சரின் கூற்றில் இருந்து வெளிப்பட்டுள்ளது.**

ஐ.தே.கட்சி ஒருபோதும் இனப்பிரச்சனை தீர்வுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்பதையே நன்கு அவதானிக்க முடிகிறது. எனவே ஐ.தே.கட்சியின் பக்கம் கைகாட்டிவிட்டு தமக்கு சாதகமான முறையில் அரசியல், இராணுவ நிலவரங்களை முன்னெடுக்கவே ஆட்சியாளர்களும் விரும்பி நிற்கின்றனர்.

இந்நிலையில் சமாதான யுகம் என்பது கண்ணுக்கெட்டாத தொலைவில் உள்ள ஒன்றாகவே தொடர்ந்தும் இருந்துவரப் போகிறது.

## களக் காட்சிகள்



ஓமந்தை ஊடறுப்பு தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட 120 மி.மீற்றர் ஆட்டிலெறி காவு வண்டிகள் ஏனைய பாகங்கள் படையினரிடம்.



ஓமந்தையில் 120 மி.மீ ஆட்டிலெறி பாகங்களையும், ஷெல்களையும் புலிகள் தூக்கிச் செல்கின்றனர். ஓமந்தையில் ஆட்டிலெறிகள் புலிகளின் கையில் செல்லாமல் படையினரால் அழிக்கப்பட்டதாக செய்தி கூறப்பட்டது தெரிந்ததே.



காவலரணில் படைவீரர்-
உற்சாகப்படுத்தும் பிரதி பாதுகாப்பு அமைச்சர்.

# பாகம் 2

# கொள்ளை ராணி பூலான்தேவி 61

தருவது ரசிகன்



பூலான்

**கடந்த வாரம்**

**கிராமத்து பண்ணையாரான பண்டிதர் வீட்டில் ஸ்ரீராம் குழுவினருக்கு விருந்துபசாரம் நடந்தது. மல்லாமீது பிரியம் உள்ளவரான பண்டிதர் பூலான் தப்பிச் செல்ல உதவுகிறார். பணமும், துப்பாக்கியும் கொடுத்து பூலானை வழியனுப்புகிறார். இனி....**

பூலானும் பிக்குவும் யார் கண்ணிலும் படாமல் ஜமுனா நதிக்கரைக்கு வந்து சேர்ந்தனர்.

நதியைக் கடக்கும்வரை எந்நேரமும் ஆபத்து சூழ்ந்துவிடக்கூடும். ஸ்ரீராமின் ஆட்களுக்கு தாங்கள் தப்பியது தெரிந்தால் முதலில் நதிக்கரைக்குத்தான் வருவார்கள் என்பது பூலானுக்கு தெரிந்தே இருந்தது.

எத்தனை விரைவாக நதியைக் கடக்க முடியுமோ அத்தனைக்கு அத்தனை பத்திரமாக இருக்கும் என்று நினைத்தபடிதான் பூலான் ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தாள். அவள் பின்னாலேயே பிக்குவும் பாதுகாப்பாக வந்தான். தம்மை யாராவது பின் தொடர்கிறார்களா என்று திரும்பித் திருப்பி பார்த்தபடியே அவன் பூலானைத் தொடர்ந்தான்.

நதிக்கரையில் படகுகள் எதுவும் அப்போது இருக்கவில்லை. ஒரு படகாவது நிற்கும் என்று எதிர்பார்த்து வந்த பூலானுக்கு பலத்த ஏமாற்றமாகிப் போய்விட்டது.

தப்பிக்கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்தால் பூலானுக்கு ஏற்பட்டிருந்த நம்பிக்கையும், உத்வேகமும்கூட படகு எதனையும் காணவில்லை என்றதும் சின்னாபின்னமாகி விட்டது.

ஜமுனா நதி நீரை தாகம் தீரும்வரை கைகளால் அள்ளிப் பருகினாள் பூலான். முகத்திலும் நீரால் அடித்துக் கொண்டாள்.

சில்லென்ற நீர் வயிற்றுக்குள் சென்றதும், முகத்தில் பட்டதும் புத்துணர்ச்சியாக இருந்தது. படகு வரும் என்று காத்திருப்பதைவிட நதிக்கரை ஓரமாக நடந்து செல்வதுதான் சரியாக இருக்கும் என்று நினைத்தாள் பூலான்.

தனது யோசனையை பிக்குவிடமும் கூறினாள். அவனும் தலையசைத்தான். பிக்கு நீண்டகாலமாக கொள்ளைக் கோஷ்டியில் இருந்தமையால், அவனுக்கு வழிகள் தெரிந்திருந்தன.

"பூலான்ஜி" என்றே மரியாதையுடன் அழைத்தான். "பூலான்ஜி! நாங்கள் இப்படியே நடந்துபோய் தெற்கில் திரும்பினால் தெஹங்கான் என்றொரு கிராமம் வரும். ஆனால்...." என்று முடிக்காமல் இழுத்தான்.

"என்ன, சொல்லு" என்றாள் பூலான்.

"அந்தக் கிராமத்தில் பண்ணையார் ஜாதியினர்தான் ஆதிக்கம். நம்மை அடையாளம் கண்டுகொண்டால் கொன்று போட்டுவிடுவார்கள்," என்றான் பிக்கு.

"இங்கு நின்று கொண்டிருந்தாலும் ஸ்ரீராமின் ஆட்கள் எங்களைக் கண்டு பிடித்து கொல்லத்தான் போகிறார்கள்," என்றாள் பூலான். "சரி, பாதையைக் காட்டு. தெரிந்த பிசாசுகளைவிட தெரியாத பிசாசுகள் மேல்," என்று பிக்குவை துரிதப்படுத்தினாள் பூலான்.

பிக்கு பயந்தது பூலானை நினைத்துத்தான். அவளுக்கு ஏதாவது ஆபத்து நேருமோ என்றுதான் முதலில் தயங்கினான். பூலான் சொன்னதும் சரியென்றுபட்டதால் பாதையைக் காட்டிக்கொண்டு முன்னால் சென்றான்.

பண்டிதர் வீட்டில் நிறைவெறியில் புரண்ட லாலாராமுக்கு பூலான் ஞாபகம் வந்துவிட்டது. இன்று தன் ஆண்மையை நிரூபித்துக்காட்டவேண்டும் என்று துருதுருப்பாக இருந்தது.

அவன் தள்ளாடியபடியே எழுந்து பூலான் வைக்கப்பட்டிருந்த அறையை நோக்கிச் சென்றான். "அடியே நாயே!" என்று உளறியபடியே கதவைத் தள்ளினான். கதவு பூட்டப்பட்டிருந்தது.

பண்டிதரை அழைத்து சாவியைக் கேட்க பொறுமையில்லை. காலால் எட்டி எட்டி உதைத்தான். கதவு அசையவில்லை.

கதவை உதைத்த சத்தம் கேட்டு பண்டிதர் வந்துவிட்டார். ஏதோ ஒரு அசட்டுத் துணிச்சலிலும், உந்துதலிலும் பூலானை தப்பவைக்கும்வரை இல்லாத பயம், பூலான் தப்பிச் சென்ற பின்னர்தான் பண்டிதருக்கு ஏற்பட்டிருந்தது.

ஸ்ரீராம் கொடும் விஷப்பாம்பு என்பது பண்டிதருக்குத் தெரியும். பூலான் தப்பிச் செல்ல உதவியது தெரிந்தால் தன் உயிரை எடுக்கவும் தயங்கமாட்டான் என்பதும் தெரியும்.

கதவை உதைத்துக் கொண்டிருந்த லாலா ராமிடம் வந்த பண்டிதர் "ஏன் உதைக்கிறாய்? கதவை திறக்கவேண்டும் என்றால் என்னிடம் சொல்லியிருக்கலாமே, இந்தா சாவி," என்று கொடுத்துவிட்டுப் போய்விட்டார்.

லாலா ராமிடம் சாவியைக் கொடுத்துவிட்டு தன் அறைக்குள் சென்ற பண்டிதர் காதுகளைத் தீட்டி வைத்துக்கொண்டு கதவின் பின்னால் மறைந்து நின்று கொண்டார்.

பூட்டுக்குள் சாவியை புகுத்த முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தான் லாலா ராம். துவாரம் அவன் கண்களுக்கு சரியாகத் தெரியவில்லை. சாவியையும் நேராகப் பிடித்து செலுத்த முடியாமல் அவன் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

"டேய் நாய்களே வாங்கடா இங்கே!" என்று இரைந்து கத்தினான். யார் காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லை. எல்லோரும் குடிமயக்கத்தில் புரண்டு கிடந்தார்கள்.

பண்டிதரின் இதயம் படபடத்துக் கொண்டிருந்தது. அதே சமயம் அவரது மூளையில் வேறொரு யோசனையும் தோன்றியது.

'நிறைவெறியில் இருக்கும் லாலா ராம் தானாகவே கதவைத் திறந்து உள்ளே போனால், அவன் பின்னால் சென்று தலையில் ஒரு போடு போட்டுவிடலாம். லாலா ராமை அடித்துப்போட்டு பூலான் தப்பிவிட்டாள்' என்று கதையை மாற்றி விடலாம் என்று நினைத்தார்.

லாலா ராம் தானாகவே கதவைத் திறந்துவிட வேண்டும் என்று பிரார்த்திக்கத் தொடங்கிவிட்டார் பண்டிதர்.

அவரது பிரார்த்தனை பலிக்கவில்லை. சாவித் துவாரத்தை கைகளால் தேடிப் பார்த்து தோற்றுப்போன லாலா ராம் தள்ளாடியபடியே திரும்பிச் சென்று புரண்டு கிடந்த ஒருத்தனை காலால் உதைத்து எழுப்பினான். எழுப்பப்பட்டவனுக்கு அத்தனை போதையில்லை.

லாலா ராமிடம் சாவியைப் பெற்று கதவைத் திறந்து விட்டான். அவனிடமே லாலா ராம்; "டேய், உள்ளே அந்த சிறுக்கி கிடக்கிறாள். உதைத்து எழுப்படா போ!"

பண்டிதருக்கு படபடப்பு அதிகமாகி இதயம் தட் தட் என்று அடிக்கத் தொடங்கி விட்டது.

எதிர்பார்த்ததுபோலவே நடந்தது.

உள்ளே சென்றவன் ஏதோ உயிரே போய்க்கொண்டிருப்பதுபோல பதறிக்கொண்டு வெளியே ஓடிவந்தான்: "அவளைக் காணவில்லை. கூட இருந்தவனும் இல்லை. இரண்டுபேரும் ஓடிவிட்டார்கள்," என்றான்.

நிறைவெறியில் தள்ளாடிக்கொண்டிருந்த லாலா ராமுக்கு அவன் சொன்ன செய்தியின் தீவிரம் புரியவில்லை. அவன் சொன்னதை சரியாக விளங்கிக்கொள்ளமுடியவில்லை.

"எங்கேடா அவள்? மு...முதலில் எனக்கு பின்னர் உனக்கு... எனக்கு முதல் விருந்து. பின்னர் உனக்கு அவள் முழுக்க..." உளறியபடியே தள்ளாடி தரையில் அமர்ந்தான்.

லாலா ராமை வெறுப்போடு பார்த்துவிட்டு ஸ்ரீராமைத்தேடி அவன் ஓடினான். ஸ்ரீராமும் குசுமாவும் இருந்த அறைக்கதவை மரியாதையாக தட்டினான். உள்ளே இருந்து பதில் வராமல்போனதால் சற்றுப் பலமாகவே தட்டினான்.

அப்போதுதான் அசதியில் தூங்க ஆரம்பித்த ஸ்ரீராம், கதவு தட்டப்படும் சத்தம் கேட்டதும் எழுந்துவிட்டான். கதவைத் திறக்கப் போனபோதுதான் தன் உடம்பில் ஏதுமில்லை என்பது நினைவுக்கு வந்தது. குசுமாவையும் ஒரு போர்வையால் மூடிவிட்டான். அவள் அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள். ஸ்ரீராமுக்கு பாதிப் போதை தெளிந்திருந்தது. குசுமா தெளியவைத்திருந்தாள்.

செய்தியைக் கேட்டதும் ஏற்பட்ட கோபத்தில் செய்தி சொல்ல வந்தவனின் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டான் ஸ்ரீராம்.

"என்னடா செய்து கொண்டிருந்தீர்கள்? அந்த வேசி உங்களை எல்லாம் மயக்கிப் போட்டு போய்விட்டாளாடா?"

ஸ்ரீராம் போட்ட சத்தத்தில் அவன் ஆட்களில் பாதிப்பேர் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்துவிட்டார்கள்.

பூலான் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்று ஆராய்ந்த ஸ்ரீராமுக்கு, பின்பக்க வழியாக அவள் தப்பிச்சென்றிருப்பது தெரிந்துவிட்டது.

பூலான் தப்பிச்சென்ற பின்பக்க வழியை சற்றுநேரம் வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்ற ஸ்ரீராம், "பண்டிதரை கூட்டிவாருங்கள்!" என்றான்.

அப்போதுதான் தூக்கத்தில் இருந்து எழுந்தவர்போல ஸ்ரீராம் முன்னால் வந்த பண்டிதரின் நெஞ்சில் ஸ்ரீராமின் துப்பாக்கி முனை உரசிக்கொண்டு நின்றது.

பண்டிதர் அதனை எதிர்பார்க்கவில்லை. அவர் கண்களில் மரணபயம் தெரிந்தது.

"அடே பண்ணையார்! பூலான் உனக்கும் வைப்பாட்டியாடா?" என்று கேட்டான் ஸ்ரீராம்.

பண்டிதர் தன் பயத்தையும், படபடப்பையும் மறைக்க முயன்றவாறு,"விளையாடாதே ஸ்ரீராம். பூலானை நான் ஏன் தப்பவைக்கப் போகிறேன்?" என்றார். அவர் தன்னையறியாமல் செய்த தவறு அதுதான்.

ஸ்ரீராம் நரித்தனமாக நகைத்தான். "பூலான் தப்பியது உனக்கு எப்படித் தெரியும்? அவள் தப்பிச் சென்றுவிட்டாள் என்று நான் உனக்கு சொல்லவே இல்லையே?" என்றான்.

பண்டிதர் வெலவெலத்துப் போனார். அவர் உடல் பயத்தில் வியர்த்துப்போனது.

"உன் மகன் மல்லாவின் கூட்டாளி என்பது எனக்குத் தெரியும். அதுதான் எனக்குச் சந்தேகம் வந்தது. என் சந்தேகம் சரியாய் போய்விட்டது. அவள் என்னிடமிருந்து தப்பவே முடியாதடா. அவள் என் கையில் கிடைத்ததும் என்ன செய்வேன் தெரியுமா?"

பண்டிதரின் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. அவர் பதில் சொல்லவில்லை. ஸ்ரீராம்தான் சொன்னான்: "சுடுவேனடா, நாயைச் சுடுவது மாதிரி சுடுவேன். எப்படிச் சுடுவேன் தெரியுமா? இப்படித்தான்."

'டுமீல்!'

பண்டிதரின் மார்பின் மையத்தில் குண்டு துளை போட்டது.

அப்படியே மடங்கி, வாய் பிளந்தபடி மல்லாந்து விழுந்தார் பண்டிதர்.

அவர் முச்சு அடங்கிப்போனது.

பண்டிதரின் வீட்டை சூறையாடுமாறு உத்தரவிட்டான் ஸ்ரீராம்.

பூலானும், பிக்குவும் தெஹங்கான் கிராமத்தை சென்றடைந்தபோது இருட்டிவிட்டது. அக் கிராமத்துக்கு அடுத்ததாக உள்ள கிராமம் நர்ஹன். அங்கு சென்றுவிட்டால் மல்லாவுக்கு வேண்டப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உதவியைப் பெறலாம் என்று பிக்கு கூறினான்.

தெஹங்கான் கிராமத்துக்குள் பூலானும், பிக்குவும் காலடி எடுத்துவைத்போதே ஆபத்து வரப்போகிறது என்று தெரிந்து கொண்டார்கள்.

பூலானையும் அவள் கையில் இருந்த துப்பாக்கியையும் பார்த்துவிட்டு கிராமவாசிகள் சிலர் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தனர்.

"நில்லுங்கள், உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம். நில்லுங்கள்!" என்று பூலான் உரத்துக் குரல் கொடுத்தாள்.

ஓடியவர்கள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கையில் துப்பாக்கியுடன் திரியும் பயங்கரமான கொள்ளைக்காரி பூலான் தேவி என்று அவர்கள் பல கதைகளை கேட்டிருந்தனர்.

அதனால் தாங்கள் இப்போது கண்டதும் பூலான்தான் என்பதில் அவர்களுக்கு ஐயம் இருக்கவில்லை.

"கிராமத்து ஆட்களையெல்லாம் கூட்டி வரத்தான் ஓடுகிறார்கள்," என்றான் பிக்கு.

பூலானுக்கும் அது தெரிந்தது. "உனக்கு பயமாக இருக்கிறதா?" என்று பிக்குவிடம் கேட்டாள்.

"இல்லை, ஆனால்..... உங்களுக்கு..." என்று ஏதோ சொல்ல வந்தவனை சைகையால் நிறுத்தி, "என்னாகும் என்று பார்த்துவிடலாம், ஓடினால்தான் நாய்கள் துரத்தும். எனக்குத் தெரியும். வா பார்க்கலாம்." நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு செல்லும் பூலானை பிரமிப்புக் கலந்து பார்த்துக் கொண்டே பின்னால் சென்றான் பிக்கு.

சிறிதுதூரம் சென்றபோது, ஒரு கும்பல் கம்புகள், தடிகள், கத்திகளுடன் தங்களை நோக்கி ஓடிவருவதை அவர்கள் கண்டனர்.

இரைந்து கூச்சல் போட்டுக் கொண்டு புழுதி கிளம்ப ஓடிவந்துகொண்டிருந்தது அந்தக் கும்பல்.

பிக்கு சட்டென்று பூலானின் முன்னால் நகர்ந்து அவளை மறைப்பதுபோல் நின்று கொண்டான்.

பூலானுக்கு அவன் செயல் பிடித்தமாக இருக்கவில்லை. "முதுகின் பின்னால் பதுங்கும் கோழையல்ல நான். விலகிநில் பிக்கு!" என்றாள்.

கெட்டவார்த்தைகளால் திட்டிக்கொண்டே கும்பல் அவர்களை நெருங்கியது.

பூலான் அஞ்சவில்லை. பூலானின் கண்களில் கலக்கம் இல்லை. அவர்களையே பார்த்துக்கொண்டு நிற்கும் பூலானையும், பிக்குவையும் கண்டதும் கும்பலின் வேகம் சற்றுத் தணிந்தது.

பூலான் பற்றி அவர்கள் கேள்விப்பட்ட கதைகள் ஞாபகம் வந்தன.

அதேநேரம் பூலானின் குரல் ஓங்கி ஒலித்தது, "நில்லுங்கடா!"

கம்பீரமாக ஆணையிடுவதுபோல ஒலித்த பூலானின் குரல் கேட்டதும் ஆணியடித்தது போல நின்றது கும்பல்.

கும்பலில் முன்னால் நின்றவர்கள் துணுக்குற்றபோதும் பின்னால் நின்ற சிலர் பூலானை நோக்கி தடிகளையும், கம்புகளையும் எறிந்தனர்.

அதனால் சற்று துணிச்சல் பெற்ற கும்பல் மறுபடி பூலானை நோக்கி முன்னேறியது.

தன்முன்னால் விழுந்த கம்பொன்றை பிக்கு தன் கையில் எடுத்துக்கொண்டான்.

பூலானின் துப்பாக்கி உயர்ந்தது.

'டுமீல்.'

கும்பலில் முன்னால் வந்தவன் ஒருத்தன் மார்பைப்பிடித்தபடி "அய்யோ...அம்... அம்மா!" என்றான்.

"சுடுகிறாளடா..." கும்பல் கூச்சலிட்டது.

'டுமீல்'

கும்பல் சதறி தலைதெறிக்க ஓடத்தொடங்கியது.

'-டுமீல்-'

திரும்பி ஓடியவர்களில் ஒருத்தனின் தொடையில் மூன்றாவது குண்டு பாய்ந்தது.

பூலான் பிக்குவைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினாள். தன்கவலையெல்லாம் மறந்து சிரித்தாள். சிரித்துக் கொண்டே இருந்தாள்.

கும்பலில் சிலர் கிராமத்துக்கு வெளியே இருந்த பொலிஸ் நிலையத்தில் தகவல் சொல்ல ஓடிக்கொண்டிருந்தனர்.

**(தொடர்ந்து வரும்)**

# டயானா டோடி

## மோப்பம் பிடித்தது எம்ஐ.6

### வெளிவராத சங்கதிகள்

இளவரசி டயானாவுடன் மோட்டார்கார் விபத்தில் சிக்கி உயிர்வீழ்ந்த டோடி அல் ஃபயட் பற்றிய முழுவிபரங்களும் அடங்கிய விபரக் கொத்து ஒன்றினை-பிரிட்டனின் அரச குடும்ப உளவுப் பிரிவான MI-6 எலிசபத் மகாராணியிடம் கடந்த மாதம் கையளித்தது. அரச குடும்பத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் குழு ஒன்று மகாராணியின் தலைமையில்கூடி இவ்விபரக் கொத்து தொடர்பான அறிக்கையை ஆராயவிருக்கும் காலகட்டத்தில் டயானாவும் டோடியும் விபத்தில் சிக்கி மரணமாகிவிட்டனர்.

எலிசபத் மகாராணியாரைத் தொடர்ந்து பிரிட்டனின் சிம்மாசனத்தில் ஏறும் உரிமையை டயானா-இளவரசர் சார்ள்ஸ் ஆகியோரின் மூத்த மகனான வில்லியம்ஸ் பெற்றிருந்தார். சார்ள்ஸ்-டயானா விவாகரத்துச் செய்து கொண்டிருந்தமையினால் சார்ள்ஸ் சிம்மாசனம் ஏறும் தகுதியை இழந்துவிட்டார். ஆகவே இவர்களுடைய மூத்த மகனுக்கே அரசராகும் தகுதி உண்டு.



டோடியின் தந்தை முஹமட் அல் ஃபயட்டுடன் டயானா

இளவரசர் வில்லியம்சுக்கு இப்பொழுது 15 வயதாகிறது. இப்பொழுது ஈட்டன் கலாசாலையில் கல்வி பயின்றுவருகிறார். வருங்கால அரசராகப் போகும் ஒருவரின் சிறியதந்தை என்ற அந்தஸ்த்தைப் பெறும் தகுதி டோடிக்கு இல்லை என்று உளவுப் பிரிவினர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். டோடி எப்பொழுதும் பலதரப் பெண்களுடனும் உல்லாசமாகப் பொழுது போக்குபவர். பெண்களுடன் சல்லாபம் செய்பவர் என்று அவர்கள் கண்டுபிடித்தனர். டயானாவை டோடியுடன் இணைத்து பலதரப்பட்ட வதந்திகளும் பரவ ஆரம்பித்ததும் MI-6 உளவுப் பிரிவினர் தமது விசாரணைகளை உலகளாவிய ரீதியில் விரிவுபடுத்தினர். அமெரிக்கா, எகிப்து போன்ற நாடுகளிலுள்ள தனியார் உளவுப் பிரிவினரின் உதவியையும் பெற்று டோடி பற்றிய தமது அறிக்கையைத் தயாரித்துள்ளனர்.

"பிரிட்டிஷ் அரசகுடும்பத்தின்- எதிர்கால அரசபீடமேறும் வாரிசுகளுடன் தொடர்புபடுவதனால்- அரசகுடும்பத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் ஒவ்வொருவரைப் பற்றியும் முழு விபரங்களை அறிந்து மகாராணிக்குத் தெரியப்படுத்துவது எமது கடமை" என்று MI-6 குழுவின் தலைவர்கள் தெரிவித்தனர்.

உலகளாவிய நிலையில் உயர்ந்த நிலையிலிருக்கும் அரபுக்களின் முழு விபரங்களையும் ஃபிரெஞ்சு பாதுகாப்புப் பிரிவினரும் இஸ்ரேலின் மொசாட் உளவுப்படையும் வைத்திருக்கிறது. இவர்களுடைய உதவிகளையும் MI-6 பெற்றுக்கொண்டது.

டோடி ஒரு எகிப்து நாட்டுக்குடிமகன், இருப்பினும் அமெரிக்காவில் கலிஃபோர்னியாவில் பல மாளிகைகளை தனதுடமையாக்கிக் கொண்டவர். ஹொலிவுட் நடிகைகள், மொடல் அழகிகள் எல்லோரும் டோடியின் விளையாட்டுப் பொம்மைகள் என்று கூறப்படுகிறது.

டோடி டயானாவை திருமணம் முடித்தால் இங்கிலாந்தின் முடிக்குரிய இளவரசரான- வருங்கால அரசன்- வில்லியம்ஸ் மற்றும் அவன் தம்பி ஹாரி (12 வயது) ஆகியோர் மீது டோடியின் ஆதிக்கம் ஏற்படும்.

டோடி மீது- உளவுப்பிரிவினர் நடத்திய விசாரணையின்படி எத்தகைய கிரிமினல் குற்றச் சாட்டுகளும் நிரூபிக்கப்படத்தக்கதாக இல்லை. இருப்பினும் இவருடைய பெண் வேட்டைகளும் ஹொலிவுட்டில் போதை வஸ்துக்களுடன் தொடர்புடைய நெருங்கிய சிநேகிதர்களும் சற்று மிதமிஞ்சியே தென்படுவதாகத் தெரியவருகிறது.

உலகப் பணக்காரர்களில் முதலிடத்தில் இருப்பவரும் பிரபல ஆயுதக்கடத்தல்காரருமான அட்னன் கசோகி தனது சகோதரி சமீராவை முஹமட் அல் ஃபயட் என்பவருக்கு மணம் முடித்து வைத்தார். இவர்களின் மகனே டோடி அல்ஃபயெட்.

தனது தாய் மாமன் அட்னன் கசோகி மூலம் போதுமான அளவு பணத்தை டோடி பெற்றுள்ளார்.

டோடியும் அவரது சகோதரர் அலியும் 30 வருடங்களுக்கு மேலாக இங்கிலாந்தில் வசித்து வருகின்றனர். முன்னாள் பிரதமர் மார்கிரட் தச்சரின் மகன் மார்க் தச்சர் மூலம் சவுதி அரேபியாவுக்கு டொராண்டோ ஜெற்போர் விமானங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தரகு வேலைகளில் ஈடுபட்டது தொடர்பான சில குற்றச்சாட்டுக்கள் டோடி-அலி சகோதரர்கள்மீது இருப்பதனால் இவர்களுக்கு பிரிட்டிஷ் குடியுரிமை மறுக்கப்பட்டுவருகிறது.

டயானா-டோடி இருவரும் விபத்தில் சிக்குவதற்கு முன்னர் இறுதி இராப்போசனம் அருந்திய பாரிஸ் நகர்ப்புறத்திலுள்ள றிட்ஸ் ஹொட்டல் டோடியின் தகப்பன் முஹமட் அல் ஃபயட்டுக்குச் சொந்தமானதே.

MI-6 அறிக்கையின் இறுதியில் விடுக்கப்பட்டுள்ள குறிப்பு: "வருங்கால அரசனுக்கு (வில்லியம்சுக்கு) ஒரு சிறிய தகப்பனைத் தேர்ந்தெடுப்பதானால் டோடி ஃபயட் அந்த வரிசையில் ஆகக் கடைசியில் இடம் பெறத்தக்கவர்!"

# இதுதான் டோடியின் ஸ்ரைல்

டோடி அல் ஃபயட் தன் காதல் பரிசாக டயானாவுக்கு வைரமோதிரம் பரிசளித்திருந்தார். அதன் பெறுமதி கிட்டத்தட்ட ஒண்ணேகால்கோடி என்று செய்திகள் வெளியாகின. மரணமாகும்போது டயானாவின் விரலில் அந்த நட்பு மோதிரம் இருந்தது.

டோடி யாரைக் காதலித்தாலும் விலை உயர்ந்த மோதிரம் ஒன்றை பரிசாக அளிப்பதுதான் அவரது ஸ்டைல். தனது முன்னாள் காதலியான மொடல் அழகி கெல்லி ஃபிஸெருக்கும் விலை உயர்ந்த மோதிரம் ஒன்றை பரிசளித்திருந்தார் டோடி.

டோடி-டயானா காதல் மலர்ந்த பின்னர் கெல்லி ஃபிஸெர் ஒரு பேட்டியளித்திருந்தார். அப்போது கெல்லி ஃபிஸெரின் கண்களில் கண்ணீர், கைவிரலில் அந்த மோதிரம்.



"இன்னமும் ஏன் இந்த மோதிரத்தை அணிந்துள்ளீர்கள்?" என்று நிருபர்கள் கேட்டனர்.

"டோடியை இன்னமும் காதலிக்கிறேன். இனியும் காதலிப்பேன்!"

"மீண்டும் ஒன்று சேருவீர்களா?"

"இல்லை" என்று பதிலளித்தார் கெல்லி ஃபிஸெர்.

டயானாவிற்கு சாள்ஸ்சும் விலை உயர்ந்த மோதிரம் பரிசளித்திருந்தார். பின்னர் தன் காதலியான கமீலாவுக்கும் டயானாவுக்கும் கொடுத்தது போன்ற அதே ரக மோதிரத்தை பரிசளித்திருந்தார்.

துஷ்யந்தன் சகுந்தலைக்கு மோதிரம் கொடுத்த கதை புராணம். நவீன காதலர்கள் மத்தியிலும் மோதிரம்தான் பிரபலம்.




## மனிதரில் மாணிக்கம்

மனிதர்களில் மாணிக்கங்களாக திகழ்ந்தவர்கள் இறந்தபின்புதான் புனிதர்களாக கருதப்படுவார்கள். ஆனால் வாழும்போதே புனிதராக கருதப்பட்டவர் அன்னை தெரேசா. அவரது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் வருமாறு:-

1910 - அன்னை தெரேசாவின் பிறப்பு ஆக்னஸ் என்ற இயற் பெயருடன் அல்பேனிய பெற்றோருக்கு மகளாக பிறந்தார்.

1928 - அயர்லாந்து நாட்டு தலைநகரம் - டப்ளின் சென்றார். அங்கு லொரட்டா சபையின் கன்னியாஸ்திரி ஆனார்.

1929 - இந்தியா வந்தார். கல்கத்தாவில் உள்ள கொன்வென்டில் ஆசிரியையாக சேர்ந்தார்.

1948 - கல்கத்தாவில் சேரி ஒன்றில் முதல் பள்ளியை தொடங்கினார்.

1949 - அன்னை தெரேசாவின் புகழ்பெற்ற மிஷனரிஸ் ஒஃப்சாரிட்டி அமைப்பை தொடங்கியது இந்த ஆண்டில்தான்.

1971 - போப் ஆறாம் ஜோன்பாலின் அமைதி பரிசை பெற்றார்.

1979 - சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றார்.

1980 - இந்தியாவின் மிக உயர்ந்த பாரத ரத்னா விருது.

1983 - இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் விருதை, ராணி டெல்லி வந்திருந்தபோது பெற்றார்.

1986 - ஆப்பிரிக்க நாடான தன்சானியாவில் விமான விபத்திலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.

1989 - இருதய கோளாறு.

1991 - அமெரிக்காவில் அறுவை சிகிச்சை.

1993 - கல்கத்தாவில் மீண்டும் அறுவை சிகிச்சை.

1997 - மிஷனரிஸ் ஒஃப் சரிட்டிஸ் தலைமை பதவியில் இருந்து விலகி சகோதரி நிர்மலாவிடம் அந்த பொறுப்பை ஒப்படைத்தார்.

ஜூன் 18- இளவரசி டயானாவுடன் 4-வது சந்திப்பு. அமெரிக்க நகரமான நியூயோர்க்கில் இந்த சந்திப்பு நடந்தது.

செப்டம்பர் 5-ந்தேதி:- மாரடைப்பால் அன்னை தெரேசா மரணம்.

## உடையும் வெள்ளை, உள்ளமும் வெள்ளை



தகவல் பெட்டி

## சிகரெட் வில்லன்



சின்ன சின்ன சிகரெட்டுக்களை ஊதித் தள்ளுவதே உயிருக்கு உலை வைக்கும் முயற்சி என்கிறார்கள் மருத்துவர்கள். படத்தில் இருப்பதோ பிரமாண்டமான சிகரெட். இதைப் புகைத்தால் உடனே பகையாகிவிடுமே உயிருக்கு என்று மலைப்பாக இருக்கிறதா? அச்சம் தவிருங்கள். இது சிகரெட் போல இருக்கிறது ஆனால் சிகரெட் அல்ல.

சிகரெட்டுக்கு வில்லன். சீனாவில் நடந்த 'சர்வதேச புகையிலை மற்றும் ஆரோக்கியம்' தொடர்பான மாநாட்டில் சிகரெட் போன்று பிரமாண்டமாக ஃபைபர் கிளாஸ் உறைகளால் தயாரித்து காட்சிக்கு வைத்திருந்தார்கள். விரைவில் சிகரெட் போன்ற சிறு குப்பியில் ஒரு மருந்து தயாரித்து விற்பனைக்கு விடப்போகிறார்களாம். அந்த மருந்தை உபயோகித்தால் சிகரெட் பிடிப்போர் எல்லாம் சிகரெட்டைக் கண்டாலே மூக்கைச் சுளித்தபடி ஒட்டம்பிடிக்கத் தொடங்குவார்களாம். நல் முயற்சிதான். முயல்க. வெல்க.



## மகா சைக்கிள்

↑ சைக்கிளின் பெறுமதி நமக்குத்தான் தெரியும். பொருளாதாரத் தடைகளை சமாளிக்கவும் வடக்கு-கிழக்கில் கைகொடுத்து உதவியது சைக்கிள்தானே. சைக்கிளுக்கு மகா மரியாதை செலுத்த வேண்டியவர்கள் நாம்தான். அதற்கு முன்னரே அவுஸ்திரேலியா தலைநகரான சிட்னியில் மகா மகா மரியாதை கொடுத்து விட்டார்கள்.

உலகிலேயே மிகப் பெரிய சைக்கிள் இதுதான். இதன் உயரம் 18 1/2அடி. சாதாரண சைக்கிள்போலவே டயர், ஸ்டீல் குழாய்கள், மற்றும் உதிரிப் பாகங்களை கொண்டுதான் உருவாக்கி உள்ளனர்.

இந்த சைக்கிள் சவாரி செய்யக்கூடிய சைக்கிள்தான். ஆனால் இருக்கையில் அமர்ந்து செலுத்த கால்களின் நீளம்தான் போதாது. அதனால் கண்டுகளிக்க மட்டும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

சைக்கிள்மீது நின்று போஸ் கொடுப்பவர் தான் இதனை தயாரித்த சூரர். அவர் பெயர் ஜோன் லிட்டர். 18 வாரங்கள் தீவிரமாக உழைத்து உருவாக்கியுள்ளார்.

## ஒன்பது நாட்களுக்கு முன்னர்

↓ ஃபிரான்ஸ் சென்ற டயானாவும், டோடி அல்ஃபயட்டும் கடற்கரை ஹோட்டல் ஒன்றில் ஜோடியாகக் காணப்பட்டனர். டயானாவும், டோடி அல்ஃபயட்டும் விபத்தில் பலியாவதற்கு ஒன்பது நாட்களுக்கு முன்னர் ஆகஸ்ட் 22ம் திகதி எடுக்கப்பட்ட புகைப்படம் இது. ஹோட்டலின் பெயர் ஃபிரெஞ்ச் ரிவியரா றெசோர்ட். ஃபிரான்சில் சென் ரோட்பேக்ஸ் என்ற இடத்தில் உள்ளது. மரணத்திலும் பிரியாத ஜோடியாகிவிட்டனர்.

டோடி அல்ஃபயட்டுடன் தனது காதலை இம் மாதத்தில் வெளிப்படுத்தவே இருந்தார் டயானா. அதனால்தான் இவ்வாறான பகிரங்க இடங்களிலும் ஜோடியாக நடமாடினார். இறுதியாகக்கூட படப்பிடிப்பாளர்களுக்கு டயானாவும், டோடி ஃபயட்டும் வேடிக்கைதான் காட்டினார்கள். "இன்று உங்களால் எங்களைப் பிடிக்க முடியாது" என்று படப்பிடிப்பாளர்களிடம் கூறிவிட்டுத்தான் டோடியின் கார்ச்சாரதி காரைக் கிளப்பி சாலையில் சர்ரென்று வழுக்கிப் பறந்தாராம். அந்த வேகம்கூட பாரிஸ் சாலையில் சாதாரணமானதுதான். சாரதியின் மும்மடங்கு போதைதான் நிலை தடுமாறி விபத்தாக முடிந்தது.



* ரஜினி முக்கிய வேடத்தில் நடிக்கும் இந்தி 'நாட்டாமை'யான 'புல்லந்தி' படத்தை இயக்குபவர் ராமநாயுடு. இவர்தான் 'அந்தா கானூன்' படத்தின் மூலம் ரஜினியை இந்தியில் அறிமுகம் செய்தவர்.

* சேரனின் 'காதல் ரோஜாவே' படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகியுள்ளவர் பூஜாகுமார். இவர் கார்த்திக்கிற்கு ஜோடியாக நடிக்க புதிய படமொன்றில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

* 'சூர்யவம்சம்' படத்தில் இடம்பெறும் 'ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ...' என்று தொடங்கும் பாடலை இயற்றியவர் ரவிசங்கர் என்பவர். இவர் இப்படத்தின் இயக்குநரான விக்ரமனிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றுபவர்.

* 'உல்லாசம்' படத் தோல்வியால் துவண்டு போயிருந்தவர்களில், இப்படத்தின் கதாநாயகி மகேஸ்வரியும் அடக்கம். இப்போது மகேஸ்வரி மிகவும் சந்தோஷமாக இருக்கிறார். காரணம் இவர் நடித்த 'பெள்ளி' என்ற தெலுங்குப்படம் பெரு வெற்றிபெற்றுள்ளது.

# மினி சினி

* 'கர்ணா' வெற்றிப்படத்தை தந்த அர்ஜுன்-செல்வா கூட்டணி விரைவில் புதிய படமொன்றின் மூலம் மீண்டும் இணைகிறார்கள். இந்தப் படத்தின் பெயர் என்ன தெரியுமா? 'ஜெய்சூர்யா.'

* 'சேனாதிபதி' படத்தைத் தயாரித்த கே. பாலு அடுத்து சத்யராஜை வைத்து ஒரு படத்தைத் தயாரிக்கப்போகிறார். இந்தப் படத்தை 'வள்ளல்' படத்தை இயக்கிய ராஜ்கபூர் இயக்கவிருக்கிறார்.

* 'தேவதை', 'நந்தினி' படங்களில் நடித்துள்ள கீர்த்தி ரெட்டி தற்போது இரண்டு புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இவற்றில் அஜித் ஜோடியாக ஒரு படத்திலும், விக்ரம் ஜோடியாக ஒரு படத்திலும் நடிக்கிறார் கீர்த்தி ரெட்டி.

* 'லவ் டுடே' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமான இளைஞர் சிவா. தற்போது இவர் ஐந்து படங்களுக்கு இசையமைக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்.

* 'பிஸ்தா' படத்திற்குப் பின்னர், அதில் நக்மாவின் தந்தையாக நடித்த இயக்குநர் மௌலிக்கு ஏகப்பட்ட படங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்துள்ளன. மணிவண்ணன் போன்று நடிப்பில் ஈடுபடப்போகிறாராம்.

* மணிரத்னம் இந்தியில் ஷாருக்கானை வைத்து ஒரு படத்தை இயக்கி வருகிறார் என்பது எல்லாருக்கும் தெரியும். இந்தப் படத்தின் தயாரிப்பாளர் யார் தெரியுமா? மணியின் நண்பரும், இயக்குநருமான ராம்கோபால் வர்மா.

## பெரிய நாய்

ஒரு மிக முக்கியமான தகவல். நடிகைகளில் மிகமிகப் பெரிய நாய் வளர்ப்பவர் ரம்பா. மூன்றரை அடி உயரத்தில் கொழு கொழு என்றிருக்கிறதாம். பராமரிப்புச் செலவு மட்டும் மாதம் 20 ஆயிரம் ரூபாய். சாப்பாட்டுச் செலவு தனி. நாய்க்கு டைசன் என்று பெயர் வைத்திருக்கிறார். டைசன் என்றால் ரம்பாவுக்கு பிடிக்குமாம். அதற்காக இப்படியா? டைசனுக்கு தெரிந்தால் தொலைத்து விடுவார்.

## தலைவர் ஆவாரா விஜயகாந்த்?

இயக்குநர்கள், திரையுலக தொழிலாளர்கள் பிரச்சனை ஒருபுறமிருக்க, நடிகர் சங்கமும் இரண்டாகத்தான் பிளவுபட்டு நிற்கிறது.

ராதாரவி தலைமையில் உள்ளது தென்னிந்திய நடிகர் சங்கம். எம்.ஜி.ஆர்., சிவாஜி, மேஜர் சுந்தர்ராஜன் என்று பிரபல நடிகர்கள் பலர் முன்னர் தலைவர்களாக இருந்த சங்கம் இது. இந்தச் சங்கத்தில் ராதாரவி ஊழல் செய்வதாகக் கூறி போட்டியாக ஆரம்பிக்கப்பட்ட சங்கம் ஆர்டிஸ்ட் யூனியன். அதன் தலைவர் விஜயகுமார்.


ராதாரவி பக்கம் நிற்பவர் விஜயகாந்த். இப்போது சரத்குமார் நக்மா, ரம்பா, ரேவதி என்று ஏகப்பட்ட நடிக நடிகையர் நடிகர் சங்கப் பக்கம் நிற்கிறார்கள்.

நடிகர் சங்கத்தையும், ஆர்டிஸ்ட் யூனியனையும் இணைத்து பொதுவாக தலைவராக ஒருவரை தேர்தலில் நிறுத்தி தேர்ந்தெடுக்க நினைக்கிறார்கள். விஜயகாந்தை தலைவராக்கலாம் என்பதுதான் பலரது எண்ணம்.

ஆனால் விஜயகாந்த் தயங்குகிறாராம். திரையுலகில் ஏகப்பட்ட பிரச்சனைகள் இருப்பதால் இந்த நேரத்தில் தலைமைப்பதவி ஏற்பது சரியாகாது என்று அவரது நண்பர்களும் கூறியிருக்கிறார்களாம். ஆனால் ராதாரவியோ விஜயகாந்தை பொறுப்பேற்கக் கூறுகிறார். "நீங்கள் நில்லுங்க கப்டன். நான் உங்க பின்னாடி நிற்கிறேன்." என்கிறாராம் ராதாரவி.

## நிபந்தனை

நடிகை மந்த்ராவை ஒப்பந்தம் செய்யச் செல்பவர்களிடம் அவர் கேட்கும் சம்பளம் மூன்று லகரம். குறைத்துக் கொள்ளச் சொன்னால் மந்த்ரா போடும் நிபந்தனை என்ன தெரியுமா? "சேலையுடன் மட்டும்தான் நடிப்பேன். ஆடைக் குறைப்பு கிடையாது." பிறகெதற்கு மந்த்ரா என்றுவிட்டு போய்விடுகிறார்கள் தயாரிப்பாளர்கள்.



நவீன்-சிம்ரான்
படம்: இதுதான் காதல்

# சினி விசிட்

## தயாராகிறது 'ஹிரோசிமா'

'பாட்ஷா' படத்தில் ரஜினியை கொல்ல ரகுவரனுடன் சேர்ந்து சதித்திட்டம் போடும் வில்லனாகவும், நக்மாவின் தந்தையாகவும் நடித்தவர் தேவன். 'பதவிப்பிரமாணம்' உட்பட பல படங்களில் வில்லனாக நடித்த தேவனுக்கு இப்போது கதாநாயகன் அந்தஸ்து கிடைத்திருக்கிறது.

'ஹிரோசிமா' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் தேவன். அவரது ஜோடியாக புதுமுகம் சிந்து நடிக்கிறார். சாருஹாசன், ஒருவிரல் கிருஷ்ணராவ், மலையாள நகைச்சுவை நடிகர் இந்திரன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

மலையாள முன்னணி இயக்குநரான பி.கே.ஜோசப் படத்தை இயக்குகிறார்.

## பாம்பு விழிகள்

தமிழ்ப்படவுலக நடிகைகளிடம் இப்போது புதுவிதமான பாஷன் பரவிவருகிறது. கண்களில் விதம் விதமான 'கான்டெக்ட் லென்ஸ்' பொருத்திக் கொண்டு காண்போரை கலங்க உலாவருகிறார்கள். சுவாதியும், ரவளியும் பாம்புக்கண்கள் போல அணிந்துகொண்டு திரிகிறார்கள். இவர்களுக்கு போட்டியாக புலிக்கண், பூனைக்கண் என்று புதிதான ரகங்கள் தேடுகிறார்களாம் ஏனைய நடிகைகள். வானுக்கும், மீனுக்கும் ஒப்பிட்ட விழிகளை பாம்புக்கும், பூனைக்கும் ஒப்பிடவைத்துவிட்டார்களே.

## காதோடு சொல்லுகிறோம்

காதல் கோட்டையில் ஆடிய நடிகை. ராஜாவுக்கு எதிர்ப்பதம் என்னவோ, அதுதான் அவர் பெயர். அவரை நடிக்க ஒப்பந்தம் செய்பவர்கள் ஒட்டுமொத்தமாகவே நினைத்து அங்கே தொட்டு, இங்கே தொட்டு தொந்தரவு பண்ணுகிறார்களாம். அதனால் புதிதாக ஒப்பந்தம் செய்ய வருகிறவர்களிடம், "என்னை ஓவராக எக்ஸ்போஸ் பண்ணி படம் எடுக்காதீங்க, எனக்கு விரைவில் கல்யாணமாகப்போகுது" என்று கதை விடுகிறாராம். "இப்போ எக்ஸ்போஸ் பண்ணி நடிக்கமாட்டே, ஏற்கனவே நடிச்சதை பார்க்க வேண்டியவங்க பார்த்தா என்ன பண்ணுவே?" என்று கேட்டு கிண்டல் செய்கிறார்களாம் ஒப்பந்தம் செய்பவர்கள்.

நம் நாட்டிலும் சின்னத்திரை மூலம் 'மனக' தொட்டுக் கொண்டிருக்கும் 'கீத'மான நடிகையும், ரம்யமான கிருஷ்ணன் பெயர் இணைந்த நடிகைக்கும் இடையே போட்டி. பிரபலமான தெலுங்குப் படத் தயாரிப்பாளர் ஒருவரை இருவருமே வலவுகிறார்களாம். தயாரிப்பாளரோ காரியம் ஆனதும் இருவருக்குமே பிடிகொடாமல் நழுவிக்கொண்டிருக்கிறாராம்.

மூன்றெழுத்து நடிகை அவர். 'தா' என்று அவர் பெயர் முடியும். தமிழில் வாய்ப்பு ஆட்டம் கண்டதால் இந்திப் படவுலகை கலக்கிக் காட்டுகிறேன் என்று மும்பைக்குச் சென்றார். விதம் விதமான போஸ் கொடுத்து படம்பிடித்து இயக்குநர்களுக்கு வலை வீசினார். ஒரே ஒரு நடிகர் மட்டுமே சிக்கினாராம். அவர் புண்ணியத்தில் இரண்டு படங்கள் கிடைத்திருக்கிறதாம். அது போதாதென்று தெலுங்குப் பட இயக்குநர் ஒருவரின் தோளிலும் தொற்றியிருக்கிறாராம். சான்ஸ் 'தா' 'தா' என்கிறாராம்.

'சங்க' நடிகைக்கும் தெலுங்கு தொழிலதிபர் ஒருவருக்கும் நெருக்கம் அதிகமாகி திருமணமாகிவிட்டதாம். வெளியே தெரிந்தால் மார்க்கெட் போய்விடும் என்பதால் மூடி வைத்திருக்கிறார்களாம். அதென்னமோ தெலுங்குப் பக்கத்தில் தமிழ்ப்பட உலக நடிகைகளுக்கு அப்படியொரு மவுசு.

மகேசுவரமான நடிகைக்கும், காதல் கோட்டை குமாருக்கும் இடையே காற்றும்புகமுடியாத நட்பு இருந்தது தெரிந்ததே. நடிகர் முன்னாள் காதல் நடிகையுடன் மும்பாய் சென்று தங்கிவிட்டு வந்ததால் மகேசுவரமான நடிகை டென்ஷனாகிவிட்டாராம். நடிகர் சமீபத்தில் நடிகையைத் தேடிச்சென்றபோது வீட்டில் இருந்தபடியே 'இல்லை' எனச் சொல்லப்பட்டதாம். ஊடலா? முறிவா? என்பது உத்தரவாதமாகத் தெரியவில்லை.

## முன்னாள் நடிகைகளின் அட்டகாசம்

நடிகர் டி.ராஜேந்தர் தி.மு.க.வில் கொள்கைப் பரப்பு செயலாளராக இருக்கிறார். சட்டசபை உறுப்பினராகவும் இருக்கிறார். ராஜேந்தர்மீது கட்சிக்குள் முக்கியமானவர்களுக்கு பிடிப்பில்லையாம். கலைஞர் கருணாநிதியின் குடும்ப நிறுவனம் வெளியிடும் 'குங்குமம்' சஞ்சிகையில் ராஜேந்தரின் மனைவியும் முன்னாள் நடிகையுமான உஷாவின் நடவடிக்கைகளை வெளியே கொண்டுவந்திருக்கிறது.

நடிகர்-கம்-இயக்குநரும் அவரது சகலையும் முறையே முன்னாள் நடிகையையும், அவரது தங்கையையும் மணந்துள்ளனர். முன்னாள் அரசவை நர்த்தகியும் இந்த நடிகைகளின் உடன்பிறந்தவர்தான்.

இந்த உடன்பிறந்த சகோதரிகளின் அட்டகாசம் தாங்கமுடியவில்லை.

தேனாம் பேட்டையில் சிமெண்ட் கலப்படம் செய்யும் செல்லமான தொழில் அதிபருக்கு பக்கபலமாக இருப்பது, ஆழ்வார் பேட்டையில் பியூட்டி பார்லர் நடத்திவரும் ஒரு பெண்ணுடன் சேர்ந்து நடத்தும் சட்டத்திற்கு புறம்பான செயல்கள், ராஜா அண்ணாமலைபுரத்தில் எட்டுக்கும் பத்திற்கும் இடைப்பட்ட நபர் ஒருவரின் வீட்டில் தரப்படும் விருந்து கேளிக்கை விளையாட்டுக்கள் போன்றவை எல்லைமீறிப் போவதாகப் பொலிசார் கருதுகிறார்கள். இதனால் ஆட்சிக்கும் கெட்ட பெயர் ஏற்படலாம் என்று செய்தி போட்டிருக்கிறது குங்குமம்.



## விஜயசாந்தியின் ஹீரோ

விஜயசாந்தியுடன் ராம்கி இணைந்து முதலில் நடித்த படம் 'ஒசே ராமுலம்மா' (தமிழில் 'அடிமைப்பெண்'). தெலுங்கில் இப்படம் சூப்பர் ஹிட். அதுக்கு முற்பட்ட தெலுங்குப் படச் சாதனைகளையெல்லாம் உடைத்துப் போட்டுவிட்டது. 79 தியேட்டர்களில் 100 நாட்களும், 35 தியேட்டர்களில் வெள்ளி விழாவும் கொண்டாடியது.

தெலுங்கு சூப்பர் ஸ்டாரினியான விஜயசாந்திக்கு தனக்கு அடக்கமான ஹீரோக்கள்தான் பிடிக்கும். ஆனந்த் என்ற ஹீரோவுக்கே முன்னர் சிபாரிசு செய்துவந்தார். இப்போது ஆனந்த் இடத்தை பிடித்திருப்பவர் ராம்கி. விஜயசாந்தியின் குறிப்பறிந்து நடக்கக்கூடியவர் என்பதால் ராம்கியைத்தான் இப்போதெல்லாம் சிபாரிசு செய்கிறார் சூப்பர் ஸ்டாரினி.

ராம்கி, விஜயசாந்தி ராசியான ஜோடி என்றும் பெயரெடுத்துவிட்டதால் தயாரிப்பாளர்களும் விஜயசாந்தியின் விருப்பத்தை நிறைவேற்றுகிறார்கள். 'தடயம்', 'ஆயுதப்படை', 'ரவுடி தர்பார்' என்று பல படங்களில் இந்த ஜோடி தடங்கல் இல்லாமல் தொடர்கிறது.

## குஷ்புவின் உயிர்

எம்.ரி.வி. சன் விஷனில் 'பெப்சி உங்கள் விருப்பம்' நிகழ்ச்சியில் குஷ்பு தோன்றினார். அவருக்கு விருப்பமான பாடல் என்ன என்று கேட்டபோது குஷ்பு சொன்ன பதில்: "அரவிந்தசாமி என்றால் எனக்கு உயிர். சுந்தருக்கும் அது தெரியும்." என்றுவிட்டு அரவிந்தசாமி நடித்த இந்திரா படப் பாடலை விரும்பிக்கேட்டார் குஷ்பு. அது சரி, குஷ்புவுக்கு குளு குளு ஹீரோக்களை மட்டும்தான் பிடிக்குமோ?

## மீண்டும் மலரும் உறவு

ஜாக்கி ஷெராப்- மாதுரி டிக்ஷித் ஜோடிக்கு இந்திப் பட ரசிகர்கள் மத்தியில் பலத்த வரவேற்பு இருந்தது. இடைநடுவே இருவருக்கும் இடையே மனக் கசப்பு தோன்றியதால் சேர்ந்து நடிக்காமல் இருந்தனர்.

ஜாக்கி ஷெராப் சில இரகசியங்களை வெளியே ஜாலியாகச் சொல்லிவிடுவது வழக்கம். அந்த வழக்கம்தான் மாதுரி டிக்ஷித்தை கசப்படைய வைத்ததாம்.

இப்போது மும்பாய் திரையுலகப் புள்ளிகள் சிலரது சமரச முயற்சியால் மீண்டும் இருவரும் ஜோடி சேரப்போகிறார்கள். "மாதுரியுடன் ஜோடி சேர ஆவலாக இருக்கிறேன்" என்று ஜாக்கி ஷெராப் பேட்டியும் கொடுத்திருக்கிறார்.

## ரோஜாவின் ஆசை

நடிகைகளுடன் சேர்ந்து நின்று புகைப்படம் எடுக்க ரசிகைகள், ரசி... கள் ஆசைப்படுவார்கள். நடிகைகளும் அப்படி ஆசைப்படுவதுண்டு. ... ரோஜா ஸ்ரீதேவியின் பரம ரசிகை. அவருடன் ஒரு படத்திலாவது ... நடிக்க விரும்பியிருந்தார். ஸ்ரீதேவி திருமணம் செய்துகொண்டு பட... டாட்டா காட்டிவிட்டதால் ரோஜாவின் கனவு உதிர்ந்துபோனது. ச... நிகழ்ச்சியில் ஸ்ரீதேவியைக் கண்டதுதான் தாமதம், ஓடிப்போய் அரு... புகைப்படம் எடுத்துக் கொண்டாராம் ரோஜா. ஆசையில் பாதி நி...



விஜயசாந்தி
படம்: அடிமைப் பெண்

## அசல் ரஜி...

'நாட்டாமை' படம் தெலுங்கில் எடுக்கப்பட்... விஜயகுமார் நடித்த பாத்திரத்தில் நடித்தார் ர... போட்டு அசத்தலாக நடித்திருந்தார். இப்போ... இந்தியில் தயாராகிறது.

இதில் ரஜினி ஒரு வித்தியாசம் காட்... ஒரிஜினல் தாடி மீசையோடுதான் தோன்று... பற்றி அக்கறையே கிடையாதப்பா.

# ...ஸ்டார் ஆனந்தன்

...வலையுலகத்தில் நடித்து ... வெற்றிமாற்றம் செய்யப்பட்ட ... வெற்றி பெற்றுள்ளன. தற்போது ... வலகத்தில் வெற்றிகரமாக ஒடிக் ... கொண்டிருக்கும் படம் 'ஆயிரம் ... அனந்தன்'. அதனை ... ஆனந்தன்' என்ற ... தமிழில் மொழிமாற்று ... மம்முட்டி ஜோடி ... கவுதமி, மாதவி ஆகி... நடித்திருக்கின்...



"காதல் கதையுள்ள படங்களாக நடித்து நடித்து வெறுப்பாகிப் போச்சு" என்கிறார் அப்பாஸ். "காதல் படங்கள் பண்ணினால் கல்லூரி மாணவிகள் மனசில் இடம்பிடிக்கலாம். ஆக்ஷனும் சேர்ந்திருந்தால்தான் இளைஞர்கள் மனதில் இடம்பிடிக்கலாம். அதனால் இனிமேல் ஆக்ஷன் கதைக்குத்தான் முதலிடம் கொடுக்கப் போகிறேன்." என்கிறார்

கல்லூரி காலத்தில் அப்பாஸ் அடிதடிப் பேர்வழியாம். "எங்க கல்லூரி பெண்களை எங்களைத் தவிர வேறுயாராவது பசங்க சைட் அடிச்சா விடமாட்டோம். துரத்தி துரத்தி ரீவிட் அடிப்போம்." "அது என்ன ரீவிட்?" அப்பாஸ் சொல்லும் விளக்கம் "ரீவிட் என்றால் ஆணியடிப்பது என்று அர்த்தம். சுவரில் ஆணியடிச்சா புடுங்க முடியாதல்லவா? அதுபோல நாங்கள் அடிக்கிற அடியில் அவன் எந்தப் பெண்ணையும் திரும்பிப் பார்க்க மாட்டான். அம்மாதான் திட்டுவாங்க. கல்லூரிப் பெண்களின் சிரிப்பில் அந்தக் காயமெல்லாம் காணாமல் போயிடும்." என்கிறார் அப்பாஸ்.

# கலகல மாப்பிள்ளை

**படம்-** பெரிய இடத்து மாப்பிள்ளை.
**நடிகர்கள்-** ஜெயராம், தேவயானி, மந்த்ரா, விஜயகுமார், ராஜன் பி. தேவ், கவுண்டமணி, மணிவண்ணன், விவேக் மற்றும் பலர்.
**இயக்கம்-** குருதனபால்.
**இசை-** சிற்பி.

படம் ஆரம்பத்தில் இருந்து முடியும்வரை குலுக்கி எடுத்து விடுகிறது. அந்தளவுக்கு கல கல கல. ஜெயராம், கவுண்டமணி கூட்டணி செம தூள். கவுண்டமணி சற்றே இரைந்து கத்தினாலும்கூட சிரிக்கவைக்கிறார். மணிவண்ணனுக்கு அதிக வேலை கொடுக்கவில்லை. வரும் காட்சிகளில் தனது பாணியில் கல கலக்க வைக்கிறார். விவேக்தான் சகுனி.

விஜயகுமாரும்,ராஜன்பி தேவ்வும் இரட்டைப் பிள்ளைகள். உண்மையாகவே அப்படித்தான் இருக்குமோ என்று நினைக்குமளவுக்கு இருவரும் ஒரேவிதமான நடை, உடை பாவனைகளால் வெளுத்துக் கட்டுகிறார்கள்.

தேவயானிக்கு அடக்கத்தை அதிகம் பூசியதால், ஆர்ப்பாட்டம் செய்யும் பொறுப்பை மந்த்ராவிடம் கொடுத்துவிட்டார்கள். என்றாலும் இருவருக்கும்வேலை அதிகம் இல்லை.

இரண்டு பெண்களை காதலித்து மாட்டிக்கொண்டு முழிக்கிறார் ஜெயராம். நகைச்சுவையான பாத்திரங்களில் 'கோகுலம்' முதல் 'பெரிய இடத்து மாப்பிள்ளை'வரை பிரமாதமாகவே சோபிக்கிறார் மனிதர்.

'தாய்மாமன்','மாமன் மகள்' போன்ற படங்கள் மூலம் வெற்றிப்பட இயக்குநராக வளர்ந்துவிட்ட குருதனபாலுக்கு மாப்பிள்ளையும் ஹிட் தான். தமிழ்நாட்டில் திரையிடப்பட்ட இடங்களில் நல்ல வசூல் அறுவடை. தமிழ்நாட்டில் விடியோவில் சின்னத் திரையில் பார்க்கலாம். பொழுது போக்குக்கு உத்தரவாதம்.

பாங்கலாம்

# விடியும்வரை கொண்டாட்டம்

நடிகை ரஞ்சிதாவின் பிறந்தநாள் கொண்டாட்டம் பற்றித்தான் பரவலான பேச்சு. எக்கச்சக்கமான அமர்க்களம் பண்ணி விட்டாராம். கொண்டாட்டத்தில் மதுவகைகளும் தாராளமாக வழங்கப்பட்டதாம். பிரபலங்கள் பலர் தள்ளாட்டம் போட்டனர். விருந்துக்கு வந்திருந்த நடிகைகளும் லேசான உற்சாகத்தில் மிதந்தனராம். அழைக்கப்பட்டவர்கள் தவிர வேறு எவருமே கொண்டாட்டம் நடைபெற்ற இடத்துக்குள் அனுமதிக்கப்படவில்லையாம். விடிய விடிய கொண்டாட்டம் தொடர்ந்தது. கொண்டாட்டத்தில் நடைபெற்ற சங்கதிகள் பற்றி அரசல் புரசலாக வெளியே தெரிந்து விட்டது. 'ஓட்டைவாய்கள் உளறிவிட்டார்கள்' என்று சில நடிகைகள் மீது கோபமாக இருக்கிறாராம் ரஞ்சிதா.



முகப்பில்

மகேஸ்வரி | பிரகாஷ்ராஜ்



திரையுலக மறுபக்கம் 20

மித்ரவாசு

# சகலகலா வல்லவரின் நீண்டநாள் கனவு

## நடிகர் அரங்கேற்றிய நாடகம்

சினிமாவில் எல்லாமும் தெரிந்த 'சகலகலா வல்லவர்' அவர். எந்தவித கெட்ட பழக்கமும் இல்லாதவர். அதனால் எத்தகைய அழகிய நடிகையாக இருந்தாலும் அவர்களை லட்சியமே பண்ணமாட்டார். அவருக்கு 'தாடி' தான் சொத்து.

அவர் தயாரித்து, இயக்கி, ஒளிப்பதிவு செய்து, இசையமைத்து நடித்த படங்களில் 'ஸ்ரீ' நடிகை ஒருவர் தொடர்ந்து அம்மா வேடங்களில் நடித்துவந்தார். எடுப்பான உடல்வாகு கொண்ட நடிகை அவர். என்றாலும் ச.க.வல்லவர் அந்த நடிகையை பொருட்படுத்துவதில்லை. அதற்கு ஒரு உதாரணம்.

பிரசாத் ஸ்டூடியோவில் ஒரு படப்பிடிப்பு. ச.க.வல்லவர் கிரேனில் உயரமாக உட்கார்ந்துகொண்டு 'டாப்' ஆங்கிளில் கீழே தரையில் அமர்ந்து அழும் நடிகையைப் படம்பிடிக்க வேண்டும். ஒருமுறை ஒத்திகை பார்க்கப்பட்டது.

'டேக்' போவதற்கு முன்னர் 'ஸ்ரீ' நடிகையின் புடவைத் தலைப்பு நழுவியது. அதை நடிகை கவனிக்கவில்லை.

ஆனால், செட்டிலிருந்த அனைவரின் கண்களும் நடிகையின் முன்னழகிலேயே லயித்திருந்தன. சிலருக்கு அது என்னவோ போலிருக்க நெளிந்தனர். சீனியர் நடிகை என்பதால் எப்படிச் சொல்வது என்று தயங்கினர்.

ச.க. வல்லவர் சற்றுத் தாமதமாகத்தான் நடிகையை நோக்கினார். நடிகை தானாகவே புடவையைச் சரி செய்துகொள்வார் என்று நினைத்து மீண்டும் ஒளிப்பதிவு உதவியாளர்களிடம் தன் கவனத்தை திருப்பினார்.

'ரெடி, டேக்' என்று குரல் கொடுத்துவிட்டு நடிகையைப் பார்த்தபோது அவர் பழைய நிலையிலேயே இருந்தார். அவரை நோக்கி கிரேனில் இருந்தபடியே, 'இந்தாம்மா, புடவையை சரி பண்ணிக்குங்க" என்று சாதாரணமாகவே சொன்னார். 'ஸ்ரீ' நடிகை வெட்கப்பட்டுக் கொண்டே புடவையைச் சரிசெய்து தயாரானார்.

### தூது போன நண்பர்

அப்படிப்பட்ட பண்பாளரான ச.க. வல்லவருக்கு ஒரு சபலம் இருந்தது. அமெரிக்காவில் வாழும் முன்னாள் பிரபலமான தான்செழுத்து நாட்டிய நடிகைமீது அபாரமான ஆசை. அந்த நடிகை சிவாஜி, எம்.ஜி.ஆரோடு ஜோடியாக நடித்தவர். சில வருடங்களுக்கு முன்னரும் சிவாஜியோடு ஜோடியாக நடித்திருந்தார்.

நடிகை ஒரு சமயம் 'திலக' நடிகரோடு நடிப்பதற்காக சென்னை வந்திருந்தார். தன்னைவிட வயதான நடிகையை எப்படியாவது சந்தித்து விடவேண்டும் என்று ச.க.வல்லவர் ஒரு நண்பரை தூது அனுப்பினார்.

தூதுபோன நண்பர் எவ்வித தடையுமில்லாமல் நடிகை தங்கியிருந்த வீட்டு மாடிக்குப்போனார். நடிகை அப்போதுதான் குளித்து முடித்துவிட்டு உள்ளாடைகளுடன் தலையைக் கோதியபடி வரவேற்க நண்பர் அதிர்ந்து போனார். நடிகை அந்தக் கோலத்திலேயே அவரோடு பேசினார்.

நண்பர் தயங்கித் தயங்கி ச.க.வல்லவரின் கோரிக்கையைச் சொன்னார்.

நடிகை முகச்சுளிப்பு ஏதுமின்றி சிரித்தபடியே "வரச்சொல்லுங்களேன்" என்றுகூற, நண்பருக்கு மீண்டும் அதிர்ச்சி.

சினிமாவைத் தவிர்த்து அனாவசியமாகச் செலவு செய்யாத ச.க.வல்லவர் தனது நெடுநாளைய கனவுக்காக, ஆசைக்காக அரை லகரம் காணிக்கையளித்து நடிகையிடம் தனது ஆசையை நிறைவேற்றிக் கொண்டார்.

### நடிகர் போட்ட நாடகம்

திருமணம் செய்து குழந்தைகள் பெற்றபின் நடிக்கவந்த பெயரில் 'கார்' உள்ள 'சௌகரிய'மான நடிகை அவர். இவரும் சிவாஜி, எம்.ஜி.ஆர். கால நடிகைதான்.

இளநீர் முற்றியபின் என்ன பெயர் வருமோ அதன் பெயர் கொண்ட நகைச்சுவை நடிகருக்கு அந்த நடிகைமீது ஒரு கண்.

அந்த நடிகை பேசுவதில், பழகுவதில் டிப்ளமேட்டிக்காக செயற்படுபவர். அதனால் அவரை எப்படி அணுகுவது என்று நடிகருக்கு யோசனை. ஒரு படத்தில் சேர்ந்து நடிக்கும் வாய்ப்பு வந்தது. அதை நழுவவிடக்கூடாது என்று முடிவு செய்தார்.

ஆசைப்பட்டுவிட்டோம் வெட்கம், மானம், எல்லாம் பார்க்கக்கூடாது என்று தீர்மானித்தார்.

ஒருநாள் நடிகை தனிமையில் இருக்கும் சந்தர்ப்பம் பார்த்து நடிகர் அணுகினார். அவரது காலில் தடாலென்று விழுந்தார். தனது காலணிகளைக் கழற்றி அவர் காலருகே போட்டார்.

"இந்த செருப்பை எடுத்து முதலில் என்னை அடியுங்கள்" என்றார்.

நடிகைக்கு இதெல்லாம் அதிர்ச்சியாக இருந்தது. எதுவும் புரியவில்லை. "ஏன் இப்படிச் செய்றீங்க? நான் எதுக்கு அடிக்கணும்?" என்று கேட்டார்.

"நீங்க எவ்வளவு பெரிய நடிகை. நான் ரொம்ப சாதாரண நடிகன்."

"என்ன அப்படிச் சொல்லிட்டீங்க? உங்கள் நடிப்பும் எனக்குப் பிடிக்கும்."

"அது உங்க பெருந்தன்மை. அப்படிப்பட்ட உங்களைப்பத்தி நான் அப்படி நினைக்கலாமா? முதல்ல என்னை அடியுங்க."

"என்ன நினைச்சீங்க?"

"நினைச்சதே தப்புன்னு நினைக்கிறேன் நான். அதப்போய் கேக்கிறீங்களே."

"மனுஷங்க எவ்வளவு பெரிய தப்பெல்லாம் பண்றாங்க. அந்தமாதிரியா நீங்க பண்ணியிருக்கீங்க. அதுவும் என் விஷயத்தில? அதனால அப்படி என்னதான் தப்பா நினைச்சீங்கன்னுதான் சொல்லுங்களேன்?"

"நான் உங்கமேலே ஆசைப்பட்டது தப்பில்லையா?" என்று கேட்டபடியே, கீழே குனிந்து செருப்பை எடுத்து நடிகையிடம் தருவதுபோல நீட்டினார்.

நடிகை பலமாக சிரித்துவிட்டார். நடிகர் எதிர்பார்த்தது அதைத்தானே.

"இதுதான் தப்பான விஷயமா? சரி...சரி.. செருப்பை காலல போட்டுக்குங்க. உங்க ஆசைப்படியே நடந்துட்டா போச்சு. ஃபோன் பண்ணிட்டு எப்ப வேணுமின்னாலும் வீட்டுக்கு வாங்க." என்று கூறிவிட்டுப் போனார். நடிகர் தனது நடிப்புத்திறமையை தானே மெச்சிக்கொண்டார்.

# இளவரசி டயானா
# ஆரம்பம் முதல் முடிவுவரை

* 1961 ஜூலை 1- ஆல்த்ரப் பிரபு தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தார் டயானா பிரான்சஸ் ஸ்பென்சர்.



டயானா-குட்டி இளவரசி

* 1980- கிண்டர்கார்டன் பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரிந்தபோது சார்ள்ஸுடன் காதல் மலர்ந்தது.
* 1982 ஜூன் 21- முதல் மகன் வில்லியம் ஆதர் ஃபிலிப் பிறந்தார்.
* 1984 செப்டம்பர் 15- இரண்டாவது மகன் ஹென்றி சார்ள்ஸ் அல்பேட் டேவிட் பிறந்தார்.
* 1992 ஜூன் 15- கமீலா பார்க்கர் என்ற பெண்ணுடன் சார்ள்ஸிற்குத் தொடர்பு இருந்ததாகக் கூறி டயானா தற்கொலை செய்ய முயன்றார் என்ற செய்தி வெளியானது.
* 1992 ஓகஸ்ட் 25- டயானாவும் அவரது காதலரும் இரகசியமாகப் பேசிய தொலைபேசி உரையாடலை 'சண்' பத்திரிகை வெளியிட்டது.
* 1992 டிசம்பர் 09- அரச தம்பதியர் பிரிந்து வாழ்வார்கள். ஆனால் விவாகரத்து இல்லை என்று அப்போதைய பிரதமர் ஜோன் மேயர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.
* 1994 ஜனவரி 12- சார்ள்ஸ்-கமீலா பார்க்கர் காதல் ரசம் சொட்டும் தொலைபேசி உரையாடல்களை 'சண்' பத்திரிகை வெளியிட்டது.



குதிரையேற்றப் பயிற்சியாளர் ஜேம்ஸ் ஹெவிற்றுடன் டயானா

* 1995 நவம்பர் 20- ஜேம்ஸ் ஹெவிட்ஸுடன் உறவு இருந்ததாக தொலைக் காட்சிப் பேட்டியில் டயானா ஒப்புக் கொண்டார்.
* 1995 ஓகஸ்ட்- டயானாவை விவாகரத்துச் செய்யுமாறு சார்ள்ஸுக்கு பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் கடிதம் எழுதுகிறார்.
* 1996 பெப்ரவரி 28- விவாகரத்துக்கு டயானா ஒப்புக் கொள்கிறார்.
* 1996 ஓகஸ்ட் 28- முறையாக இருவரும் விவாகரத்துப் பெறுகின்றனர்.
* 1997 ஓகஸ்ட் 31- ஃபிரான்ஸ் தலைநகர் பாரிசில் தனது நண்பர் டோடி ஃபயட்டுடன் கார் விபத்தில் பலியானார்.



மகன் வில்லியம்மின் பாடசாலையில் இடம்பெற்ற அம்மாக்களுக்கான ஓட்டப்பந்தயத்தில் முன்னணியில் டயானா.

டயானா ஸ்பெஷல்

* 1981 ஜூலை 29- இளவரசர் சார்ள்ஸை மணந்தார். இலண்டன் சென்ட் போல்ஸ் தேவாலயத்தில் நடந்த திருமணத்தை இலட்சக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர். டயானாவைவிட சார்ள்ஸ் 12 வயது மூத்தவர்.
* 1994 ஜூன் 29- மண உறவு முறிந்த பின்னர் வேறொரு பெண்ணுடன் உறவு கொண்டதாக ஒரு தொலைக் காட்சி நிகழ்ச்சியில் சார்ள்ஸ் ஒப்புக்கொண்டார்.
* 1994 ஒக்டோபர் 03- டயானாவுக்கும் அவரது குதிரையேற்ற பயிற்சியாளர் ஜேம்ஸ் ஹெவிற்றுக்கும் 5 ஆண்டுகளாகத் தொடர்பு உள்ளது என்று அன்னபாய் டர்லாக் என்பவர் 'இளவரசியின் காதல்' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார்.



டோடி அல் ஃபயட்டுடன் டயானா

# டயானாவின் உயிர்த்தோழிகள்

உலகனைத்துமுள்ள இலட்சக்கணக்கான பெண்கள் டயானாவை விரும்புகிறார்கள். ஆனால் டயானா எப்போதும் ஆண்களின் நட்பையே அதிகம் விரும்பினார். அவருடைய நட்பைப் பெற எத்தனையோ கோடீஸ்வரர்கள் டயானாவைப் பின் தொடர்ந்தனர். ஆனால் அவரோ பலரை உதாசீனம் செய்தே வந்திருக்கிறார்.



பெர்கி

சில பெண்களிடம் மிகமிக நெருக்கமாகப் பழகி அந்நியோன்ய நட்புடன் பழகப் போவதாக டயானா நம்பிக்கை ஊட்டினாலும், ' சில மாதங்களுக்குள் அவர்களுடைய நெருக்கத்தை டயானா துண்டித்துக் கொள்வார்.



ஜெமிமா

இளவரசர் அன்ட்ரூவின் முன்னாள் மனைவி பெர்கி என்றழைக் கப்படும் சாரா ஃபெர்கினும் டயானாவும் சில காலம் மிக நெருக்கமாக உறவாடினார்கள். ஆனால் ஃபெர்கி தன்னுடைய சுய சரிதையில், ஓரிடத்தில், தான் தற்செயலாக டயானாவின் பாதணியை தற்காலிகமாக அணிந்ததாகவும் அதனால் தனது பாதத்தில் பாலுண்ணித் தொற்று ஏற்பட்டுவிட்டதாகவும் எழுதியிருந்தார். இதனால் இருவரும் ஒருவரை ஒருவர் பார்ப்பதைத் தவிர்த்துவிட்டனர்.

காதறின் சோமஸ், கேற் மென்ஸீஸ் ஆகிய இரு பெண்மணிகளுடன் டயானா நட்புவைத்திருந்தார். ஒஸ்ரியாவில் பனிச் சறுக்கு விளையாட்டில் கலந்து கொள்ள ஒன்றாகச்சென்ற மூவரும் ஒரு சிறுவர் பராமரிப்பு நிலையம் தொடர்பாக வாக்கு வாதத்திலீடுபட்டு அங்கேயே பிரிந்து கொண்டனர்.

லூசியா ஃபிளெச்சா டி லிமா, வாஷிங்டனில் உள்ள பிரேஸில் நாட்டு தூதுவரின் மனைவி, டயானாவுடன் நீண்ட காலம் நட்புக் கொண்டிருந்தார். ஆனால் வெகு தூரத்துக்கப்பால் வாழ்வதனாலோ என்னவோ நட்பை வளர்த்துக் கொள்ள முடியவில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் இம்ரான்கானின் மனைவி ஜெமீமாவும் டயானாவின் சிநேகிதிதான். ஜெமீமா இங்கிலாந்தில் இல்லாத போதும் அவருடைய தாயாரான லேடி அன்ன பெல்லுடன் தொலைபேசியிலோ அல்லது நேரடியாகவோ தொடர்புகொண்டு தனது பிரச்சனைகளை மனம் விட்டுக் கூறி ஆறுதல் தேடுவாராம் டயானா.

டயானா எப்போதும் ஒரே மனோநிலையில் இருப்பதில்லை என்று அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் கூறுவார்கள்.



லூசியா

மிக்க மகிழ்ச்சியாக கதைத்துப் பேசிச் சிரித்து மகிழும் டயானா ஒரு நொடியில் தனது போக்கினை மாற்றி முகத்தைத் தொங்கப் போட்டுக் கொள்வார்; அல்லது எல்லோருடனும் எரிந்து விழுவார் என்கிறார்கள். ■

# டயானா- ஏற்றமும் இறக்கமுமான குழப்பமான குடும்ப வாழ்க்கையிலும் மாறுபட்ட ஒப்பனைப் பாணி



1981

பிரிட்டிஷ் ராணியாகக் கூடும் என்ற தகவல்கள் பட்டும் படாமலும் எழுந்த காலங்களில் மொன்றெசோரி பாடசாலை ஒன்றில் உதவி ஆசிரியையாகக் கடமையாற்றும் போது தலை அலங்காரத்தைப் பற்றிய கவலையே இல்லாத நிலை.



1982

திருமணமாகி தாய்மை அடைந்த நிலையில் சாதாரணமான சிகை அலங்காரம்தான். ஆனால் பிரிட்டனின் எதிர்கால மகாராணி என்ற பெயர் பெற்றமையினால் டயானாவின் சிகை அலங்காரம் உலகளாவிய நிலையில் 'ஒரு தனிப்பாணி' என்று மவுசு பெறத் தொடங்கியது.



1983

தாயாகிவிட்ட நிலையில்- தன் கணவனின் அலை பாயும் கண்கள் தன்னை விட்டு வேறெங்கும் பாயாமலிருக்க கௌரவமான குடும்பப் பெண்ணுக் கேற்ற சிகை அலங்காரமாகத் தானே தேடி அமைத்த பாணி.



1984

தன்னுடைய கணவனின் சகோதர-சகோதரிகளின் நச்சரிப்புகளுக்கு மத்தியில் கணவனுடன் இணைந்து வாழ எடுத்துக் கொண்ட முயற்சிகளில் தனது தோற்றத்திலும் மாற்றங்களை டயானா தேடினார் என்பது இப்பாணியில் தென்படுகிறது.



1986

தனது முடியை சற்றுக் குள்ளமாக வெட்டி பிளாட்டினம் வர்ணச் சாயமும் பூசி எடுப்பாகக் காட்சி தருகிறார். எத்தனை தான் தன் அலங்காரங்களைக் கவர்ச்சியாக மாற்றிக்கொண்ட போதும் மாளிகையில் சார்ள்ஸின் பார்வையினைத் தன்பால் ஈர்ப்பது சிரமமாகத்தான் இருப்பதாக வதந்திகள் அடிபடுகின்றன.



1988

முடியை ஒட்ட வெட்டி, அரச குடும்பத்துக்கான அந்தஸ்தை எட்டுவதற்கான பாணி இது. இதற்கிடையில் அரச குடும்பத்துக்குள் பாரிய வெடிப்பு ஏற்படுவதாக பல மான வதந்திகள் வெளிவரத் தொடங்கின.



1990

'90ம் ஆண்டுகளில் தன்னை நோக்கி வரும் சவால்களை எதிர் கொள்ளும் திடத்துடன் காணப்படுகிறார். சிகை அலங்கார நிபுணர் சாம் மக்னைற் டயானாவுக்காகத் தெரிவு செய்த பாணி இது.



1991

மேல் தலை முடியில் சுருள்களை அமைத்து துள்ளமை பணத்துக்காகப் புகைப்படம் எடுக்கும் குழுவினருக்குக் குவியினைத் தருகிறதாம். அரச குடும்பத்தில் டயானா ஒரு முள்ளாகத் தென்படுகிறார் என்று வதந்திகள் பரவுகின்றன. பெரும்பாலும் பல ஆண்களுடன் அந்தரங்கமாக ஓரளவு வெளியிலும் தகவல் பரவுவதற்கேற்ற வகையில் பழகுகிறாராம். இளவரசர் சார்ள்ஸ் மீது வஞ்சம் தீர்ப்பதற்காகவே இவ்வாறு அவர் நடப்பதாகக் கூறப்படுகிறது.



1992

இளவரசரும் டயானாவும் தனித்தனியாகப் பிரிந்து வாழலாம் என்று பக்கிங்காம் மாளிகையும் அறிவித்துவிட்டது. அதனைத் தொடர்ந்து டயானா தனது சிகை அலங்காரத்தை மிகவும் கவர்ச்சிகரமாக மாற்றிக் கொண்டார்.



1994

பொது வாழ்வில் பல நிகழ்ச்சிகளில் ஒன்றன் பின் ஒன்றாக டயானா கலந்து கொண்டார். இதனால் சிகை அலங்காரத்துக்கெனத் தனியாக நேரம் ஒதுக்குவது கூடச் சிரமமாக இருக்கிறது போலும். ரஜினி ஸ்ரைல் போல் விரல்களால் கோதிவிட்டுக் கொள்ளலாம்.



1995

சுதந்திரமாக எந்த முடிவையும் எடுக்கத்தான் தன்னைத் தயார்ப்படுத்தி விட்டார். அதன் வெளிப்பாடுதான் இந்த முடி அலங்காரம்.



1996

தனது கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற டயானா தயாராகிவிட்டார். அமைதியாக ஆற அமர ஓய்வாக முடிவெடுக்க சுதந்திரம் பெற்றவராகி விட்டார். இதற்கான மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பாணி இது. தலை முடியும் சுதந்திரமாக சிறகடிக்கத் தொடங்கியது.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CI

பெயர்:.......................

முகவரி:.......................

.......................

கையொப்பம்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 20-09-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?- தர்ஹா நகர் வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான் ☞

பாத்திமா நஷ்.ஃபா
48/1, ஜீலானி வீதி, தர்ஹா நகர்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

தேன் கிண்ணம்

## கனவு தின்ற வாழ்க்கை!?



நேசிக்கப் படாத
ஓர் உறவை நினைத்து
நீ–
யோசித்து அழுவதில்
பயனில்லை தோழி...!
❀
காதலின் வாசமறியா
ஒரு–
கழுதையின் நினைவுகளை
கட்டிக் கொண்டு அழுகிறாயே..!
உனக்கு
வெட்கமில்லையா பெண்ணே?
❀
உயிர்ப்புள்ள ஓர் உறவிற்காய்
உயிரைக் கூட கொடுக்கலாமே...
ஆனால்,
சவமாய் போன ஒரு காதலுக்கு
உன் கவிதைகளில் ஏனடி
கண்ணீரால்
இந்த அஞ்சலி???
❀
அன்புக் காதலனுக்காய்
அழலாம்....!
அந்தப் பாதகனுக்காய்
அழாதே!
காதலுக்கும், காமத்திற்கும்
வேறுபாடுணர் தோழி!
❀
மனசில் சுரப்பது காதல்
உடலில் சுரப்பது காமம்!
❀
கூடிச் சாவது காதல்
கூடிப் பிரிவது காமம்!
❀
இறந்தும் வாழ்வது காதல்
ஓர் இரவினில் முடிவது காமம்!
❀
அன்புக் காதலனுக்காய் அழலாம்;
அந்தப் பாதகனுக்காய் அழாதே!
காதலுக்கும், காமத்திற்கும்
வேறுபாடுணர் தோழி!
❀
அவன் நேசித்ததாய்
நீ நம்பிய போது;
அவனை–
அவனிலும் அதிகமாய் நேசித்தவளே!
இப்போ–
அவன் மறந்த பின்னும்
அவனை மறப்பதற்கு
உன் மனசுக்கு என்னம்மா
அத்தனை மறுப்பு?
❀
உனை மறந்து எங்கேயோ
சந்தோசமாய் அவன் வாழ....
நீ மட்டும்,
வாழ்க்கையே சறுகியதாய்
சரிந்து போய் சலித்துக்
கொள்ளல்
சரியில்லை தோழி!
❀
இனிய–
காதலின் நினைவுகளை
காவியங்களாக்கலாம்...!
அந்த–
காமப் பேயின் கறைகளுக்கு
உன் உயிரில்
கல்வெட்டு வேறெதற்கு?
❀
உன்னிலையில் நானிருந்தால்...
ஒன்று கேள் தோழி!
காதலென்கிற அவன் காமத்தை
காகமிட்ட எச்சமென்பேன்;
விழியழுத கண்ணீரை
அவன் நினைவுகளின்
வாந்தியென்பேன்....!
❀
அன்பு காதலனுக்காய் அழலாம்....
அந்த பாதகனுக்காய் அழாதே!
காதலுக்கும்,
காமத்திற்கும்
வேறுபாடுணர் தோழி!

அட்டாளைச்சேனை-யூயெல் மப்றூக்.

## எதையோ தேடி...

புத்தன்
வந்திறங்கிய பூமியா இது?
யுத்தம் நடக்கிறதே?
***
எல்லார் வீட்டுக் கூரையிலும்
வெள்ளைக் கொடி பறக்கிறதே?
ஓ....!
யாரோ ஒருவரை
அநியாயமாய்
இழந்துவிட்ட அடையாளம்!
***
மனங்களைப் பூட்டிக் கொண்டு
மனிதத்தை மறந்து விட்டு
சத்தியத்தைத் தொலைத்து விட்டு
வெறுமனே
மாக்களாய்
வெறிகொண்ட நாய்களாய்
யாரது...
நானும் நீங்களும்தான்!
***
ஏதோ ஒன்றைப்
பறி கொடுத்த எல்லோரும்
பன்சலைக்குள்ளும்,
கோவிலுக்குள்ளும்,
பள்ளிவாசலுக்குள்ளும்,
தேவாலயத்திற்குள்ளும்
எதையோ தேடி...!
***
தேடுவது
நமக்குள் இருப்பது
புரியாமல்...!

பெ.புண்ணியமூர்த்தி- கலஹா.

## 'செப்டம்பர்' பூக்கள்

தாமரைக் குளத்திலெழும்
நீர்க்காகத் தலைகளென,
இடை விட்டு இடைவிட்டு
உன் ஞாபகங்கள் எழுகின்றன!
••
நினைத்துப்பார்–
செப்டம்பர் மாதங்கள்
மறக்கமுடியாதவை.
••
உன் பிறந்த நாளும்–
நீ-புது வாழ்வில் இணைந்த நாளும்
இந்த மாதத்தின்–
நிரந்தக் கிரீடமாய் போயிற்று.
••
உயிர் துடிப்பு ஒய்ந்திடின்
இப்போர் ஒயும்.
••
என்னால் என் செய்யவியலும்,
செப்டம்பர்களில்–
நான் மனிதனாய் இருப்பதில்லை!
••
தீயெறியும் உள் மனத்தால்
உன்னை வாழ்த்தியபடி,
எரிந்து போகிறேன்!
••
இன்றாவது என்னை
நினைக்காமலா இருக்கப்
போகிறாய்?

என்.சுஹா

## நிகரில்லா மாப்பிள்ளை

என்ன இனம்? எந்த ஊர்?
என்ன சாதி? என்ன தொழில்?
கூன் குருடு இல்லா
சுகதேகியாமோ?
கௌரவமானவரோ?
கண்ணியமானவரோ?
துருவி ஆராய்ந்து,
சீதனமும் பேசி,
முறையோடு மாப்பிள்ளை,
அழைத்து விருந்து வைத்து,
பெற்றோர்கள் கைப்பிடித்து
நீர்வார்த்துத் தம் மகளின்
மணக் கோலம்
கண்ட காலம் போய்;
போட்டோவில் முகம் பார்த்து,
டெலிபோனில் குரல் கேட்டு,
கறாராய்ச் சீர் செனத்தி
கவனமாய்ப் பேசிவிட்டு
காதலிலே கட்டுண்டு,
கனவுலகில் தான் மிதந்து,
ஊர் சுற்றம் தனைப் பிரிந்து,
சீர் வரிசைகள் சுமந்து,
இரவோடு இரவாக,
மணப் பெண்ணும் ஏற்றுமதி
வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு!

திருமதி ராஜேஸ்வரி
கிருஷ்ணன்- வவுனியா.

## நிகழ்வன...

வெண்தாமரை அருவியில்
வெந்துகிடக்கும் வெண்புறா
சங்கிலியால் கட்டப்பட்டு
சமாதானம் தூக்கிடப்படும்!
**
2000 ஆண்டை நோக்கி
கடிகாரம் கூட முள் நகர்த்தும்;
அறிவியலிலும் மாற்றம் வரும்;
அரிசி விலையிலும் ஏற்றம் வரும்!
**
கையூட்டும் கமிஷன் முன்
கைகட்டி நிற்கும் சத்தியம்;
ஒளிவேகத்தில் உத்தரவாதம்
உறங்கிக் கிடக்கும் அமுலாக்கம்!
**
பட்டலந்த விவாதம் ஒருபுறம்
கோணேஸ்வரிகளின் துயரம் மறுபுறம்
சோகங்களால் காலம் கரையும்
சோதரங்களின் குருதியால் தேசம்
நனையும்!
**
ஆதம்பாவாவையும் அழகையாவையும்
ஆரிய ரெட்ணாவையும் யுத்தம் தின்னும்;
ஆட்டிலெறியும் கபீர் குண்டும்
தேசத்து வனப்பைச் சிதைக்கும்!
**
'செய் அல்லது செத்துமடி!'
போரின் உக்கிரம் உணர்த்தும்
'வெற்றி நிச்சயம்'– இன்றல்ல
நாளையெனத் தொடரும்...?

ஆரையம்பதி மனோ.

## அந்தக் காலம்....

எனது குரலே எனக்கு
வெறுப்பான கணங்கள்
பலவுண்டு!
உனது பெயரை
உச்சரிக்காத
கணங்கள் அவை!
★
எனது உடையே
பிடிக்காது போன
நாட்கள் பல!
உனது அணைப்பு
படாத உடைகள்!
★
உன்னைப் பார்க்காத
ஒவ்வொரு நாளும்
பயனற்ற நாட்கள்–
கணக்கில் சேர்ந்தன!
★
உன்னோடு பேசாத
உன்னை
வர்ணிக்காத
உனக்கு கடிதம்
எழுதாத
வார்த்தைகளை
தமிழில் இருந்து
நீக்க உத்தேசம்!
★
என்ன இருந்தும்
பெண்ணே!
என்னை வெறுக்க
என்னால்
முடியவில்லை!
★
என் உயிரும்
நீ யல்லவா...?
★
இதையெல்லாம்
'இப்போது' வாசிக்க
சிரிப்புத்தான்
வருகிறது...!
★



சுபா வரன்- கண்டி.

## அந்த நாள் ஞாபகம்






← டயானா–சாள்ஸ் திருமணத்தின் பின்னர் தேனிலவுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். தலைக்கவசத்துடன் நிற்பவர் பிரிகேடியர் அன்ட்ரு பார்க்கர். இவர்தான் சாள்ஸின் நண்பியான கமீலாவின் துணைவர்.

↑ சாள்ஸ்–டயானா, கைக்குழந்தையாக இளவரசர் வில்லியம்ஸ்.

↓ விடுமுறையை நண்பர்களுடன் குழந்தைகளுடன் களிக்கிறார்கள். இரண்டாய் உடைந்த கடந்தகாலம்.





→ முதன் முதலாக டயானாவை நீச்சல் உடையில் எடுக்கப்பட்ட படம் இதுதான். சிஸ்டினி என்ற புகைப்படப் பிடிப்பாளர் சுமார் ஒரு மாதகாலமாக டயானாவை பின்தொடர்ந்து, பலருக்கு இலஞ்சம் கொடுத்து டயானாவின் நடமாட்டங்கள் பற்றிய தகவல்கள் திரட்டி இப்புகைப் படத்தை எடுத்தார். இப் புகைப்படத்திற்காக அவருக்கு கிடைத்த பெருந்தொகைப் பணம்தான், டயானாவை இரகசியமாக பின் தொடரும் ஆர்வத்தை புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு ஏற்படுத்தியது.

இறுதியில் டயானாவின் மரணத்திற்கும் காரணமான துரத்தல்வரை சென்றது.

## இந்த வாரம் உங்கள் பலன்

(14.09.1997 தொடக்கம் 20.09.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன், இராகு. |
| துலாம் | - செவ்வாய், வெள்ளி. |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |

★ சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, காரிய நஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- பிரயாண மிகுதி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், மனக்கிலேசம். | பகல் | 11 | மணி |
| சனி- இனசன நன்மை, துயர் நீங்கும். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வீண் அலைச்சல், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், கடன் சுமை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, சஞ்சலம். | பி.ப. | 2 | மணி |
| சனி- துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், அந்நியர் நட்பு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- இனசன விரோதம், பயனற்ற செயல். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் மந்தம், கடன் சுமை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண் துயர், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 3 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், காரிய சித்தி. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| சனி- இனசன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், அந்நியர் சகவாசம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், பொருள் கஷ்டம். | மு.ப. | 9 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சிகளில் வெற்றி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணவரவு குன்றும். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கவலை. | பகல் | 11 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, பொருள் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- காரியத் தடை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 | மணி |
| சனி- புதிய முயற்சி, பொருள் வரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| புதன் - இனசன நன்மை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், காரிய சித்தி. | பி.ப. | 1 | மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சிகளில் வெற்றி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண் அலைச்சல், மனக் கவலை. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பிரயாணம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன மகிழ்ச்சி, பொருள் விரயம். | மு.ப. | 9 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. | 9 | மணி |
| சனி- துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, பணக் கஷ்டம். | பி.ப. | 4 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை. மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| சனி- காரிய சித்தி, தொழில் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், முயற்சி தடை. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் துயர், கடன் தொல்லை. | பி.ப. | 1 | மணி |
| சனி- புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், பயனற்ற செயல். | பகல் | 11 | மணி |
| வியாழன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், குடும்ப நன்மை. | மு.ப. | 10 | மணி |
| சனி- பெரியோரால் சுகம், கௌரவம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2





வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம்;
தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடு வோம்.
—சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# புத்தியிடம் தோற்ற கத்தி

ஒரு நாட்டை ஒரு பலசாலியான அரசன் ஆண்டு வந்தான். பலமுறை அந்த நாட்டின் மீது படையெடுத்து வந்த அண்டை நாடுகளைத் தோற்கடித்தவன் அந்த அரசன்.

அவனுடைய அரண்மனையில் இருக்கும் மந்திரிகள், தளபதிகள் எல்லாருடனும் சண்டையிட்டுத் தோற்கடித்தவன். இதனால் அவனுக்குக் கர்வம் கூடியது.

அவனுடைய அரச சபையில் விகடகவி ஒருவன் இருந்தான். ஒருநாள் அவன் அரசனின் சண்டைத் திறனைப் பற்றிக் கிண்டலாகப் பேசினான்.

இது அரசனின் காதுகளுக்கு எப்படியோ எட்டிவிட்டது. அவன் விகடகவியை அழைத்து, "நாளைக்கு நீ என்னுடன் சண்டையிடத் தயாராக இரு!" என்று உத்தரவிட்டான்.

இதைக் கேட்ட விகடகவிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சற்று யோசித்து விட்டு,

"சரி அரசே! நான் உங்களுடன் சண்டையிடத் தயார். ஆனால் நான் எந்த ஆயுதம் கொண்டு வருகிறேனோ, அதை வைத்துக்கொண்டு நான் எப்படிச் சண்டை போடச் சொல்கிறேனோ அதன்படிதான் நீங்கள் என்னுடன் சண்டையிடவேண்டும்," என்று கூறினான் விகடகவி.

அரசனும் அதற்குச் "சரி" என்று சம்மதித்தான்.

மறுநாள் சண்டை நடக்கின்ற இடத்திற்கு விகடகவி இரண்டு கொழுக்கட்டைகளைக் கொண்டு வந்து வைத்தான்.

"இதை வைத்துக் கொண்டு எப்படிச் சண்டை போட வேண்டும்?" என்று கேட்டான் அரசன்.

"மகாராஜா! இந்த இரண்டு கொழுக்கட்டைகளில் ஒன்றை நீங்கள் சாப்பிட வேண்டும். இன்னொன்றை நான் சாப்பிட வேண்டும். ஆனால் இரண்டு கொழுக்கட்டைகளில் ஏதோ ஒன்றில் விஷம் கலக்கப்பட்டிருக்கிறது. அது எது என்று எனக்கும் தெரியாது," என்று நிதானமாகக் கூறினான் விகடகவி.

அரசனுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிப் போனான்.

"என்ன அரசே! போட்டியை ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டான் விகடகவி.




அரசன் ஒருவாறு சமாளித்துக் கொண்டு விகடகவியைப் பார்த்து,

"உன் புத்திசாலித்தனத்திற்கு முன்னால் என் கத்தி தோற்று விட்டது," என்று அவனது முதுகில் தட்டிப் பாராட்டினார்.

அரசனின் பாராட்டைக் கேட்ட விகடகவி மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.

# அதிசயம்—ஆனால் உண்மை!







**மர உருவில் மின்னல்:**
தென் அமெரிக்காவில் வெப்ப மண்டலப்புயல் வீசும் போது ஏற்படும் அர்போரஸன்ட் மின்னல் (ARBORESCENT LIGHTNING) ஆகாயத்தில் இலைகள் இல்லாத மரத்தைப் போன்று பளிச்சிடுகிறது. மற்ற மின்னலைப் போல் அல்லாது, இதன் ஒளி மேல் நோக்கிச் செல்லும்.

**கர்னாட் மீன்:**
இந்த மீன் பிடிபட்டால் உடனே உறுமுமாம். இதன் தாடையின் அருகே விரல்கள் போன்ற மூன்று உறுப்புக்கள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி கடலின் சேற்று நீரைத் தோண்டி இரையை எடுத்து இது வாயில் போட்டுக் கொள்ளும்.

**புனித முள்:**
ஃபிரான்ஸ் நாட்டில் செலன்டரி என்னுமிடத்தில் உள்ள தேவாலயத்தில் இப்புனித முள் (HOLY THORN) பாதுகாக்கப்பட்டு வருகிறது. இயேசு நாதர் சிலுவையில் அறையப்பட்டபோது அவர் சிரசில் தாங்கிய முட்களில் இது ஒன்றென நம்பப்படுகிறது.




# வாரம் ஒரு நாடு

## லாவோஸ்

தலைநகர் - வியன்டியேன்
பரப்பு - 2,36,800 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 49 இலட்சம்
மொழி - லாவோ, பழங்குடி மொழி, ஆங்கிலம், ஃபிரெஞ்ச்
எழுத்தறிவு - 45%
சமயம் - புத்தமதம், பழங்குடி நம்பிக்கைகள்
நாணயம் - புதிய கிப்
தனிநபர் வருமானம் - 250 டொலர்.


**அமைவிடம்:**
தென்கிழக்கு ஆசியாவில் வடமேற்கே மியான்மாரும் கிழக்கே வியட்நாமும் தெற்கே கம்போடியாவும் மேற்கே தாய்லாந்தும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**
1893 ஃபிரான்சின் ஆதிக்கத்தில் இருந்தது. 1941ல் ஜப்பான் இதைப் பிடித்தது. 1945ல் ஜப்பான் இதைவிட்டு விலகியபோது, ஒரு புதிய நாடாக மலர்ந்தது. 1946ல் ஃபிரான்ஸ் மீண்டும் இதைக் கைப்பற்றியது. 1949ல் ஃபிரான்சிடமிருந்து இது சுதந்திரமடைந்தது. 1953க்கும் 1973க்கும் இடையில் நடந்த உள்நாட்டுப் போரில் அரசுக்கு அமெரிக்கா உதவி செய்தது. தீவிரவாதிகளுக்கு வடக்கு வியட்னாம் உதவியது. 1974ல் ஒரு கூட்டு மந்திரிசபை அமைக்கப்பட்டது. இப்போது லாவோ மக்கள் கட்சி (கம்யூனிஸ்ட்) அதிகாரத்தை ஏற்றுள்ளது.



**பொருளாதாரம்:**
அரிசி, புகையிலை, பருத்தி, சாம்பிராணி, தேக்குமரங்கள் போன்றவை முக்கிய உற்பத்திப் பொருட்கள் ஆகும். தொழில்துறையில் முன்னேற்றமில்லை.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20.09.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 210
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 208

பரிசுக்குரியவர்:
சி. லோகராஜன்,
கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயம், கோட்டைக் கல்லாறு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பி. சுமித்ரா, நிரியெல்லை த.வி. உடகரவிட்ட, இரத்தினபுரி. | பே. சிவசுதன், மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| நிவ்யா குணரட்ணம், இந்து தமிழ் மகா வித்தியாலயம், புத்தளம். | எம்.எஸ். பிர்தௌஸியா, தாருஸ்ஸலாம் முஸ்லிம் ம.வி. கொத்தாந்தீவு, முந்தல். |
| செல்வன் ச. ஜோயல் அனோஜன், மட்/ களுதாவளை ம.வி., களுவாஞ்சிக்குடி. | செல்வி ஜி. நிசானி பியங்கிகா, அக்போபுர மகா வித்தியாலயம், கந்தளாய். |
| மு.பி. நுஸ்றா றபி, அல்-அக்ஸா மகா வித்தியாலயம், காங்கேயனோடை, ஆரைப்பற்றை. | செல்வன் பானுஷன் இராஜமோகன், இல.660 கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| ம. அருட்கலாநிதி, புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார். | எம்.எம். பறூஜான், கஹ /ஜீலான் மத்திய கல்லூரி, ஹேனமுல்லை, பாணந்துறை. |

# புகழ்பெற்ற தமிழ்ப் புலவர்கள்

புகழ்பெற்ற தமிழ்ப்புலவர்கள் சிலரைப் பற்றி சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்:

**திருவள்ளுவர்:**
உலகத்திருமறை என்று அகில உலகம் போற்றும் ***திருக்குறளை*** யாத்தவர் இவர். தமிழ்நாட்டில் பிறந்த இவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். திருக்குறளைப் போன்று நீதி கூறி நெறியான வாழ்க்கையை உருவாக்கும் நூல்கள் வேறு எதுவும் இல்லை.

**கம்பர்:**
தமிழில் ***இராமாயண***த்தை அளித்த மகாகவி இவர். குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்த இவர், இராமாயணம் தவிர, ***ஏரெழுபது, சரஸ்வதி அந்தாதி, மும்மணிக்கோவை*** ஆகியவற்றையும் இயற்றியுள்ளார்.

**இளங்கோவடிகள்:**
அரச குலத்தவரான இவர் சேரன் செங்குட்டுவனின் தம்பி. இவரது ***சிலப்பதிகாரம்*** முத்தமிழ்க் காவியமாகும். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான இது கண்ணகியின் கற்பின் சிறப்பினைக் கூறுவதாகும்.

**காளமேகப் புலவர்:**
தமிழ்நாட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்த இவர் ஒரு சமையற்காரர். ***திருவானைக்கா உலா*** இவர் இயற்றியது. சிலேடையாகப் பாடும் திறனைப்பெற்ற இவர் அக்காலத்தில் பல புலவர்களை வாதில் வென்றவர்.

**ஒட்டக்கூத்தர்:**
கவிஞர்களில் 'இராட்ஷசன்' என்று கூறப்படும் இவர் மாமேதை மட்டுமல்ல, மிகத்திறமை வாய்ந்த கவிஞருமாவார். ***ஈட்டியெழுபது*** என்னும் பிரபந்தத்தை இயற்றியது இவரே.

**புகழேந்தி:**
அவைப்புலவரான ஒட்டக்கூத்தர் காலத்திய தொண்டைநாட்டுப் புலவர் இவர். நள மன்னனின் வரலாற்றை ***நளவெண்பா*** என்ற காவியமாகப் பாடி, 'வெண்பாவில் புகழேந்தி' எனப் புகழ் பெற்றவர் இவர்.

**ஜெயங்கொண்டார்:**
குலோத்துங்கன் காலத்தில் பெரும்புலவராக இருந்த இவர் இயற்றிய ***கலிங்கத்துப் பரணி*** ஓர் அரிய வரலாற்றுக் காவியமாகும். சோழர் குல வரலாறு பற்றிய பல தகவல்கள் இந்தக் கலிங்கத்துப் பரணியில் புதைந்துகிடக்கின்றன.


**ஔவையார்:**
அக்காலப் பெண் புலவர்களில் சிறப்பிடம் இவருக்குத்தான். குழந்தைகளுக்கு உகந்த ***ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம்*** போன்ற சிறப்பு வாய்ந்த எளிய பாடல்களை இயற்றியவர். கம்பர், ஒட்டக்கூத்தர் காலத்தில் வாழ்ந்தார் இந்தப் பெருமாட்டி.

# அணுகுண்டு



❑ யுரேனியம் என்னும் கனிமத்தை சக்தி ஆற்றலாக மாற்றுவதே அணுகுண்டின் அடிப்படைத் தத்துவமாகும். யுரேனியத் தின் அணுக்கருவைப்பிளப்பதால், அள விடற்கரிய ஆற்றலை உண்டாக்க முடியும் என்ற அடிப்படையில் தான் அணுகுண்டு தயாரிக்கப்படுகின்றது.

❑ அமெரிக்க விஞ்ஞானியான ஜே.ஆர். ஓபன் ஹீமர் என்பவரே முதலில் அணுகுண்டைத் தயாரித்து 1945ல் சோதனையும் நடத்தியவர். இந்தச் சோதனையில் யுரேனியம் பயன்படுத்தப்பட்டது. இக்குண்டு வெடிக்கப்பட்டபோது 12 ஆயிரம் மீட்டர் உயரத்திற்குமேல் வெப்பப் புகை மண்டலம் எழும்பியது.



❑ 1945ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6ம் திகதி அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சுக்கு ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா நகர் நாசமானது. அதையடுத்து மூன்று நாட்களுக்குப் பிறகு ஜப்பானில் உள்ள நாகசாகி நகரும் அணுகுண்டு வீச்சில் அழிவுற்றது. இந்த இரு நகரங்களின் பெரிய அழிவினால் அணுகுண்டின் ஆற்றல் மக்களை பீதியடைய வைத்துக் கொண்டிருக்கிறது.

# விடுகதைகளும் விடைகளும்

1. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
2. மங்களத்திற்கு வேண்டியவள் மண்ணுக்குள் இருக்கிறாள். அவள் யார்?
3. கண்ணாடிக்குள் இருந்தபடி காலத்தைக் காட்டுவான். அவன் யார்?
4. எங்க வீட்டுப் பையனுக்குச் சிவப்புத் தாடி. அவன் யார்?
5. பிடுங்கலாம், நடமுடியாது. அது என்ன?
6. தெரிந்து பூப்பூக்கும் தெரியாமல் காய் காய்க்கும். அது என்ன?
7. சட்டையைக் கழற்றியவன் சட்டைசெய்யாமல் போகிறான். அவன் யார்?
8. வட்ட வட்டச் செப்புக்குள் விட்டதெல்லாம் பாம்புக்குட்டி. அது என்ன?
9. கத்தும் கதறும் ஆனால் தண்ணீர் குடிக்காது. அது என்ன?
10. கன்று நிற்க கயிறு மேயுது; அது என்ன?

**விடைகள்**

1. கரும்பு 2. மஞ்சள் 3. கடிகாரம் 4. சேவல் 5. தலைமுடி 6. நிலக்கடலைப்பயிர் 7. பாம்பு 8. இடியப்பம் 9. மேளம் 10. பூசணிக்கொடி.

தொகுப்பு: ஏ.அகல்யா.

# உடைந்த இரவு

## 16

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**



### சென்றவாரம்

**பாஸ்கரும் மைத்ரேயியும் ஜீ.ஹெச். வாசலில் கலக்கத்துடன் காத்து நிற்கின்றார்கள். உள்ளிருந்து ஆர்டலிகள் ஸ்ட்ரெச்சருடன் வந்து விஷமருந்திய பெண்ணை ஏற்றிச்செல்ல; கூடவந்த பொலிஸ் மைத்ரேயி, பாஸ்கர் இருவரிடமும் கேள்வி கேட்டு விட்டு "தேவைப்பட்டால் விசாரணைக்காக கோட்டுக்கு வர வேண்டியிருக்கும்" என்று எச்சரித்துச் செல்கிறார்.**

**காரைக் கிளப்பி மீண்டும் நெடுஞ்சாலையில் நுழைந்து முட்டுக்காடு நோக்கிச் செல்ல-றோட்டில் ட்ராபிக் ஜாம். லாரிகள் இரண்டு மோதியதால் சாலையில் வாகன நெரிசல்.**

**நேரம் அதிகரிக்கவே மைத்ரேயியை அவளது வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டு தான் மட்டும் தனியே காருடன் செல்ல தீர்மானிக்கிறான் பாஸ்கர். கார் வீடு திரும்புகிறது.**

**இனி**

**பா**ஸ்கர் காரை விரட்டிக் கொண்டு போய்விட, மைத்ரேயி வீட்டு காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

போர்டிகோ பரப்பு சோகையான ட்யூப்லைட் வெளிச்சத்தோடு தெரிந்தது.

தினேஷின் தாய்மாமா வையாபுரியும் அவருடைய மனைவியும் இன்னும் சினிமாவிலிருந்து திரும்பவில்லை.

மைத்ரேயி தன் கைப்பையில் வைத்திருந்த சாவியை எடுத்து பங்களாவின் முகப்பு கதவில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டுக்கு விடுதலை கொடுத்து உள்ளே போனாள். கதவைச் சாத்தி உட்பக்கமாய் தாழிட்டுக் கொண்டு ஹாலில் இருந்த சோபாவுக்குப் போய் சாய்ந்தாள்.

உடம்பு பூராவும் அடித்துப் போட்ட மாதிரியான வலி. மனதுக்குள் அதைவிட பெரிய பாரம்.

பாஸ்கர் பட்டாபியின் உடலை ஒழுங்காய் டிஸ்போஸ் பண்ண முடியுமா?

யாராவது பார்த்துவிட்டால் எல்லாமே கெட்டுவிடும். பாஸ்கர் என்னை பொலிஸில் காட்டிக் கொடுக்காவிட்டாலும் கார் என்னைக் காட்டிக்கொடுத்து விடும்.

இந்த இராத்திரி எப்படி கழியப் போகிறதோ...?

'திக் திக்' கென்று ஓயாமல் அடித்துக் கொள்கிற இருதயத்தோடு கண்களை மூடிக்கொண்டு அப்படியே படுத்துக் கிடந்தாள் மைத்ரேயி.

'எவ்வளவு நேரம்?'

அவ்ளையும் அறியாமல் கண்ணயர்ந்து விட,

வாசலில் காலிங் பெல் 'ர்ர்ர்'ரென்று வீறிட்டது. திடுக்கிட்டுப் போய் எழுந்து உட்கார்ந்தாள் மைத்ரேயி.

'வந்திருப்பது யார்....?'

'வையாபுரி மாமாவா....?'

'இல்லை... பாஸ்கரா....?'

வேகவேகமாய் எழுந்து போய் தாழ்ப்பாளை விலக்கி கதவைத் திறந்தாள் மைத்ரேயி.

வெளியே.

வையாபுரி மாமாவும் அத்தையும்.

அவர் ஆச்சரியப்பட்டார்.

"என்னம்மா.... நீ இன்னும் தூங்கலையா...? பெல் குடுத்ததுமே வந்து திறந்துட்டே...?"

"அது..... வந்து....தூக்கம் வரலை.... புஸ்தகம் படிச்சுட்டு



இருந்தேன்."

"நல்ல பொண்ணும்மா.... நீ.... வேளை வேளைக்கு சாப்பிட்டு நேரா நேரத்துக்கு படுத்துக்க வேண்டாமோ....?"

மைத்ரேயி கதவைத் தாழிட்டாள். அவர்கள் இருவரும் மாடிப்படி ஏறினார்கள்.

"பால் ஏதாவது சாப்பிடறீங்களா...?"

"ஏதும் வேண்டாம்மா..... போய் படுத்தா போதும்னு இருக்கு. படமா எடுத்திருக்கானுக பாவிக.... உட்கார்ந்து பார்க்க முடியலை.... டிக்கெட், ஆட்டோ செலவு எல்லாம் சேர்த்து நூறு ரூபாய் தண்டம்..."

பேசிக் கொண்டே பாதி மாடிப்படிகளில் ஏறியவர் சட்டென்று நின்றார்.

"அம்மா! மைத்ரேயி..."

"சொல்லுங்க மாமா...."

"போர்டிக்கோ வெறிச்சுன்னு இருக்கு! கார் எங்கேம்மா?"

"அது...வந்து... ஒரு சிநேகிதி வந்து அவசரத்துக்கு எடுத்துக்கிட்டு போயிருக்கா... நாளைக்கு காலையில கொண்டு வந்துடுவா..."

"அப்படியா...? நான் தினேஷ்தான் ஊர்லேர்ந்து வந்து காரை எடுத்துகிட்டு வெளியே போயிருக்கானோன்னு நினைச்சுட்டேன்...."

இருவரும் மாடிக்குப் போகும்வரை பார்த்துக் கொண்டிருந்த மைத்ரேயி பெருமூச்சோடு மறுபடியும் சோபாவுக்கு போய்ச் சாய்ந்தாள்.

'பாஸ்கர் பாடியை டிஸ்போஸ் செய்துவிட்டு எத்தனை மணிக்கு திரும்புவார்ன்னு தெரியலையே?'

கண்களை மூடினாள்.

பயத்தில் வயிறு பிசைந்தது.

இரவு கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்து கொண்டிருந்தது.

★★★

**ஏ**தோ சத்தம் கேட்டு சட்டென்று விழிப்பு தட்டியது... மைத்ரேயிக்கு.

டெலிஃபோன் படுக்கையறையிலிருந்து முணுமுணுப்பாய் கூப்பிட்டுக் கொண்டிருந்தது.

சுவரில் அப்பியிருந்த க்வார்ட்ஸ் கடிகாரத்தைப் பார்த்தாள் மைத்ரேயி.

மணி 2.45.

ஹால் இருட்டில் வேகமாய் நடந்து படுக்கையறைக்குள் நுழைந்து டெலிஃபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ"

ஃபோன் பண்ணுவது பாஸ்கராய்தான் இருக்கும் என்கிற நினைப்பில் ஆர்வமாய் "ஹலோ" சொன்னவளின் முகம் மறுமுனையில் ஒலித்த குரலைக் கேட்டதும் சட்டென்று மாறியது.

மறுமுனையில் தினேஷ்.

"ஹலோ மைத்ரேயி...."

"எ....எ....என்னங்க.... நீங்களா...?"

"நானேதான்...."

"என்ன.... இந்த நேரத்துல ஃபோன்...?"

"நான் இப்போ டெல்லியிலிருந்து பேசலை மைத்ரேயி?"

"பின்னே...?"

"மெட்ராஸ் மீனம்பாக்கம் ஏர்போர்ட்டிலிருந்து...!"

"எ...என்னது ஏர்போட்டிலிருந்தா...?"

"ஆமா...ஆமா..."

"திடீர்னு புறப்பட்டு வந்திருக்கீங்க... வர்றதா ஒரு ஃபோன் கூட பண்ணலை..."

"பத்து மணியிலிருந்து பதினொரு மணி வரைக்கும் டெல்லி ஏர்போாட்டிலிருந்து நம்ம வீட்டுக்கு ஃபோன் பண்ணிப் பார்த்தேன் ரிங் போயிட்டே இருந்தது."

"ஃபோன் பண்ணீங்களா?"

"ஆமா..."

"நான் வீட்டிலதானே இருந்தேன்...."

"ஃபோன் அவுட் ஆஃப் ஆர்டரா....?"

"இல்லையே..."

"பின்னே நீ எங்கேயாவது வெளியே போயிருந்தியா?"

"இல்லையே...?"

"நீ வீட்ல இருந்திருந்தா ஃபோன் மணி அடிக்கிற சத்தம் உனக்கு கேட்டிருக்கணுமே...!"

"ஓ...! இப்பத்தான் ஞாபகம் வருதுங்க"

"என்ன...?"

"ரூமுக்குள்ளே ரொம்பவும் புழுக்கமாயிருக்குன்னு மாடியில போய் ஒரு ரெண்டு மணி நேரம் படுத்துக்கிட்டிருந்தேன்."

"சரியா போச்சு! நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்.... டெல்லியில நேத்து ராத்திரி எட்டுமணிக்கெல்லாம் எதிர்பாராத விதமா வேலையெல்லாம் முடிந்தது. பதினொரு மணி ஃபிளைட்ல டிக்கட்டும் கிடைச்சுது. உடனே புறப்பட்டுட்டேன். இப்பத்தான் ஃப்ளைட் லேண்ட் ஆச்சு.... லௌஞ்சுக்கு வந்ததுமே உனக்கு ஃபோன் பண்ணினேன்."

"...."

"என்ன பேச்சையே காணோம்...?"

"வந்து...வந்து... இப்படி திடீர்னு நீங்க புறப்பட்டு வந்த சந்தோஷத்துல திணறிட்டிருக்கேன்...."

"அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே உம் முன்னாடி நின்னுட்டிருப்பேன்..."

"வா.... வாங்க...."

தினேஷ் மறுமுனையில் ரிஸீவரை வைத்துவிட மைத்ரேயி உடம்பு பூராவும் நொறுங்கிப்போன உணர்வில் அப்படியே தளர்ந்து போய் உட்கார்ந்தாள்.

'கடவுளே! இது என்ன புது சிக்கல்!'

'இவர் இப்படியா திடீரென்று டில்லியிலிருந்து புறப்பட்டு வர வேண்டும்....?'

இருதயப் பிரதேசம் பந்தய மைதானமாக மாறியிருக்க அதில் நூற்றுக்கணக்கான குதிரைகள் தறிகெட்டு ஓடின.

'பட்டாபியின் உடலை டிஸ்போஸ் செய்ய காரை எடுத்துப் போன பாஸ்கரை இன்னும் காணோம்...?'

'அவர் ஏர்போட்டிலிருந்து வீடுவந்து சேர்வதற்குள் பாஸ்கர் காரைக்கொண்டு வந்து சேர்ப்பித்து விடுவாரா?'

மைத்ரேயியின் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது.

'அவர் வந்து கார் எங்கே என்று கேட்டால் என்ன பதிலைச் சொல்வது...?'

'வையாபுரி மாமாவிடம் சொன்ன பொய்யையே அவரிடம் சொன்னா 'யார் அந்த சிநேகிதி?' என்று கேட்பார்...'

'பாஸ்கர் அதற்குள் வந்துவிட்டால் பரவாயில்லை...!'

'வந்து விடுவாரா?'

ஹாலுக்குள் வந்து மறுபடியும் சுவர் கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி 2.55.

'பாஸ்கர் இந்நேரம் பாடியை டிஸ்போஸ் பண்ணியிருக்க வேண்டும். அநேகமாய் வந்து கொண்டிருக்கலாம்....!'

மைத்ரேயி பொறுமையிழந்து போய் வாசல் கதவைத் திறந்து கொண்டு போர்டிகோவுக்கு வந்த நின்று தெருவைப் பார்த்தாள்.

தெரு இருட்டில் தோய்ந்து போயிருந்தது.

'முதலில் யார் வருவார்கள்...?'

'தினேஷா... பாஸ்கரா....?'

தவிப்பாய் விநாடிகளை நகர்த்தியபடி காத்திருக்க ஆரம்பித்தாள் மைத்ரேயி.

நேரம் 3.00 மணி.

3.10.

3.20.

போர்டிகோ வராந்தாவில் நகம் கடித்து துப்பியபடி நடை போட்டாள்.

3.25.

தெருவில் ஏதோ வெளிச்சம்.

ஆர்வமாய் பார்வையைக் கொண்டு போனாள். வெளிச்சம் அதிகப்பட்டு காம்பௌண்ட் கேட்டை கடந்து போயிற்று.

யாரோ ஸ்கூட்டரில் போனார்கள்.

மைத்ரேயி பெருமூச்சு விட்டுக் கொண்டு- போர்டிகோ தூணில் சாய்ந்து நின்றாள்.

விநாடிகள் கழிய நிமிடங்கள் உற்பத்தியாயிற்று.

3.30.

3.31.

3.32.

3.35

மறுபடியும் தெருவில் ஹெட்லைட் வெளிச்சம்.

வருவது யார்.

'தினேஷா.... பாஸ்கரா...?'

வெளிச்சத்தின் அடர்த்தி கொஞ்சம் சொற்பமாய் கூடிக் கொண்டே வந்தது. காம்பௌண்ட் கேட்டை நெருங்கியது.

ஹார்ன் சத்தம் எழுந்தது.

மைத்ரேயியின் இதயத்துடிப்பு உச்சகட்டத்துக்குப் போயிற்று....!

**(தொடர்ந்து வரும்)**

---

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கே.ஜீவராசா,
வயது: 21
முகவரி: காளிகோவில் வீதி, 2ம் குறிச்சி, ஆரையம்பதி.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், ரீ.வி.



பெயர்: எம். ஸியானுடீன்,
வயது: 25
முகவரி: 141, பஸார் வீதி, வவுனியா.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், வானொலி.



பெயர்: டி. சசாங்கன்,
வயது: 21
முகவரி: P.O.BOX-5803, MANAMA, BAHRAIN.
பொழுதுபோக்கு: பேனாநட்பு.



பெயர்: ஆர். அசோக்குமார்,
வயது: 18
முகவரி: 19/144, பாம் ரோட், மட்டக்குளி, கொழும்பு-15.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: என். பாசில் முஹமட்,
வயது: 20
முகவரி: 5, பிறிட்வெல் பஸார், பொகவந்தலாவை.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: எம். சுபான்,
வயது: 36
முகவரி: P.O.BOX-54139 AL-RABIYA-85352, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. பௌமி,
வயது: 21
முகவரி: இலவன்குளம், புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்: எம். அஸ்லம்,
வயது: 19
முகவரி: குளியாப்பிட்டிய வீதி, ஹொரம்பாவ.
பொழுதுபோக்கு: ரீ.வி., வானொலி.

பெயர்: பி.பார்த்திபன்,
வயது: 21
முகவரி: 42, டி.எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி.
பொழுது போக்கு: ரீ.வி., வானொலி.

பெயர்: எஸ். ரவிச்சந்திரன்,
வயது: 20
முகவரி: 215/3, எல்.ஆர்.ஜி. அப்புகஸ்தென்ன.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: பிரதீப்குமார்,
வயது: 21
முகவரி: 49/3, வின்சென்ட் லேன், வெள்ளவத்தை, கொழும்பு-06.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: முகமட் இப்ராஹிம்,
வயது: 24
முகவரி: 61/4, எஸ்.டி.பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு-15.
பொழுது போக்கு: பாடல்கள் கேட்டல்.

## இதுவரை

சுமதி பள்ளியாசிரியரின் மகள். அவர் சுமதிக்கு தந்தையாகவும் தோழனாகவும் இருந்து அன்புடன் ஆளாக்குகிறார்.
சுமதி கணேசனை காதலிக்கிறாள். இருவரும் திருமணம் செய்கின்றனர். கணேசனைவிட சுமதிக்கு நல்லவேலை, நல்ல சம்பளம். அதனால் கணேசன் தாழ்வு மனப்பான்மை கொள்கிறான். வக்கிரமான அவனது மறுபக்கம் சுமதிக்கு அதிர்ச்சி தருகிறது. சுமதியை கணேசன் கொடுமைப்படுத்துகிறான். வீட்டை விட்டு அடித்துவிரட்டுகிறான். சுமதி தனியாகச் செல்கிறாள். ஒரு மிருகத்துடன் வாழ முடியாத நிலையில் விவாகரத்து கோரும் முடிவுக்கு வருகிறாள்.

இனி...

# கனவு மெய்ப்பட வேண்டும்

## அத்தியாயம் 28

பாரு என்பவள் நவீன ஆடைகள் அணிபவள், மாக்ஸ்முல்லர் பவன், அலியான்ஸ் பிரான்சிஸ், அமெரிக்கன் நூலகம், பிரிட்டிஷ் நூலகங்களில் அவளை நீங்கள் பார்க்கலாம். ஆங்கிலம் சரளமாகப் பேச முயற்சி செய்பவள். சரியாகப் பேசுகிறாளா என்பது வேறு விஷயம். ஆண்களோடு அல்லது ஆண் நண்பர்களோடு அதிகம் காணப்பட விரும்புபவள். சிகரெட் பிடிக்கத் தெரிந்தவள். பீர் குடிப்பவள். தமிழ் சினிமா, தமிழ் இலக்கியம், தமிழ்க் கலாசாரம் எதுவும் அவளது இகழ்ச்சிக்குரிய பொருள். அப்படித் தப்பித் தவறி யாரேனும் சினிமா, இலக்கியத்துறைகளில், ஆத்மசுத்தியோடு உழைக்க முன் வந்தவர்களையும் சேர்த்து சகட்டு மேனிக்குத் தாக்கக் கொஞ்சமும் தயங்காதவள். அப்படிப் பிறர் சாதனைகளைத் தாக்கியும், இழிவு படுத்தியுமே இவள் ஒரு அறிவாளி என்கிற பெயரை முட்டாள்களிடம் சம்பாதித்துக் கொண்டவள்.

பாரு செய்கிற காரியம் முக்கியமாய் இரண்டு. முக்கியத்துவம் வாய்ந்த பெண்களைத் தமக்கு நெருக்கமானவர்களாகப் பிறர் அறியும்படி செய்து கொள்வது. நெருங்கிப் பழகி, மனிதர்க்கே உரிய நிறை குறைகளைத் தெரிந்துகொண்டு புறம் பேசுவது- இந்த இரண்டு காரியங்களையும் சுமதியைக் குறித்துப் பாரு செய்தாள்.

ராஜா கல்ச்சுரல் அகாடெமி என்கிற பெயரில் கலாசார நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது. தமிழகத் தலைநகரில் ராஜாராம் என்பவன் அந்த நிறுவனத்தின் தலைவராகவும், உரிமையாளராகவும் இருந்தான். உடனே ராஜாராமன் கலாசாரக் காதலன் என்று நினைத்துவிடக் கூடாது. கலாசாரத்தைச் சாக்காகக் கொண்டு அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோருடன் தொடர்பு கொள்வதற்காகவே அந்த நிறுவனத்தை அவன் நடத்திக் கொண்டிருந்தான்.

ராஜா கல்ச்சுரல் அகாடெமியின் ஆண்டு விழாவுக்குச் சுமதியை அழைத்திருந்தான் ராஜாராமன். ஏதாவது ஒரு பொருள் குறித்து அவள் பேச வேண்டும் என்று அவன் அவளிடம் கேட்டுக் கொண்டான். கலையின் பெயரைச் சொல்லி அவன் அழைத்த காரணத்தால் சுமதி அந்த விழாவில் கலந்து கொண்டாள். சங்க இலக்கியத்தில் பெண்கள் நிலை என்பது குறித்து அவள் பேசினாள். மேடையை விட்டு இறங்கியபோது பாரு அவளிடம் வந்து தானாகவே தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.

"இந்த மாதிரிக் கூட்டங்களுக்கு எல்லாம் நீங்கள் வர வேண்டுமா? இது ஒரு இலக்கிய மோசடி. இலக்கியக் கூட்டமல்ல" என்று சுமதியைப் பார்த்த மாத்திரத்தில் பாரு கேட்டாள்.

"இந்த மாதிரி மோசடிக் கூட்டத்துக்கு நீங்கள் எதற்காக வந்தீர்களாம்?" என்று சுமதி கேட்டிருக்க வேண்டும். கேட்கவில்லை. அவளிடம் குடி கொண்டிருந்த பண்பாடு அப்படிக் கேளாமல் அவளைத் தடுத்தது.

"இது மாதிரிக் கூட்டங்கள் வரவர கல்யாண வீடு மாதிரி ஆகிவிட்டது நம் பெண்களுக்கு. பட்டுப் புடவைகளைக் கட்டிக் கொள்வதற்காகவே கல்யாணங்களுக்கு அலையும் பெண்கள் மாதிரி. இந்தக் கூட்டங்களுக்கும் மாலைகளுக்கும் பெண்கள் அலையத் தொடங்கிவிட்டார்கள்." சுமதிக்குச் சொரேர் என்றது.

"நீங்கள் பட்டுப் புடவை கட்டியிருக்கவில்லை. வாஸ்தவம்தான். ஆனால் சல்வார் கமீஸ் அணிந்திருக்கிறீர்கள். அதைக் காட்டுவதற்காகவே இந்தக் கூட்டங்களுக்கு வருகிறீர்கள் என்று நான் எடுத்துக் கொள்ளலாமா?" என்று சுமதி கேட்க வேண்டும் என்று நினைத்தாள். ஆனால் கேட்கவில்லை. மீண்டும், முதல் பார்வையிலேயே இப்படி எல்லாவற்றையும் அவிழ்த்துப் போட்டுவிட்டு நிற்க அவளுக்கு மனம் இடம் கொடுக்கவில்லை.

"உங்களிடம் நான் பேச வேண்டும். நீங்கள் எங்கு குடியிருக்கிறீர்கள்?" என்றாள் பாரு.

சுமதி தன் முகவரி அச்சிடப்பட்ட துண்டுச் சீட்டைக் கொடுத்தாள்.



அடுத்த நாளே பாரு சுமதிக்குப் ஃபோன் செய்தாள். அது மதிய உணவு நேரமாக இருந்தது.

"சௌக்கியமா?" என்றாள்.

"சௌக்யம்."

"ஜேன்ஜெனேயின் புத்தகம் ஒன்றை இப்போதுதான் படித்து முடித்தேன். அற்புதமான புத்தகம். 'சிவப்பு ரோஜாக்கள்' என்று பெயர். நீங்கள் அவரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?"

கேள்விப்பட்டிருக்கிறீர்களா என்ற வார்த்தை ஆணவத்தின் அடிப்படையில் பிறந்த வார்த்தை என்பதை சுமதி அறிவாள் தான்.

"கேள்விப்பட்டது மட்டுமல்ல. அவரை நான் படித்தும் இருக்கிறேன். என் நூலகத்தில் அவருடைய புத்தகம் நான்கு இருக்கிறது. அவரைப் பற்றி உலகுக்கு நல்லபடியாக அறிவித்த சார்த்தர் புத்தகங்கள் கூட என்னிடம் இருக்கின்றன. சார்த்தருடைய தோழர் சிமோன் திபுவார் புத்தகம் கூட நான் படித்து என்னிடம் இருக்கிறது. ஜேன் ஜெனே ரொம்பப் பழைய ஆள், சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பே அவரை நான் படித்து விட்டேனே. நீங்கள் இப்போது தான் அவரைப் படித்திருக்கிறீர்கள் என்பதைக் கேட்க, எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது."

எதிர்முனையில், பேச்சு அமைதிப் பட்டது.

பாரு முகம் இருண்டு, தூக்கிப் பிடித்த ஜெயகோஷக் கொடியை மண்ணில் போட்டு விட்டு நிற்பது மாதிரி தெரிந்தது சுமதியின் மனக்கண்ணுக்கு. என்ன இருந்தாலும் சக மனுஷியைத் துன்புறுத்துவது மனிதாபிமானம் அன்று என்பதால் சுமதி தொடர்ந்தாள்.

"நல்ல விஷயத்தை எப்போது தெரிந்து கொண்டால் தான் என்ன; அதில் தவறு இல்லை. எப்போதோ எழுதப்பட்ட மகாபாரதத்தை, இராமாயணத்தை, இப்போது படித்து நாம் வெளிச்சம் பெறவில்லையா? வாருங்களேன் ஒரு நாளைக்குப் பேசலாம்."

பாரு அடுத்த நாளே சுமதியின் அலுவலகத்துக்கு வந்தாள்.

சுமதி, பருத்தி வெள்ளைச் சேலையும், சேலைக்கரையை நிகர்த்த கோடு போட்ட பிளவுசும் அணிந்து வந்திருந்தாள்.

"இந்தச் சேலையை எங்கு எடுத்தீர்கள்?"

"இங்குதான் கைத்தறிக் கடையில்."

"என்ன விலை?"

"இருநூற்று ஐம்பது."

"பார்த்தால் பட்டுச் சேலை மாதிரி இருக்கிறதே....."

"பட்டு என்றால், உங்களுக்கு மிகவும் பிடிக்குமா?"

"பட்டு என்றால் பெண்ணுக்குப் பிடிக்காமல் இருக்குமா?"

"ஏன்? பெண்ணுக்குக் கூடப் பிறந்ததா இந்தப் பட்டும் பருத்தியும்? உலகத்தில் பெண்கள் ஆசைப்பட, அனுபவிக்க எத்தனை உன்னதமான விஷயங்கள் இருக்கின்றன? பெண்கள் என்றதும் பட்டு, நகைகள், இவைகள் தானா அவர்கள் உலகம்?"

பாரு அடி வாங்கினாற் போல நெளிந்தாள். ஒரு ஆரோக்கியமான பெண்ணிடம், தன் வேஷமும், தான் இதுகாறும் ஆடிய அறிவாளி நாடகமும், கலைந்து கரைந்து உருகிப் போனதைத் தெள்ளென உணர்ந்தாள். அவள் மனதில் சுமதிக்கு ஏதேனும் தீங்கு விளைவிக்க வேண்டும் என்ற எண்ணம் உடனே ஏற்பட்டது.

☆☆☆

"எல்லாப் புதிய சிந்தனைகளுக்கும், இயக்கங்களுக்கும், ஆதரவு தருவது போல, அவைகளுக்கு எதிராக இயங்குகிற மனிதர்கள் இருக்கவே செய்வார்கள். இப்போது பெண் விடுதலைக்குப் பாரு!" என்றாள் வசந்தி.

பீட்டர் சிரித்தான்.

"நம் தேசத்தில் பல அர்த்தமுள்ள வார்தைகள் அர்த்தம் இழந்து நிற்கின்றன. அதில் ஒன்று இந்த பெண் விடுதலை. எதனின்றும் இவர்கள் விடுதலை கோருகிறார்கள் என்று அவர்களுக்கே விளங்கவில்லை. மேலும், பெண் விடுதலை என்பது எதிர்மறைக் கருத்தாக மாறி இருக்கிறது. அதாவது ஆணை, எந்தச் சந்தர்ப்பத்திலும், எதிர்த்தே நிற்பது என்பது மாதிரி ஒரு நிலையை அவர்கள் எடுத்து இருக்கிறார்கள். இதுதான் முட்டாள்தனங்களின் ஆரம்பமே. இந்த நாட்டில், ஆண்களும் அடிமைப்பட்டுத் தான் கிடக்கிறார்கள். இதைப் பெண் விடுதலை கோரும் எவரும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை," என்றான் பீட்டர்.

"சுமதி, எனக்கு ஒருத்தியைத் தெரியும். ஒரு கல்லூரியில் பேராசிரியையாக இருக்கிறாள். சிறு பத்திரிகைகளில் அபத்தனமாகக் கதை, கட்டுரை என்று அவ்வப்போது எழுதுவாள். அவளுக்கு ஆண்கள் என்றால் அப்படி ஒரு வெறுப்பு. ஆண்களுடன் பேச நேரும்போது, கொஞ்சம்கூட இனிமை இன்றி, நட்பு இன்றி, மனுஷத்தனம் இன்றி, வெட்டொன்று துண்டொன்றாகப் பேசுவாள். அடுத்த வார்த்தையைப் பேசத் தயக்கம் ஏற்படும் நிலையில் ஆண்களை வெறுப்பாள். அவள் நோக்கம், எந்த ஆணும் தன்னிடம் அத்து மீறி விடக்கூடாது என்பதுதான். இதன் அர்த்தம் என்ன?"

சுமதி சொன்னாள்:

"இது தெளிவாகத் தெரிவதுதானே! ஏதோ ஆண்கள் அத்தனை பேரும் தன்னைப் பலாத்காரம் செய்தே தீர்வது என்று கங்கணம் கட்டிக் கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டு வருகிறார்கள் என்று அந்தப் பெண் காட்டிக் கொள்ள விரும்புகிறாள். ஆண்கள் அப்படி இல்லை. ஆண்களில் அயோக்கியர்கள் இருக்கிறார்கள். பெண்களிலும் அயோக்கியர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். எதைக் கொண்டு நல்லவர், தீயவர் என்று பார்த்த மாத்திரத்திலேயே தீர்மானம் செய்வது?"

"பார்வையை வைத்து மாத்திரம் ஒருத்தர் குண இயல்பைத் தீர்மானித்து விட முடியாதுதான். ஆனால் சுமதி, பெண் விடுதலைக்கு அர்த்தம், ஆண் வெறுப்பா? பெண் விடுதலையின் இலட்சியம் ஆணை வெறுப்பதா?" என்ற வசந்தியின் முகத்தில் கோபம் வெளிப்படையாகவே தெரிந்தது.

பீட்டர் இடைமறித்துச் சொன்னான்:

"அதுதான் சொன்னேனே! இந்த தேசத்தில் எல்லா நல்ல விஷயங்களும் தப்பர்த்தம் கொண்டுவிட்டன என்று. புரட்சி என்ற வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு பெரிய வார்த்தை அது; உலகத்தைத் திருப்பிப் புரட்டிப் போடுகிற வார்த்தை அல்லவா அது?"

(தொடர்ந்து வரும்)

பிரபஞ்சன்

# அவதானம்

"தம்பி!.. போஸ்ட்மன் போலை இருக்கு. ஒருக்காப் போய்ப் பாரன். நான் கையிலை வேலையா இருக்கிறன்," என அடுக்களைக்குள்ளிருந்து அம்மாவின் குரல் எனக்குக் கேட்கிறது.

எரிச்சலுடன் புத்தகத்தை வாசித்தவாறே வெளியே வந்தேன். தபால்காரன் அரச முத்திரை இடப்பட்ட கடிதமொன்றை என் கைக்குள் திணித்துவிட்டுச் சென்றான்.

நான் எதிர்பார்க்காத மகிழ்ச்சி அடைந்தேன். சிறகு முளைத்துப் பறப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டிருந்தது.

வேலை ஒன்றுக்கு எழுதிய போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றுக் கொண்டதன்படி என்னைக் கொழும்புக்கு நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைத்திருந்தார்கள்.

உயர்தரப் பரீட்சை எடுத்து மூன்று வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னும் எந்த வேலையும் கிடைக்காமல் பல வேலைகளை எடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்த எனக்கு மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

எனக்குத் தெரிந்தவர்கள் எல்லோருக்கும் இந்த விடயத்தை சொல்லவேண்டும் போல இருந்தது.

அம்மாவிடம் இதைச் சொன்னதும் அம்மாதான் என்னைவிட அதிகமாகச் சந்தோசப்பட்டாள்.

வேலை எடுப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறபோது இந்த வேலைக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டதும் எனக்கு எங்கள் ஊர் காளி அம்மன் ஞாபகம்தான் வந்தது.

கிராம சேவகரின் நற்சான்றிதழ், சமாதான நீதவானின் நற்சான்றிதழ் இவற்றினைப் பெற்றுக் கொண்டபின் மறுநாள் மாவட்ட ஆதார வைத்தியசாலையில் 'மெடிக்கல் ரிப்போட்' எடுப்பதற்கு சென்றேன்.

மாவட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனை செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டு சிறுநீர், இரத்தம், பல் என்பனவற்றினைப் பரிசோதித்துவிட்டு இறுதியாக கண்பரிசோதனைப் பகுதிக்கு வந்தேன்.

என்னைத்தவிர எல்லோருமே வயதானவர்கள்- கண்பரிசோதனைப் பகுதியில் வரிசையாக இருந்தார்கள். நானும் அவர்களுடன் ஒட்டிக் கொண்டேன்.

கண்களில் எந்தப் பிழையுமில்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். இந்த வேலைக்கு உடல்நிலை நல்ல உறுதியாக இருக்க வேண்டியது அவசியமாக இருப்பதால் அவர்களுக்கு உடல் நிலை பற்றிய உறுதியை உறுதிசெய்வதற்காகவே இந்த 'மெடிக்கல் ரிப்போட்.'

வேகவேகமாக ஒவ்வொருத்தராக சென்று வெளியேறிக் கொண்டிருந்தனர். 'இந்த வயதிலை கண் பரிசோதனைக்கு வந்திருக்கிறானே' என என்னைப் பார்த்துக் குறைவாக மதிப்பிட்டு விடுவார்கள் என்ற எண்ணம் என்னிடம் அந்த நேரம் இருந்தது.

என்னுடைய முறை வர, உள்ளே சென்றேன். எனது ஒரு கண்ணை அட்டை ஒன்றினால் மறைத்துக் கொண்டு எதிரே உள்ள சுவரில் தொங்கவிடப்பட்டுள்ள எழுத்துக்களையும் மிகச்சிறிய எழுத்துக்களைக் கொண்ட புத்தகமொன்றின் பக்கத்தையும் வாசிக்க டொக்டர் சொன்னார்.

நான் குதிரை வேகத்தில் வாசித்தேன். "என்ன தம்பி! பாடமாக்கிவிட்டு வந்து வாசிக்கிற மாதிரி வாசிக்கிறீர்?" என்று எனது கண் கூர்மையைப்பற்றி டொக்டர் சொன்னது, நான் ஏதோ எவராலும் செய்ய முடியாத சாதனையைச் செய்து விட்டது போல எனக்குள் பெருமைப்பட்டுக்கொண்டேன். அதுமட்டுமில்லாமல் எனது நண்பர்களிடமும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டேன்.



யாழ்–மு.கலை

நேர்முகப் பரீட்சைக்குத் தேவையான எல்லா ஆவணங்களுடனும் கொழும்பு சென்று நேர் முகப்பரீட்சையில் தோற்றிவிட்டு வந்து விட்டேன்.

எல்லாத் தகைமைகளும் குறிப்பிட்ட வேலைக்கு வைத்திருந்தபடியால் எனக்கு அந்த வேலை கிடைப்பதில் சந்தேகம் இல்லை.

நியமனக் கடிதத்தை எதிர்பார்த்து, தினமும் தபால்காரனைச் சந்தித்து ஏமாந்து நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களான வேளையில், குறிப்பிட்ட வேலைக்கு நியமனம் வழங்குகின்ற கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுவிட்டதாக தினசரி ஒன்றில் இருந்தது.

அந்தச் செய்தி வெளியாகி வாரமொன்றாகியும் எனக்கு நியமனக் கடிதம் வரவில்லை.

அதனால் மீண்டும் என்னைக் கவலை பற்றிக் கொள்ள, ஒழுங்காக சாப்பிடாமலும் தூங்காமலும் நொந்து போனேன்.

எனக்கு நியமனம் கிடைக்காமைக்கான காரணத்தை அறிய குறிப்பிட்ட வேலைக்கு நியமனம் வழங்குகிற தலைமைக் காரியாலயத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

எனக்கு நியமனம் வழங்கப்படாமைக்கு அவர்கள் சொன்ன காரணத்தை என்னால் நம்பமுடியவில்லை. அதை உறுதிப்படுத்த வீட்டுக்கு விரைந்து வந்து கொண்டிருந்தேன்.

அவர் தொலைபேசியில் சொன்னதுதான் என் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தது.

"உங்கள் கண்ணிலை குறைபாடு இருக்கிறபடியால் நீங்கள் கண்ணாடி பாவிக்க வேணுமென்று உங்களுடைய மெடிக்கல் ரிப்போட்டில் குறிப்பிட்டுள்ளதால் உங்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை" அப்போதுதான் நான் ரிப்போட்டை வாசித்துப்பார்த்தேன். "கிளாஸ்", "நோ கிளாஸ்" என்ற இரண்டு சொற்களில் "நோ கிளாஸ்" எனும் சொல் வெட்டப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ந்தேன். நான் மூக்குக் கண்ணாடி பாவிக்க வேண்டும் என்பதே அதன் அர்த்தம்.

ஒரு கணமும் தாமதியாமல் வைத்தியசாலைக்கு வந்து, குறிப்பிட்ட வைத்தியரிடம் மெடிக்கல் ரிப்போட்டைக் காட்டினேன்.

எனது கண்ணில் எந்தக் குறையுமில்லை என்றும் தான் தவறுதலாக "கிளாஸ்" என்ற சொல்லை வெட்டுவதற்குப் பதில் "நோ கிளாஸ்" என்ற பதத்தை வெட்டியதாகவும் கூறி அதற்காக என்னிடம் மன்னிப்புக்கேட்டு இலகுவில் தப்பித்துக் கொண்டார்.

ஆனால், என்னால் இலகுவில் ஒரு வேலையை எடுக்க முடியுமா?

அவர் தனது அவதானமின்மைக்காக வருந்துகிறாரோ தெரியவில்லை. ஆனால் மெடிக்கல் ரிப்போட்டை உடனேயே நான் வாசித்துப் பார்த்திருந்தால் இந்த வேலையை தவற விட்டிருக்க வேண்டிய நிலை வந்திருக்காது.

என்னுடைய அவதானமின்மைக்காக நான் இன்றும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால், இன்னும் நான் ஒரு அரசாங்க உத்தியோகத்தைப் பெறவில்லை.

# அண்ணாவின் காதலி

**"இன்னும் ஒரு வருட பட்டப்படிப்பு முடிந்ததும் உன்னிடம் வந்து விடுகிறேன் இந்திரா...!"**

ஆசைக்கொன்று, ஆஸ்திக்கொன்று என்றுதான் பலபெற்றோர்கள் பிள்ளைகளைப் பெற விரும்புவார்கள்.

சிவசோதி ரீச்சர் ஆஸ்திக்குத்தான் என்பதுபோல் இருவரையும் ஆண்களாகவே பெற்று விட்டிருந்தாள்.

பெண்குழந்தைகள் இல்லையே என்று இதுநாள்வரை அவர் கவலைப்பட்டதாக இல்லை. ஆனால் இருவரையும் நிறையப் படிப்பித்து நல்லதொரு உயர்ந்த பதவியை எட்டவைக்க வேண்டுமென்றுதான் அவளின் இலட்சியம் இருந்தது.

அதன்படி மூத்தவன் பத்தாவதை நெருங்கிக்கொண்டிருந்தான். இந்த நேரத்தில் ரீச்சருக்கு ஒரு சிறு குறை ஏற்பட்டது உண்மை. பிள்ளைகள் கவனமெடுத்து படிக்க வேண்டிய இந்தக்காலத்தில் அவர்களுக்கு



**களுவாஞ்சிக்குடி யோகன் – அவுஸ்திரேலியா**

நேரத்திற்கு சமைத்துக் கொடுத்து, வீட்டு வேலைகளை ஒழுங்காகக் கவனிக்க முடியாமல் அவரின் ஆசிரியப் பணி அவரைத் தடுத்தது.

இதனால் பக்கத்து வீட்டிலுள்ள இந்திராவை வீட்டு வேலைகளுக்குத் துணையாகக் கூப்பிட்டார் ரீச்சர்.

இந்திராவின் பெற்றோர் மிகவும் வறுமைப்பட்ட நிலையிலிருந்தனர். வறுமைப் பட்ட நிலையிலிருந்தார்களே தவிர குணத்தில் அத்தனை பேரும் தங்கம். அதிலும் மூத்தமகள் இந்திரா விசேடமாகவே விளங்கினாள். வீட்டு வேலைகளில் கூட அவள் மிகவும் சாதுர்யமாக மிளிர்ந்தாள். அதுமட்டுமல்ல நேர்மை, அழகு, அடக்கம் என்பன இயல்பாகவே அவளிடம் குடிகொண்டிருந்தன.

ரீச்சரின் குடும்பத்தில் முற்றுமுழுதான ஈடுபாட்டுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொள்ள ஆரம்பித்தாள் இந்திரா.

அவளின் நடவடிக்கைகள், குணங்கள் அத்தனையும் ரீச்சரின் மனதில் ஒரு விசேடமான பிடிப்பை ஏற்படுத்தியது. இந்தப் பிடிப்பு இந்திராவை தமது மருமகளாக்கி விடவேணும் என்ற நல்லெண்ணத்தையும் தூண்டிவிட்டது.

இதனால் தனது மூத்த மகனுக்குத்தான் இந்திரா என்று ரீச்சர் அப்போதே தீர்மானம் பண்ணிவிட்டார்.

அப்போது அவரின் மூத்தமகன் 'அட்வான்ஸ்லெவல்' படித்துக் கொண்டிருந்தான்.

காலப்போக்கில் அந்தமகனுக்கும் ஏன் இந்திராவிற்கும் கூட இந்த விஷயம் தெரியும்படியாக வந்தது.

அவர்கள் இருவருக்கும் ஒருவரையொருவர் பிடித்திருக்கவேண்டும்.

இருவரும் சந்தர்ப்ப சமயம் பார்த்து தனியாகச் சந்திக்கத் தொடங்கினர். காதல் பரிமாற்றங்களை அள்ளி வீச ஆரம்பித்தனர்.

அவர்களின் காதல் வலுப்பெற்றிருந்த நேரம், அவனது 'யூனிவேசிற்றி' படிப்பும் முடிந்து போயிற்று. 'யூனிவேசிற்றி' முடிந்த கையோடு லண்டனில் ஒரு 'ஸ்கொலஷிப்'பும் கிடைத்தது.

இலகுவாக வந்த அரியவாய்ப்பு; தவறவிட முடியவில்லை. அவன் லண்டன் பயணமானான்.

போகும்போது இந்திராவின் மனதையும் அள்ளிக்கொண்டுதான் போனான். அனேகமாக கிழமைக்கு ஒரு கடிதம் அவனிடமிருந்து இந்திராவிற்கு வந்துசேரும்.

"இன்னும் ஒருவருடப் படிப்பு முடிந்ததும் உன்னிடம் ஓடிவந்துவிடுவேன் இந்திரா," என்று அறிவித்திருந்தான்.

அந்த ஒருவருடத்தையும் வாஞ்சையுடன் காத்திருக்கத் தொடங்கினாள் இந்திரா.

ஐந்து விரல்களும் ஒரே மாதிரியாக இருந்துவிடுவதில்லை. இப்படித்தான் ரீச்சரின் மூத்தமகனுக்கும் இளையமகன் கபிலுக்குமிடையே பலவேற்றுமைகள் இருந்தன.

குறிப்பாக கெட்டிக்காரன், குழப்படியில்லாதவன் என்ற பட்டங்களை தமயனே தாயிடமிருந்து தட்டிக் கொண்டவன்.

கபிலால் அட்வான்ஸ்லெவலைக் கூட பூர்த்தியாக்க முடியவில்லை. தமயன் லண்டனில் இருக்கும்போது தானும் வெளிநாடு போகவேண்டும் என்று தாயிடம் கேட்டான் கபில். நாடு இருந்த நிலையில் தாயாரும் அதையே விரும்பினார்.

"அங்கென்றாலும் போய்முன்னேறப் பார்!" என்று கபிலையும் தமயனுடனேயே அனுப்ப முற்பட்டார் தாய்.

"எனக்கு லண்டன் வேண்டாம்!" என்ற கபில் சுவிசுக்கு வந்து சேர்ந்தான்.

கபில் சுவிஸ் நாடு வந்துவிட்டதை அறிந்த தமயன் மிகவும் சந்தோஷப்பட்டான். அதை வெளிப்படுத்தும் முகமாக அடிக்கடி லண்டலிருந்து ரெலிஃபோனில் கபிலுடன் தொடர்பு கொண்டான்.

வெளிநாட்டில் எப்படியெல்லாம் நடந்து கொள்ளவேண்டும். எப்படியெல்லாம் நடந்து கொள்ளக்கூடாது என்று புத்திமதிகள் வேறு கூறிக்கொள்வான்.

கபிலுக்கும் தமயனிடம் பாசம் அதிகம். பாசத்தைவிட மதிப்பு இன்னும் அதிகம். அவனும் நேரம் கிடைத்தபோதெல்லாம் தமயனுடன் தொடர்பு கொள்ளத் தவறுவதில்லை.

ஆனால் கடந்த இரண்டு மாதங்களாக தமயனிடமிருந்து எந்தவிதத் தொடர்பும் கபிலுக்குக் கிடைக்கவில்லை. அவன் பல தடவை ரெலிஃபோனில் தொடர்பு கொண்டு பார்த்தான். ஃபோன் இலக்கங்கள் மாற்றப் பட்டுவிட்டதாகச் சொன்னார்கள். யோசித்தவாறு நாட்டிலுள்ள தாய்க்குக் கடிதமெழுதிப் போட்டான்.

இன்று காலையில்தான் தாயிடமிருந்து பதில் கடிதம் வந்திருந்தது. கடிதத்தை வாசித்தபோதுதான் கபில் அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்தான். அண்ணாவின் மேலிருந்த மலையளவு நம்பிக்கையும் தூள் தூளாய் நொறுங்கிப் போயிற்று. அண்ணா லண்டனில் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துவிட்டாராம். இதைத் தாங்க முடியாத இந்திரா, நஞ்சருந்தி, அவளின் உயிர் காப்பாற்றப்பட்டு விட்டதாம்.

அம்மா அழுது கொண்டும், அண்ணாவைத் திட்டிக்கொண்டும் எழுதியிருந்தாள். கபிலுக்குத் தாயின் தவிப்பு நியாயமாகவே பட்டது. தமயனை நினைக்க அவனுக்குச் சினமேறிக்கொண்டு வந்தது.

"அண்ணா ஒரு கோழை, மனதை அலைபாயவிடும் பட்ஷி!" எனத் திட்டித் தீர்த்தான். பெண்களின் மனம் மென்மையானது என அவன் கேள்விப்பட்டிருக்கிறான். அந்த வகையில் இந்திரா எப்படித்தான் அண்ணாவின் துரோகத்தை ஜீரணித்துக் கொண்டிருக்கிறாளோ என அவனுக்கு ஆச்சரியமாக விளங்கியது.

அந்தளவிற்கு அவர்கள் நெருங்கிப் பழகி உறவாடியிருக்கிறார்கள். கபில்கூட அவர்களைப் பல தடவை தனிமையில் பார்த்திருக்கிறான். பார்த்தும் பாராதது போல் போயிருக்கிறான். வீட்டுக்குப் பின்னாலுள்ள அந்தப் பவள மல்லிகைப் பந்தலுக்கு வாயிருந்தால் அது அவர்களைப் பற்றிக் கதை கதையாக எடுத்துச் சொல்லும். இருந்தும் நாமென்ன செய்துவிட முடியும்? இன்னாருக்கு இன்னாரென்று எழுதியிருக்கிறது என்று எண்ணிக் கொண்டு வேலைக்குப் புறப்பட்டுப் போனான்.

தமயனின் துரோகச் செயலை நினைத்து வெதும்பியவாறு கருமத்தில் ஈடுபட்டான். அன்றைய வேலை முடிந்து வீடு வர இரவு பன்னிரெண்டு மணியாகியது. அந்த நேரத்திலும் தாயாருக்குப் பதில் கடிதம் எழுத வேண்டும்போல் தோன்றியது. காகிதம் தேடி எழுதத் தொடங்கினான் கபில்.

**அன்பார்ந்த அம்மா,**

*எனது நலத்திற்கு உங்கள் ஆசிர்வாதங்கள் தேவை. அண்ணா இப்படித் திடீரென செய்த காரியத்திற்காக வெட்கித் தலை குனிகிறேன். அது தவிர, நானும் ஒரு பெண்ணை விரும்புகிறேன். அதற்கு உங்களினதும் அந்தப் பெண்ணினதும் சம்மதம் தேவை. உங்களின் முடிவை அறியத்தந்ததும் அங்கு வந்து திருமணஞ்செய்யக் காத்திருக்கிறேன். நான் விரும்பும் பெண் வேறு யாருமல்ல! இந்திராவேதான்.*

இப்படிக்கு,
மகன்
பா. கபில்.

கடிதத்தை எழுதி முடித்தபோதுதான் மனதுக்கு இதமாக இருந்தது. நாளை காலை அதை தபாலில் சேர்த்துவிடவேண்டும் என்று எண்ணியவாறு நித்திரைக்குப் புறப்பட்டான் கபில். ■

# கையொப்பம்

**தினம் வார்த்தைகளை நெருப்பில் தோய்த்து வீசினான். அவள் பெண்மை அவமானப்பட்டு நின்றது.**

"இந்தா நான் சொல்றதைக் கேளு. பேசாம கையெழுத்துப் போடு; இல்லைன்னா நடக்கிறதே வேறு!"

"என்னங்க இது? எதுக்கு இப்பிடி நடந்து கொள்ளுறீங்க? உங்களை நம்பி வந்தவ நான். இத்தனை வருச வாழ்க்கைல நமக்கு குழந்தை பிறக்கலைன்னாலும் ஒருத்தருக்கொருத்தர் அன்பா, அநுசரணையா வாழ்ந்தோமே. அதைக் காலம் பூராத் தொடர்ந்துட்டாப் போகிறது."

"எனக்குச் சலிச்சுட்டுது. குழந்தை வேணும். மலடியைக் கட்டிக்கிட்டு கண்ட சுகம் என்ன?"

வெறுப்போடு வார்த்தைகளைக் கக்கினான் ராமு.

வஸந்தி துடித்துப் போய் நின்றாள்.

இதே வார்த்தைகள் அவர்களுக்கும் சேரும் என்பதை ஏன் மறுக்கிறார்கள்? இதற்குப் பெண் மட்டும்தான் காரணமா என்ன? குழந்தை பிறக்காததற்கு அவள் என்ன செய்ய முடியும்!

உண்மை அன்பு இருந்தால் அது எந்தக் குறையையுமே பெரிதாக எண்ணாது. இதயத்தை மட்டும் நேசிக்கத் தெரிந்தால் இல்லாதவை என்னவென்று தேடாது.

ஒரு காலத்தில் வஸந்தி கணவன் ராமுவின் அன்பைப் பெரிய பொக்கிஷமாகத்தான் கருதினாள். போகப் போக அவனிடம் மாறுதல்கள் தெரிந்தன.

புதுப் புது சிநேகங்கள், சிநேகிதிகள், புதிய எதிர்பார்ப்புக்கள் இருந்தன அவனிடம்.

"இதோபார் வஸந்தி! பெற்ற குழந்தைகள் எல்லாம் முடிவுவரை பெற்றவர்களைத் தாங்குவதில்லை. தமக்கென்று வாழ்வை அமைத்துக் கொண்டதும் பெற்றவர்கள் சுமையாகத் தெரிகிறார்கள். ஒதுக்கி விடுகிறார்கள், அல்லது ஒதுங்கிப் போகிறார்கள். ஒரு சுகத்தின் பின்னே வரும் சுமை, அந்தச் சுமையை நாம சுமக்காமல் நாமிருவர், நமக்குள் நாமே ஒருவருக்கொருவர் என வாழ்ந்தால் சுகம், சுலபமானதாக இருக்காதா? கவலையை விடு!" எனக் கட்டியணைத்து ஆறுதல் சொன்ன இவனா, இன்று அதே குழந்தையைக் காரணம் காட்டி விவாகரத்திற்கு கையொப்பம் கேட்கிறான்?

தினம் வார்த்தைகளை நெருப்பில் தோய்த்து வீசுகிறான். அவள் பெண்மை அவமானப்பட்டு சிறுமையில் மறுகிய வேளைதான் அப்பப்பா.. பொல்லாத வார்த்தைகள் பொலு பொலுவென்று கொட்டும்போது அவள் செவிகளைப் பொத்தியபடி கண்ணீரில் நனைந்தாள்.

ஆனாலும் அந்த நாளைய பாசத்தைத் தொட்டு அவன் உணர்ச்சிகளை உசுப்ப முடியுமாவெனப் பொறுமையாக ஆராய்ந்தாள். ராமுவோ விடாப் பிடியாக நின்றான். கைநீட்டும் அளவுக்கு அவனது வெறி முற்றியிருந்தது.



இப்போ கடைசித் தடவையென எச்சரித்துவிட்டு வண்டியின் உறுமலில் கோபத்தை வெளிப்படுத்தியவனாகப் போன போது திகைத்துப் போனவளாக கையில் வைத்திருந்த பத்திரத்தை வெறித்தாள்.

எவ்வளவு நேரம் அப்புடி உட்கார்ந்திருந்தாளோ, அவளுக்கே தெரியவில்லை. சடுதியாக ஃபோன் அலறியது. திடுக்கிட்டவளாக ஃபோனை எடுத்தவள் அதிர்ந்து போனாள்.

அங்கே ஹொஸ்பிட்டலில் கட்டுக்களில் பொதிந்து கிடந்தவனைப் பார்த்ததும் இதுவரை அவளது நெஞ்சைப் பிசைந்து கொண்டிருந்த கையொப்பப் பிரச்சனை, அதனால் ஏற்பட்ட மன வேதனைகள் எல்லாம் மறந்துபோயின.

அங்கே, இங்கே அசையாமல் அங்கேயே, அவன் அருகேயே இருந்தாள். குழந்தையைப் பராமரிக்கும் தாயானாள். அன்பும், அரவணைப்புமாகத் தாங்கிக் கொண்டாள் கணவனை.

ராமு தேறியெழுந்ததும் செலுத்த எண்ணிய காணிக்கையைக் கொடுத்து அவன் பெயரில் அர்ச்சனை பண்ணிப் பிரசாதத் தட்டுடன் வார்டை நோக்கி நடந்தவள் டொக்டர் உள்ளே இருப்பதனால் சற்றுத் தயங்கினாள்.

"மிஸ்டர் ராமு நீங்கள் முழுதாகக் குணமாகிவிட்டீர்கள். உங்க மனைவிக்குத்தான் நீங்க முதலில் நன்றி சொல்லணும். குழந்தையாக எண்ணிப் பொறுப்போடு கவனிச்சுண்டா; கொடுத்து வைச்சவர் நீங்க. இனி வீட்டுக்குப் போகலாம். ஆனாலும் ஒண்ணை மட்டும் எங்களாலை சீராக்க முடியலை!"

டாக்டரைப் புரியாமல் பார்த்த ராமு "என்ன,டாக்டர்,என்ன?" என்றான் படபடப்புடன்.

"பயப்படும்படி ஒண்ணுமில்லை. உங்களாலை இனிக் குடும்ப வாழ்க்கைல ஈடுபட முடியாது, அடிபட்டதில் ஆண்மை போய்விட்டது."

"டாக்டர் ப்ளீஸ்... என் என் மனைவிக்குத் தெரிய வேண்டாம். அவளாலை இதைத் தாங்கிக்கொள்ள முடியாது," என்றான் அவசரமாக.

சதா விவாகரத்துக்கு கையெழுத்துக் கேட்டு நச்சரித்தவனா இப்படிக் கூறுகிறான். உண்மைதானா? இதைத் தாங்கிக் கொள்ள முடியாதா? எங்கே தன் குறை தெரிந்தால் மனைவி வேண்டாம் எனக் கையொப்பம் இட்டு விடுவாளோ என்கின்ற பயம் அதில் தொனிப்பதை உணர நேரம் பிடிக்கவில்லை வஸந்திக்கு.

'இவ்வளவுதானா நம்பிக்கை? இவர்கள் எப்பவுமே பெண்ணை வேறு போகப் பொருளாக- அதற்காக ஏங்குபவளாக

**ஜெயமணி**

எண்ணுவதிலிருந்து மாறப்போவதில்லையா? தங்கள் ஈகோவை நிலை நாட்டுவதுதான் குறியா? உள்ளே உயிருக்கு உயிர் துடிக்கும் அன்பால் உருகும் இதயம் ஒன்றிருப்பதை உணரவே மாட்டார்களா?'

வெறுப்புப் படர்ந்தது அவன்மீது.

சாதாரணமாக நுழைந்தாள் வஸந்தி. தட்டை நீட்டினாள். "எடுத்துக் கொள்ளுங்க. நீங்க குணமாக நான் வேண்டிக்கிட்டேன்" என்றாள்.

விபூதி, குங்குமத்தைத் தொட்டு நெற்றிக்கு இட்டுக் கொண்டவன் கைகள் உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஆடின,

"என்னங்க இப்பிடி நடுங்குது?"

"ஒண்ணுமில்லை" என்றவன் அவளை விழி வாங்காமல் பார்த்தான்.

'இவளை, இவளிடமா நான் பிரிந்து போக கட்டாயப்படுத்தினேன். எத்தனை பேசினேன். என்னென்ன கேவலமான வார்த்தைகள். இன்று ஆண்மையே போய் எதற்கும் லாயக்கற்றவனாக ஜடமான உடலைச்சுமந்து அவள் சேவையில் உயிர் பிழைத்து.... சே, என்ன மிருகத்தனம் அப்போது எனக்கு ஏற்பட்டிருந்தது?'

தனக்குள் எழுந்த கழிவிரக்கத்தில் கூனிக்குறுகி கண்கள் கலங்க மன்னிப்புக் கோர நிமிர்ந்தான்.

கைப்பைக்குள் இருந்த அதை எடுத்தாள் வஸந்தி, குறிப்பிட்ட இடங்களில் நிதானமாக, அழகான தன் கையொப்பத்தை இட்டாள்.

"ப்ளீஸ் வஸந்தி என்னை மன்னிச்சுடு!"

"எதுக்கு மன்னிக்கணும்? நீங்க கேட்டது நியாயம்தானே? இது வரை நான் யோசிக்காதது என் தப்புத்தான். இதோ, இனி நீங்க உங்க விருப்பப்படி வாழலாம், குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம்." அழுத்தமாகக் கூறிவிட்டு வெளியே நடந்தாள்.

தனக்கு ஏற்பட்ட இழப்பைச் சொல்ல முடியாத அளவுக்கு தானே விரிசலை ஏற்படுத்திக் கொண்டுவிட்ட ராமு மனம் குமைந்து புழுங்கிக் கொண்டிருந்தான். ■

# ஆன்மாவின் ஓலம்...!

**"நீ கொலைகாரன் என் பிள்ளையைக் கொன்னுட்டே.... கிட்டவராதே..."**

சுமதி தன் முதுகைச் சுவரோடு சாய்த்துக் கால்களை நீட்டியபடி உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் இருந்த காலை- மதிய உணவுகளெல்லாம் கவனிப்பாரற்றுக் கிடந்தன. சுமதியின் அழகான கேசம் சீப்பைக் காணாது சிக்குப் பிடித்துக் கிடந்தது. அவளுடைய பார்வை மட்டும் எதையோ தேடியது.

"சுமதி, பிளீஸ்மா... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு. தயவு செய்து நீ எதையாவது சாப்பிடு!" அவள் கணவன் கணேஷ் கெஞ்சினான்.

அவளிடமிருந்து பதில் இல்லை. கண்ணீர்தான் வழிந்தது. சுமதியின் கரங்களை ஆவலோடு பற்றி ஆதரவாக அணைத்தான் கணேஷ்.

சுமதியின் பார்வையில் வெறுப்பு உமிழ்ந்தது. "நீ கொலைகாரன். என் பிள்ளையைக் கொன்னுட்டே கிட்டவராத..." சுமதி பைத்தியம் பிடித்தவள் போல் பயங்கரக் கூச்சலிட்டு அழுதாள். கணேசுக்கு என்ன செய்வது; என்ன சொல்வது என்று தெரியவில்லை? அவன் உண்ணவும் உறங்கவும்



**ரூபராணி**

மறந்து போனான்.

அவனுடைய முகம் துறவுக் கோலம் பூண்டு பல நாட்களாகிவிட்டன. 'சுமதி சொல்லுவதுபோல் நான் கொலைக்காரனா? ஒருவேளை அவள் சொல்வது...?' அவனால் எதையும் மேற்கொண்டு யோசிக்க முடியவில்லை.

அந்த நாள் ஞாபகம்....

"என்னங்க நம்ம யாதவனுக்கு ஸ்கூல்ல அட்மிஷன் கிடைச்சது ஞாபகமிருக்கா? அவனுக்குத் தேவையானதெல்லாம் வாங்க வேண்டாமா?" சுமதி அவள் கணவனை நெருங்கினாள்.

"நான் மறக்கல்ல.... உன்னையும் உன் மகனையும் ஊர்வலமா அழைச்சிப் போகணுமா? சொல்லு! இதோ நான் ரெடி!" கணேஷ் சுமதியை அலாக்காகத் தூக்கிச் சுழற்றினான்.

சுமதி கால்களை அடித்து குழந்தையைப் போல் துள்ளினாள். அவளுடைய முகத்தில் நாணம் வட்டமிட்டது. "இந்த வயசிலயும் உங்களுக்கு விளையாட்டா?" சுமதி சிணுங்கினாள்.

"பின்னர் எந்த வயசில் விளையாடறதாம்? இந்த பார் சுமதி! நமக்கு வயசுபோனாலும், யாதவன் வளர்ந்து பெரியவனானாலுங்கூட நாங்க இருவரும் காதலர்கள்தான்." கணேஷ் சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தான்.

"சீ போங்க... எனக்குள்ள ஆசை என்ன தெரியுமா?" சுமதியின் வாயிலிருந்து வார்த்தைகள் விழுமுன் "என்ன என்ன சொல்லு! இந்திரன் வேணுமா சந்திரன் வேணுமா?" அவசரப்பட்டான் கணேஷ்.

"அப்பா... நாளக்கி ஸ்கூல்போக எனக்கு ட்றிங்போத்தல் வேணும்..." குறுக்கே ஓடி வந்து தன் ஆசையைச் சொல்லி விட்டுச் சிட்டாய்ப் பறந்து போனான் யாதவன்.

ஏழாண்டு தவமிருந்து பெற்ற ஒரே செல்வன் யாதவன். அவனுக்கு வயசு நாலு. ஜாடையில் அம்மாவையும் குணத்தில் அப்பாவையும் ஒத்திருந்தான். 'அவனை நல்லபடியா வளர்த்து ஒரு டாக்டராக்கிப் பார்க்கணும்.' சுமதியின் கண்களில் யாதவனின் எதிர்காலம் பளிச்சிட்டது.

"ஷொப்பிங் எத்தனை மணிக்கு?" கணேஷ் சுமதியைச் சுய நினைவுக்குத் திருப்பினான்.

"நாலு மணிக்குப் போவோமா?"

கார் ஐந்து மைல் தொலைவில் உள்ள நகரத்தை நோக்கிப் பறந்தது. எங்கும் நத்தார் மலிவுவிற்பனைப் பரபரப்பு. பொங்கி வழியும் சனக்கூட்டம் யாதவன் அலங்காரங்களிலும் விளையாட்டுப் பொருட்களிலும் மெய்மறந்து போனான்.

யாதவன் காட்டிய பொருட்களை எல்லாம் கணேஷ் வாங்கிக் கொடுத்தான்.

யாதவன் ஸ்கூலுக்குப் போகப் போகிறான் என்ற நினைவு சுமதிக்கு மகிழ்ச்சியூட்டியது.

அவனுக்குத் தேவையான பொருட்களெல்லாம் காரின் பின்சீற்றில் இடம்பிடித்துக் கொண்டன. யாதவன் ட்றிங்போத்தலை மட்டும் இறுகப்பற்றிக் கொண்டான். மணி ஆறை நெருங்கிக் கொண்டிருந்தது. வீட்டு வாசலில் போய் கார் நின்றது.

சுமதி வாங்கிய பொருட்களுடன் வீட்டை நோக்கி நடந்தாள். அவளைப் பின்தொடர்ந்த யாதவனின் ட்றிங்க்போத்தல் தவறிக் கார் ரயறின் அருகே விழுந்ததைச் சுமதி அறியவில்லை.

கணேஷ் காரை முன் பின்னாக ஓட்டிய சமயம் யாதவனும் ட்றிங்போத்தலை எடுக்க முயற்சித்தான். கணப்பொழுதில் கார் யாதவனைக் அரைத்துவிட்டது. கணேஷின் நினைவுகள் பட்டென்று அறுந்தது. "யாதவா உன்னை கொன்று விட்டேனே!" அலறினான் கணேஷ்.

அலறலில் அதிர்ந்துபோன சுமதி ஓடிவந்து அவன் மடியில் வீழ்ந்தாள்.

"விதியா...? என் கவனக்குறைவா...?" அவள் ஆன்மாவின் ஓலம் அவளுக்கு மட்டும் கேட்டது. ■

# இலக்கிய நயம்

# உடம்பு இரண்டு

துருவது ரசிகன்



நம்பத்தான் முடியவில்லை-ஆற்றங்
கரைக் காட்சி
நம்பத்தான் முடியவில்லை.

தென்றல் வீசிய போதினிலே
கதிரவன் விலகிய வேளையிலே
குளிர்ந்த நிலவென வந்தவளை
கண்கள் கண்டதும் பாய்ந்தனவே!

இதழ்களில் ஏறிய புன்னகையும்-சங்கு
கழுத்தினில் ஆடிய பொன்நகையும்
கொண்டவள் வந்தாள் கொள்ளையிட!
புன்னகை சிந்திய பால் ஒளியில்-அந்தப்
பொன்நகை தோற்றுப் போனது மெய்!

கொடியினில் மலர்ந்த பூக்களினை-ஒரு
நொடியினில் பறித்து முடித்திடலாம்.
கொடி உடலினில் பூத்த அழகுகளை-விழி
பறித்திட முயன்று தோற்றது மெய்!

கரம்போல் நீண்ட அவன் விழிகள்
கனிகளைத் தீண்ட முடியாமல்
கடும் பிணி கொண்டு கலங்கினவே!

முற்றித் திரண்ட இளநீரில்-விழி
பற்றிப் புரண்ட வேளையிலே
கத்தி விழியை எறிந்தாளே-அவள்
குத்தி மார்பைப் பிளந்தாளே!

"கொஞ்சும் என்று நினைத்த நிலா
குத்தியதே கூர் விழியால்
அஞ்சும் என்று நினைத்த நிலா
கத்திமுனையாக முறைக்கிறதே!"

பயந்துதான் போனான் காளை
பின்னிழுக்கத்தான் நினைத்தான்
முன்வைத்த காலை!

மின்னிய புன்னகை
பேரொலி சிந்திட
கிண்கிணி ஒலியென
தேன்கனி இதழில் நகையொலி!

"யாரது சிரித்தது?
சிலையென்று நினைத்தது
பிழையென்று ஆனது.
வராது வந்த மாமணி நீயோ
தராது போகாதே கேட்கும் வரத்தை!"

துணிந்து பேசிவிட்டான்-குரல்
கனிந்து பேசிவிட்டான்.

"வாள் ஒரு கையில்- நீர்
வைத்த கண் என்னில்!
யார் நீர் சொல்லும்-ஏன்
வழியினில் மறித்தீர்?"

சினமா? சிணுங்கலா?
கோபமா? கொஞ்சலா?
வெட்கமா? வேகமா?
நடிப்பா? வெடிப்பா?
காளை புரியாமல் தவித்தான்.

"வீரன்தான் பெண்ணே-நான்
வீணன் அல்ல.
தீரன்தான் பெண்ணே-நான்
தீயன் அல்ல!
காதல்தான் கொண்டேன்-நான்
கயவன் அல்ல!"

"கண்டதும் காதலா-இதுதான்
கண்டதும் காதலா!"

'கண்டனமாய் கேட்கிறாளா?
கண்டறியக் கேட்கிறாளா?'
விடை தெரியாமல் தவித்த காளை
படைநடத்தும் வீரன் அல்லவா?-அதனால்
உரைத்தான் பதிலை;

"கண்டதும் காதலல்ல-உன்னை
உண்டதால் காதல்!" என்றான்.

"அண்ணல்தான் நோக்கினீர்-உம்மை
இவளும் நோக்கினாளோ?"
அம்பென வினா தொடுத்தாள்.

"ஒரு தலைக் காதல் பெண்ணே-உன்
தலை அசைந்துவிட்டால் போதும்
காதல் கடல் அலைபோல் ஆடும்!"

"கேட்டதும் கிடைப்பதற்கு
கடைச் சரக்கல்ல காதல்.
கண்டதும் உண்பதற்கு
கனிக் குலையல்ல பெண்கள்!
நோக்கமும் கோணலாச்சு-உம்
ஏக்கமும் கோணலாச்சு!"

நகைத்ததும் சினந்த காளை
உயர்த்தினான் வாள் கரத்தை.
"நான் யாரென்று நினைத்துவிட்டாய்
'ஏன்' என்று யாரும் கேளார்
நான் 'வா'வென்று உனை இழுத்தால்."

மைவிழியில் சினம் மூள-அவன்
கைவாளை புழுவாய் பார்த்தாள்.

"நீ யாரென்றால் எனக்கென்ன?
தீ பெண்கள், தீதான் பெண்கள்
எனைத் தொட்டால்
நீ அறிந்து கொள்வாய்!
மனம் கனிந்த காதலிலே கூடலுற்றால்
தீங்கனிதான் பெண்கள்
பணிய வைத்து மிதித்தாள நினைத்தால்
தீதானடா பெண்கள்
நீயெரிவாய்! நின் பலம் எரியும்"

"வளையோசை குலுங்கும்-உன்
வண்ணக் கரங்களில்
வாள் சுழல்வதுகூட அழகுதான்
எடு வாளை! தொடு போரை!"

அலட்சியமாய் கால் அகட்டி நின்று
எக்காளமிட்டான் காளை!

"பொறுமைக்கு பேர்போனோர் பெண்கள்
பொங்கியெழுந்தால் பூமி தாங்காது
சிறு புழுவே போ அப்பால்!"

கண்ணிமைக்கும் நேரத்தில்-அவன்
கைவாள் கிடந்தது தரையில்!
மணிக்கட்டில் கொடுத்த நரம்படி
மரக்கட்டையாய் சாய்த்தது மண்ணில்!
கோணிக் கிடந்தவன் கடைவாயில்
நுரை தள்ளியது!
நங்கை நகைத்தாள்!

"பூப்பறிக்க நீங்கள் வந்த பிறகு
நாங்கள் பூப்பறிப்பதை நிறுத்திவிட்டு
போர் தொடுக்க கற்றுக் கொண்டோம்!
கையைப் பற்றினால் கதறுதல் விடுத்து
பற்றிய கையை முறிக்கவும் கற்றோம்!
உங்கள் வாளொசைகளுக்குள்
எங்கள் குரல் ஓசைகள் அடங்கிப்போக
நாங்களும் வாளோசை எழுப்ப
கற்றோம் அதிலே கரை கண்டோம்!"

கெஞ்சினான் காளை-கேட்டான்
உயிர்ப் பிச்சை!

மறுபடி ஒரு நரம்புத் தட்டல்
கோணிய கை நேராய் ஆனது!

"நன்றி பெண்ணே!-நீ
என் கண்களைத் திறந்தாய்!"

"பலத்தாலே வெல்ல
பெண் என்ன பொருளா? பூச்சியா?
மனத்தாலே வெல்லப் பார்
குணத்தாலே கவரப் பார்

ஓர் உடம்போடு வாழ்ந்தால்
செத்த பின் விறகாய் போவாய்!
ஈருடம்போடு வாழ்ந்து பார்
செத்த பின்பும் பெறுவாய் சிறப்பு"

அவள் சொன்னது புரியவில்லை
ஓர் உடம்பு- ஈருடம்பு-
மனிதனுக்கு எப்படி இரண்டு உடம்பு?

சந்தேகத்தை தீர்த்தாள்
சுந்தர மொழியாள்.

"ஓர் உடம்பு-அது
சதையும்-இரத்தமும் கலந்த
பொய்யுடம்பு.
இன்பத்தில் மூழ்கி, இன்பத்தில் ஆடி
அடங்கிப்போய் மடியும் உடம்பு.

இன்னொரு உடம்பு
புகழுடம்பு!
வாழும் காலத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்து
சேர்க்கும் புகழும், சீரும் சிறப்பும்
செத்தபின்பும் புகழுடம்பாய் வாழும்!"

"ஆகா! அற்புதம்!" என்றான்.

"என்னைப் புகழாதே-தமிழ்
தந்த இலக்கியமாம்
விவேக சிந்தாமணியை புகழ்."

இதோ விவேக சிந்தாமணியில்
அவள் சொன்ன பாடல் பாரீர்

"ஒருவனே இரண்டு யாக்கை ஊன்
பொதியான நாற்றம்
உருவமும் புகழுமாம் அதற்குள் நீ இன்பமுற்று
மருவிய யாக்கை இங்கே மாய்த்திடு யாக்கை
திறமதா உலகம் ஏத்தச் சிறந்து பின்
-நிற்குமன்றோ"

(யாக்கை-உடல்; ஊன்-சதை; மருவிய-அடைந்த;
மாய்தல்-இறத்தல்)

(ஸ்போர்ட்ஸ்)

## பறக்கும் பந்து பறக்கும்

நியூஸிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் கிறிஸ் கய்ன்ஸ் ஒருநாள் போட்டியில் 14 சிக்ஸர் அடித்து உலக சாதனை புரிந்துள்ளார்.



கென்யாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள நியூஸிலாந்து அணி, இம்மாதம் 7ம் திகதி, கென்யாவுக்கு எதிராக விளையாடிய ஒருநாள் போட்டியொன்றில் 118 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து, 363 ஓட்டங்களைப் பெற்றது. கிறிஸ் கய்ன்ஸ் அபாரமாக விளையாடி 89 பந்துகளில் 157 ஓட்டங்களைக் குவித்தார். இதில் 14 சிக்ஸர்கள் அடித்து உலக சாதனை புரிந்துள்ளார். முதலில் நிதானமாக துடுப்பெடுத்தாட ஆரம்பித்த கய்ன்ஸ் 52 ஓட்டங்களை 60 பந்துகளில் எடுத்தார். பின்னர் 105 ஓட்டங்களை எடுக்க கய்ன்ஸ் எதிர்கொண்டது 29 பந்துகளை மட்டுமே.

## குவிக்கப்பட்ட ஓட்டங்கள்

டெஸ்ட் போட்டி ஒன்றில் அதிக ஓட்ட எண்ணிக்கை 6 விக்கெட் இழப்பிற்கு 952 என்பதும், இந்திய அணிக்கெதிராக இலங்கை இந்தச் சாதனையைப் புரிந்துள்ளது என்பதும் தெரிந்ததே.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியும் (952/6) இங்கிலாந்து அணியும் (903/7) மட்டுமே 900 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளன.

முதல் தரப்போட்டிகளில் 900 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துள்ள அணிகளின் விபரங்கள் பின்வருமாறு:

| ஓட்டங்கள் | அணிகள் | இடம் | ஆண்டு |
|---|---|---|---|
| 1107 | விக்டோரியா எதிர் நியூசவுத் வேல்ஸ் | மெல்பேர்ண் | 1926-27 |
| 1059 | விக்டோரியா எதிர் தஸ்மானியா | மெல்பேர்ண் | 1922-23 |
| 951-7 | சிந்து எதிர் பலுச்சிஸ்தான் | கராச்சி | 1973-74 |
| 944-6 | ஹைதராபாத் எதிர் ஆந்திரா | செகந்திராபாத் | 1993-94 |
| 918 | நியூ சவுத்வேல்ஸ் எதிர் தென் ஆபிரிக்கா | சிட்னி | 1900-01 |
| 912-8 | ஹோல்கர் எதிர் மைசூர் | இந்தூர் | 1945-46 |
| 912-6 | தமிழ்நாடு எதிர் கோவா | பஞ்சிம் | 1988-89 |
| 910-6 | ரெயில்வேஸ் எதிர் டேரா இஸ்மாயில் கான் | லாகூர் | 1964-65 |

## இந்தியா முன்னணியில்

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்த சாதனைக்குரியவர்கள் இலங்கை அணியினர். கென்யாவுக்கெதிராக 4 விக்கெட் இழப்பிற்கு 397 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றுள்ளது.

ஒருநாள் போட்டிகளில் அதிக சராசரி ஓட்டங்களை இந்திய அணி எடுத்துள்ளது. அண்மையில் இலங்கையில் நடந்த ஆசிய கோப்பைக்காக நடைபெற்ற போட்டி ஒன்றில் பங்களாதேஷ் அணிக்கெதிராக இந்தச் சாதனையைப் புரிந்துள்ளது இந்திய அணி. இந்தச் சாதனைச் சராசரி 8.80 ஆகும்.

இதற்கடுத்ததாக இருக்கும் சராசரி ஓட்டங்கள் 7.60 மற்றும் 7.48 என்பனவாகும். இந்தச் சராசரி ஓட்டங்களை முறையே இங்கிலாந்திற்கெதிராகவும், இலங்கைக்கெதிராகவும் இந்திய அணியினரே புரிந்துள்ளனர்.

## சிந்தியா பதில்கள்

★ போலியோ தடுப்பு போர் நிறுத்தம் பற்றி என்ன நினைக்கிறீர்?

வி. தேவராஜா, கொழும்பு-06.

'முதலில் தலைப்புச் செய்திகள். ஜயசிக்குறுய் தொடர்கிறது. ஜயசிக்குறுய் படையினர் தமது நிலைகளை பலப்படுத்தி வருகின்றனர்....' என்ற வழக்கமான பல்லவியை இரண்டுநாள் கேட்கமுடியவில்லையே என்று வருத்தமாக நினைத்தேன். மற்றப்படி இரு தரப்பிலும் போர் நிறுத்த மீறல்கள் நடந்தே உள்ளன.

★ டியர் சிந்தியா! சமீபத்தில் உங்களைப் பாதித்த சோகச் செய்தி எது?

செல்வி. சி. வினோதினி, மட்டக்களப்பு.

சுலபமான கேள்வி. ஆனால் பதில் நீங்கள் எதிர்பார்த்தது அல்ல. அன்னை தெரேசாவின் மரணச் செய்திதான். மாபெரும் சோகம். இந்த நூற்றாண்டின் மனிதப் புதையலை இழந்துவிட்டோம்!

★ அரசியல் தீர்வு அக்டோபர் மாதத்தில் வரப்போகிறதாமே?

ஜி. எட்வேர்ட், வவுனியா.

எந்த அக்டோபரில்?!

★ சிந்தியா! ஞானப் பழம் என்றால் என்ன?

ஜெ. முத்துலிங்கம், பண்டாரவளை.

சமீபத்தில் 'சாவி' இதழில் படித்ததை தருகிறேன். இவற்றில் ஞானப்பழத்தை கண்டுபிடியுங்கள்:

அன்பு பழுத்தால் பக்தி
அறிவு பழுத்தால் ஞானம்
காய் பழுத்தால் பழம்
மனிதன் பழுத்தால் கிழம்
உடல் பழுத்தால் ரோகம்
உளம் பழுத்தால் யோகம்
தவம் பழுத்தால் வரம்
நட்பு பழுத்தால் உறவு
காதல் பழுத்தால் இன்பம்
பண்பு பழுத்தால் துறவு
உயிர் பழுத்தால் மரணம்.

★ கனடாவில் நடைபெறவுள்ள சகாரா கிண்ணப்போட்டியில் வாசிம் அக்ரம் இடம்பெறுவாரா?

ஜி. அமீன், புத்தளம்.

இல்லை. இம்முறையும் கப்டன் ரமேஷ் ராஜாதான்.

★ சிந்தியா! இந்திய அணியின் பந்துவீச்சாளர் ஸ்ரீநாத்தின் இடத்தை நிரப்பப்போவது யார்?

ஆர். வெங்கடேசன், மஸ்கெலியா.

யாரும் நிரப்ப வேண்டாம். அதுதான் அவரே வரப்போகிறாரே! துரித சிகிச்சை, மன உறுதி போன்றவை காரணமாக பூரண தயார் நிலையை எட்டிவிட்டார் ஸ்ரீநாத். விரைவில் களத்தில் அந்த ஆவேச முகத்தைக் காணலாம் வெங்கடேசன்.

★ ஒரு கடி ஜோக் எடுத்து வீசுக?

பி. ஜெயஸ்ரீ, கொழும்பு-11

"மணிரத்னம் படங்களில் டெண்டுல்கருக்கு பிடித்த படம் எது?"

"அஞ்சலி!"

"ஏன்?"

"ஏன்னா, டெண்டுல்கரின் துணைவியார் பெயரும் அதுதான்."

★ அன்னை தெரேசா, டயானா ஒப்பிடுங்கள் பார்க்கலாம்?

எம். குகதாஸ், கொழும்பு-06.

முன்னவர் ஏதுமற்றோரின் பக்கத்தில் எப்போதும் இருந்தவர். பின்னவர் மாட மாளிகையிலிருந்து எப்போதாவது ஒருமுறை ஏதுமற்றோரை எட்டிப்பார்த்துவிட்டு மறுபடி மாட மாளிகைக்கு திரும்பிவிடுகிறவர். முன்னவர் சேவையால் புகழ் பெற்றவர். பின்னவர் செய்தி உலகால் பிரபலம் பெற்றவர். முன்னவர் ஏழைகளுக்காக தன் ஆடம்பரத்தையே துறந்தவர். பின்னவர் ஏழைகளுக்காக தன் ஆடம்பர உடைகளில் சிலவற்றை மட்டும் ஏலம்போட இசைந்தவர். எப்படித்தான் ஒப்பிட்டாலும் தெரேசா சிகரத்தில் உள்ள தாய். டயானா கீழே நின்று அவரை அண்ணாந்து பார்க்கும் குழந்தை. குறும்புக்கார- தப்புக்களில் ஆர்வமுள்ள குழந்தை!

★ இன்றைய நடிகர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்?

ஜே. சேவியர், மட்டக்களப்பு.

சிவாஜி! இப்போதும் நடித்துக்கொண்டுதான் இருக்கிறார்.

★ யாருடைய ஆலோசனையைக் கேட்டு நடந்தால் உருப்படலாம்?

எஸ். நந்தினி, கனடா.

ரொம்பத்தான் நொந்து போனீர்களாக்கும். இந்தக் கதையைக் கேளுங்கள்:

ஓர் ஓவியர் மனிதனின் உருவத்தை வரைந்து அதைக்காட்சிக்கு வைத்திருந்தார். அதைப்பார்த்த ஒருத்தன்:

"இந்த ஓவியத்தின் கால் பகுதி சரியில்லை." என்று கூறினான்.

"ஏன்?" என்று கேட்டார் ஓவியர்.

"ஒரு மனுசன் செருப்புப் போட்டு நடக்கும்போது அவனது குதிக்கால் இப்படி உயரமாக இருக்காது," என்று ஓவியர் செய்த தவறைச் சுட்டிக்காட்டினான்.

"இதைச் சொல்கிறாயே நீ யார்?"

"நான் செருப்பு தைக்கும் தொழிலாளி."

உடனே ஓவியர் அவன் சொற்படியே ஓவியத்தைத் திருத்தி வரைந்து தவறை சரி செய்தார்.

அவன் மறுபடியும் ஓவியத்தை உற்றுப் பார்த்துவிட்டு "அந்தத் தலைமுடியைக்கூட சற்று ஒதுக்கலாமே" என்றான்.

உடனே ஓவியர் சொன்னார்: "அதைச் சொல்ல வேண்டியது ஒரு சவரத் தொழிலாளி. நீ பார்த்துவிட்டு விலகு."

பிரச்சனைக்கு ஏற்ப அதில் தொடர்புடையவர்களின் ஆலோசனைகளைக் கேளுங்கள். உருப்படலாம்.

★ இந்தக்கால மாணவர்களுக்கு ஏற்ப ஆசிரியர்களும் கில்லாடிகளாக இருந்தால்தானே கட்டியாள முடியும். மாணவர்களிடம் மாட்டிக்கொண்டு அசடு வழியும் ஆசிரியர்களும் இருக்கிறார்களே என்ன சொல்கிறீர்கள்?

ஆர். விமல், திருமலை.

நிறைகுடம் தழும்பாது. பல ஆசிரியர்களும் அப்படித்தான். அவர்கள் விட்டுப் பிடிப்பதை, தங்கள் கெட்டித்தனமாக நினைக்கும் மாணவர்கள்தான் ஏமாறுகிறார்கள்.

ஒரு குட்டிக் கதை:

ஆசிரியர் ஒருவர் வெப்பம், குளிர் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

சூடு அதிகமாகும்போது பொருள் நீள்கிறது. குளிர் அதிகமாகும் போது சுருண்டு போகிறது என்று விளக்கிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு மாணவன் எழுந்து "அதற்கு ஒரு உதாரணம் சொல்லுங்க?" என்று கேட்க, வகுப்பு முழுவதும் ஒரே சிரிப்பலை.

ஆசிரியர் கோபப்படாமல்: "கோடைக் காலத்தில் பகல் நீண்டிருக்கிறது. அதே பகல் பொழுது குளிர்காலத்தில் சுருண்டிருக்கிறது." என்று விளக்கினார். வகுப்பில் அமைதி நிலவியது.

★ சிந்தியா! ஜெயசூரியாவுக்கு தலைக்கனமே வராது என்கிறீரா?

ஏ. யசிந்தா, கொள்ளுப்பிட்டி.

சான்ஸ்லே இல்லைங்க. தொப்பி போடாத ஜெயசூரியாவை நீங்க பார்த்ததே இல்லையாங்க?!

★ டியர் சிந்தியா! டயானா இன்னும் 50 வருடம் உயிரோடிருந்திருந்தால்....?

என். லாபீர், கல்முனை.

இறுதிச்சடங்கு நடந்த செய்தி உலகச் செய்திகளின் ஓர் ஓரத்தில் மட்டும் இடம் பெற்றிருக்கும்.




★ டயானாவுக்கு அரச மரியாதை செலுத்த மகாராணி குடும்பம் தயங்கியது உண்மையா?

பி. ராமச்சந்திரன், கஹபோவில.

உண்மை. குவிந்த மலர்வளையங்கள் கற்களாக மாறிவிடலாம் என்று தெரிந்து மரியாதை செலுத்த முன்வந்ததும் உண்மை.

# இராமாயணம் அங்கம் 99

## கும்பகர்ணன் துயிலெழுதல்

இராமபிரான், இராவணனுடைய ஆயுதங்களை உடைத்தும் தேர்களைச் செயலிழக்கச் செய்தும் அவனுடைய நால்வகைச் சேனைகளை அழித்தும், அவனை நிராயுதபாணியாக்கிய மையினால் வானர சேனையில் பெருமகிழ்ச்சி அலைபோல் பொங்கி எழுந்தது, "இதோ அடுத்த ஒரு பாணத்தால் இராவணனுடைய பத்துத் தலைகளும் அறுபட்டு அவன் பூமியில் சரியப்போகிறான்,' என்று எண்ணிக் குதூகலமடைந்திருந்தனர், ஆனால் இராமபிரான், செயலற்று புவிமீது கண்புதைத்து வெட்கி நின்ற இராவணனை, "இன்று போய் நாளை வாராய்!" என்று கூறித் திருப்பி அனுப்பியமை அவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையே தந்தது.

'இராவணனின் கொடுமைகள் இன்றே அழிந்துவிடும்' என்றும் 'சமாதானம் ஏற்பட்டுவிடும்' என்றும் கருதியிருந்த வானரவீரர்கள் பலருக்குச் சலிப்பேற்பட்டது உண்மையே! இராவணன் போர்க்களத்திலிருந்து மீண்டதும் வானர வீரர்கள் தமக்குள் வாதப் பிரதிவாதங்களை நடத்தலாயினர். இராமபிரான் செய்தது சரியே என்று ஒரு குழுவினரும், அவ்வாறு அவனைத் தப்பிச் செல்லவிட்டது தகாது என்று மற்றொரு குழுவினருமாகச் சேர்ந்து அன்றிரவு முழுவதும் விவாதித்தனர்.

### ஆஞ்சநேயரின் அறிவுரை

இருதரப்பினருக்குமிடையே மத்தியஸ்தம் செய்து வைக்கும் பொறுப்பினை ஆஞ்சநேயர் ஏற்றார். அரசியல் தெளிவும் தர்மசிந்தனையும் சத்தியமும் நீதியுமே இராமபிரானுடைய ஆயுதங்கள் என்றும் எடுத்துரைத்தார். போர்க்களத்தில் நிராயுதபாணியாகிவிட்ட ஒருவனைத் தாக்குவது தர்மமாகாது என்று கூறினார்.

**இராஜகுமாரன்**

பல நீதி நெறி முறைகளை வானர வீரர்களுக்கு எடுத்துக்கூறி தர்மமே வெல்லும் என்று உறுதி அளித்து விவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

வானரப் படைகள் மட்டுமல்லாமல் வானில் நின்ற வண்ணம் இலங்கைப் போர்க்களத்தைப் பார்த்துக் கொண்டிருந்த தேவர்களும் திகைப்படைந்து காணப்பட்டனர். 'இராவணனின் கொட்டம் அடங்கிவிட்டது. அவன் இன்றோடு அழிந்தொழிந்தான்' என்று உணர்ச்சி பொங்கக் காணப்பட்டனர், நிராயுதபாணியான இராவணனை "இன்று போய் நாளை வாராய்!" என்று இராமபிரான் கூறி அனுப்பியது தேவர்களுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அரக்கர்க்கரசனை கொன்று போட இருந்த ஓர் அருமையான சந்தர்ப்பம் நழுவிவிட்டதே என்ற வேதனை அவர்களை வாட்டியது.

●★●

இராவணனுடைய உள்ளம் கொந்தளிக்கும் கடலைப்போலவும் கொடிய சூறாவளியைப் போலவும் செந்தீ கக்கும் எரிமலையைப் போலவும் குமுறிக் கொண்டிருந்தது. தனது தனி மாளிகைக்குள் சென்று ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். மன அமைதி கிட்டவில்லை. அருகிருந்த மஞ்சத்தில் படுத்திருந்தான். பஞ்சணை முள்ளாய்க் குத்தியது. எழுந்து முன்னும் பின்னும் உலாவினான். இப்படி பல நாளிகைகள் கழிந்தன. மீண்டும் ஆசனத்தில் அமர்ந்து கையொலி எழுப்பி சேவகனை அழைத்தான். எட்டுத்திக்கும் விரைந்து செல்லத்தக்க தூதுவர்களை அழைத்துவருமாறு பணித்தான்.

சேவகன் காற்றைவிட் வேகமாகச் சென்று எட்டுத் தூதுவர்களை கையோடு அழைத்து வந்தான். அவர்களும் தங்கள் தலைவன் முன் வந்து தாள் தொட்டு வணங்கி ஆணைக்காகக் காத்திருந்தனர்.

வந்த தூதர்களில் மனகதி, வாயுவேகன், மருத்தன் மற்றும் மாமேகன் ஆகிய மிகத் திறமைசாலிகளானோரும் வேறுபலரும் இருந்தனர். இவர்களைப் பார்த்த இராவணன்,

**ஏழ் பெருங் கடலும் சூழ்ந்த**
**ஏழ் பெரும் தீவும் எண் இல்**
**பாழி அம் பொருப்பும் கீழ்பால்**
**அடுத்த பாதாளத் துள்ளும்**
**ஆழி அம்கிரியின் மேலும்**
**அரக்கர் ஆனவரை எல்லாம்**
**தாழ்வு இலிர் கொணர்திர் என்றான்**
**அவர் அது தலைமேல் கொண்டார்.**

(யுத்த காண்டம்-1220)

**பொருள்:**

*"ஏழு பெருங் கடல்களால் சூழப் பெற்ற ஏழு பெரும் தீவுகளிலும், எண்ணுதற்கரிய மாபெரும் மலைகளின் மீதும் கீழே இருக்கின்ற பாதாள உலகங்களிலும் சக்கரவாள*



*மலையின் மேலும் இருக்கின்ற அரக்க வீரர்கள் அனைவரையும் உடனடியாக இங்கே அழைத்து வருவீர்களாக" என்று இராவணன் அவர்களுக்குக் கட்டளையிட்டான். அக்கட்டளையை தூதர்கள் தலைமேல் ஏற்றுக் கொண்டனர்.*

### மாலியவான் வருகை

தூதர்கள் சென்றதும் மாளிகையிலுள்ள மஞ்சத்தில் இராவணன் தனது உடலைக் கிடத்தினான், அவனுடைய பெரிய பாட்டனாரான மாலியவான் அங்கு வந்து சேர்ந்தார். வயோதிபப் பருவத்தினரான அவர் இராவ்வணனிடம் வரும் போதெல்லாம் நல்லறங்களையே போதிப்பார். நாம் செய்யும் காரியங்களில் நல்லது கெட்டது எவை என்பவற்றையெல்லாம் எடுத்துக்கூறுவது அவருடைய வழக்கம், எப்போதும் சீதாப் பிராட்டியார் மீது தன் உள்ளத்தைப் பதித்து விட்டுத் தடுமாறிய இராவணனிடம், பிராட்டியாரை மீண்டும் இராமபிரானிடம் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டால் எந்தவிதத் தொல்லையும் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம் என்று தான் மாலியவான் இராவணனிடம் கூறுவார். இது இராவணனின் காதுகளில் விஷம் பாய்ச்சும். இதனால் மாலியவான் வருகையை இராவணன் வெறுத்தான், பல தடவைகளில் அவர் மீது சீறிப்பாய்ந்து சினத்ததுமுண்டு. இருப்பினும் தன் முன்னோர்களில் இன்றும் உயிருடன் இருக்கும் ஒருவர் என்பதனால் தன்னை அடக்கிக் கொள்வான் இராவணன். இப்பொழுதும் மாலியவானின் வருகை இராவணனுக்கு வெறுப்பையே தந்தது. கண்களை இறுக மூடிய வண்ணம் படுத் திருந்தான்.

இராவணனை குழந்தையாக இருக்கும் போதே தூக்கி வளர்த்தவரான அப்பெரியாருக்கு இராவணனின் சுபாவம் நன்கு தெரியும். அவனுடைய மஞ்சத்தின் அருகிலிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். குறிப்பறிந்து இரார்வண்ணுடைய ஆற்றலையெல்லாம் விரிவாக வர்ணித்துவிட்டு, போர்க்களத்தில் என்ன நடந்தது என்று இராவணனிடமே மாலியவான் கேட்டார். இராவணன் அன்று போர்க்களத்தில் நடைபெற்ற சம்பவங்களை ஒன்றுவிடாமல் கூறலானான். சுக்கிரீவன், ஆஞ்சநேயர், இலக்குமணன் மற்றும் இராமபிரான் ஆகியோருடன் தான் பொருத நேர்ந்ததைக் கூறினான். ஒவ்வொருவரிடமும் போர்க்களத்தில் தான்பட்டு அனுபவித்த துன்பங்களை விபரித்தான். அவரவர்களிடம் தனிப்பட்ட வகையில் காணக்கிடைத்த வீரச் செயல்களையும் ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்தான்.

இத்தனையையும் ஆறுதலாகக் கேட்டுக் கொண்டிருந்த மாலியவான், "இராமபிரானுடைய வலிமையை முன்னரே நான் உன்னிடத்தில் பல தடவைகள் எடுத்துரைத்தேன், தேவாம்சம் பொருந்திய அவ்வீரனுடன் நீ விளையாட நினைத்துவிட்டாய். அவன் மனையாளைக் கவர்ந்து வந்து சிறை வைக்கத் துணிந்துவிட்டாய். தர்மம் அவர்கள் பாலுள்ளது. ஆகவே அவர்கள் பால்தான் வெற்றித் தேவதை சார்ந்து நிற்பாள். ஆகவே, முரட்டுத்தனமான உன் பிடிவாதத்தை விடுத்து உடனடியாக சீதாப்பிராட்டியாரை இராமபிரானிடம் அனுப்பி வைத்து சமாதானம் தேட முயல்வாயாக!" என்று கூறினார்.

இராவணன் கோபத்தால் துடித்தான். அவன் வாய்திறப்பதற்கு முன்னர்- மாலியவான் தன் கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கும் போதே- அம்மண்டபத்தினுள் நுழைந்த மாயாஜால வித்தைகள் தெரிந்த அரக்கர் படைத் தளபதிகளில் ஒருவனான மகோதரன், மாலியவான் மீது சீறிப் பாய்ந்தான். "எப்படியோ போர் தொடங்கிவிட்டது. எண்ணற்ற அரக்கர் படை வீரர்களைப் பலி கொடுத்துவிட்டோம். எக் காரணம் கொண்டும் பின் வாங்குவது நடவாத காரியம்! போரில் வெற்றியும் தோல்வியும் சகஜம். ஆகவே இந்த வயதான பெரியவரின் வார்த்தைகளை விடுத்து, நாளை போர்க்களத்துக்கு மன்னரின் தம்பியான மாவீரர் கும்பகர்ணனைப் பெரும் படையுடன் அனுப்பி வைப்போம். கும்பகர்ணன் மூச்சுவிட்டாலே ஒரே தடவையில் பல்லாயிரம் வானரங்கள் வானில் வீசப்படுவர். ஆகவே கும்பகர்ணனை துயிலெழுப்புவதற்கு உடனடியாக ஆணை பிறப்பிக்குமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று ஆவேசம் கொண்டவனைப் போல் பேசி முடித்தான்.

### "கும்பகர்ணனை எழுப்புங்கள்!"

அடுத்த நாள் போர்க்களத்துக்கு கும்பகர்ணனை அனுப்புவது என்ற யோசனை இராவணனுக்கு ஏற்புடையதாகவே இருந்தது. தூதர்களை அனுப்பி கும்பகர்ணனை துயிலெழுப்பி வருமாறு இராவணன் கட்டளையிட்டான்.

நூறு வீரர்கள் சேர்ந்து, நிறை தூக்கத்தில் கிடந்த மாமிசமலையான கும்பகர்ணனை எழுப்புதற்கு பெரு முயற்சி எடுத்தனர். அவன் விடும் மூச்சினால் இழுபட்டும் தூரத்தள்ளப்பட்டும் அவர்கள் விழுந்து உடலெங்கும் காயங்களைப் பெற்றதுதான் மிச்சம்.

சங்கு, சேகண்டி, பறை, குழல், தாரை, தப்பட்டை ஆகிய வாத்தியங்களை கும்பகர்ணனின் காதுகளின் ஓரத்தில் வைத்து பேரோலி எழுப்பினர். எதுவித பலனும் கிடைக்கவில்லை. ஈற்றில் யானைகள், குதிரைகள் போன்றவற்றைக் கொண்டு வந்து அவனை அங்குமிங்கும் உருட்டியும் பயனற்றுப் போய் விட்டது. அன்றிரவு முழுவதும் இம் முயற்சிகள் நடைபெற்றது. இறுதியில் பலவகை புலால் உணவுகளைச் சமைத்து அவற்றின் மணம் அவன் மூச்சினுள் நுழையச் செய்த போதுதான் கும்பகர்ணன் கண் விழித்தான்.

(தொடர்ந்து வரும்)

---

**இராமாயணப் போட்டி: 97**

**சரியானவிடை:-** பிரம்ம தேவனால் கொடுக்கப்பட்டது.

1. **எஸ்.சுபாஸ்கர்,** 24,முருகன் இடம், கொழும்பு-6.
2. **எம்.ஜே.பிரியந்தி,** பனில்கந்த, உல்லிந்துவாவ, தெனியாய.
3. **குணரெட்ணம் லக்ஷாயினி,** தபாலக வீதி, கொக்கட்டிச்சோலை.
4. **சுலோசனா தர்மரட்ணம்,** சவுதம், தமிழ், ம்கா வித்தியாலயம், தெமோதரை.
5. **ஃபஸ்மினா நிலாம்,** முக்தர் மன்சில், ஜனகபுர, டிக்வெல்ல.

**போட்டி இல. 99** கேள்வி:- **இராவணனுக்கும் கும்பகர்ணனுக்கும் என்ன உறவு?**

செப்டம்பர் 20 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.99, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

# ஜெயிலுக்குள் பிரேம்ஸ்

**காதிலலை பூ கந்தசாமி**

**இரண்டு ஆயுள் தண்டனைகள் பெற்று சிறைக்குள் கம்பி எண்ணும் பிரேமானந்தாவை செந்தில் சந்திக்கிறார். நாமும் காதைக் கொடுப்போமா?**

**செந்தில்:** இந்தாப்பா, இங்கே பிரேமானந்தா எங்கேப்பா இருக்கிறாரு?

**பிரேமானந்தா:** அடடே.. வா ராஜா. அசப்பில் என்னை மாதிரியே இருக்கியே? எங்கே இவ்வளவு தூரம்? என்ன விஷயமா பார்க்கவந்தே?

**செ:** அதை சாமிகிட்டேதான் சொல்லணும். நீ யாருப்பா, சாமிக்கு தெரிந்தவரா? அல்லது சாமியின் பக்தகோடியா?

**பிரே:** என்னை நன்றாகப் பார் ராஜா.

**செ:** தலையிலே மொட்டை. முகத்திலே குட்டை. மேனியிலே வெள்ளைச் சட்டை. பார்த்தா பக்காத் திருடன் மாதிரியே இருக்கே. என்ன எங்கேயாவது பிக்பொக்கட் அடிச்சிட்டு உள்ளே வந்துட்டியா?

**பிரே:** இல்லே ராஜா. நான்..

**செ:** புரிஞ்சுபோச்சப்பா. கள்ளச் சாராயம் காய்ச்சி மாட்டிக்கிட்டே, அப்படித்தானே, பரவாயில்லப்பா நம்ம பொலிஸ்காரங்களும் அப்பப்ப உருப்படியான காரியங்களும் பண்ணுறாங்களா? சபாஷ்.

**பிரே:** பொலிஸ்காரர்களை ரொம்பவும் புகழாதே ராஜா.

**செ:** எப்போதாவது ஒருக்காதான் இப்படி தப்பித் தவறி உன்னைமாதிரி உண்மையான திருடங்களை பிடிக்கிறாங்க. அதையும் பாராட்டாமப்போனா நியாயமா சொல்லு?

**பிரே:** என்னைத் திருடன் என்னே முடிவு பண்ணிட்டியா ராஜா?

**செ:** அதான் முகத்திலேயே எழுதி ஒட்டியிருக்கே, பக்காத் திருடன். பலே திருடன். உன்னைமாதிரி திருட்டு பசங்கள ஜெயில்ல போட்டு தண்டமா சாப்பாடும் போட்டுக் கொண்டிருந்தா நம்ம நாட்டு பொருளாதாரத்துக்குத்தான் டேஞ்சர். நடுரோட்டிலே வச்சு கையைக் காலை நறுக்கிப்போட்டாத்தான் சரிப்பட்டுவருமப்பா.

**பிரே:** பொறு ராஜா. என் விழிகளைப் பார் ராஜா. ஒளி தெரிகிறதா பார் ராஜா.

**செ:** விழியா இது, திருட்டு முழி! ஒதுங்கப்பா, நான் பிரேமானந்தா சாமியை பார்க்கணும். எங்கே இருக்காரு, அதைச் சொல்லு முதல்ல?

**பிரே:** ராஜா! நான்தான் ராஜா பிரேமானந்தா.

**செ:** என்ன... நீ.. நீயா... சே.. நீங்களா? (உற்றுப்பார்க்கிறார்) அட.. ஆமா... ஐயோ சாமி.. இதென்ன கோலம்? நான் காண்பதென்ன கனவா? நனவா? என் முன்னால் நிற்பதென்ன சாமியா? ஆசாமியா? பொம்பீ நிற்கும் முடியெங்கே? பூண்டு நிற்கும் காவியெங்கே? வீசியிழுக்கும் வாசனை எங்கே? பிரேம்ஸ் மார்க் புன்னகை எங்கே, இந்தக் கோலத்திலா என் கண்கள் உங்களைக் காணவேண்டும்? இப்படித் தெரிந்திருந்தால் ஒரு கூலிங்கிளாஸ் போட்டு வந்திப்பேனே, ஓ.. மை.. கோட்,ஓ..மை.. காட்.

**பிரே:** உணர்ச்சிவசப்படாதே ராஜா. சாந்தி, சாந்தி..

**செ:** யாருங்க சாந்தி, ஜெயிலையும் ஆசிரமம் ஆக்கிட்டிங்களா? சில்லாடிங்க நீங்க. (செல்லமாய் வயிற்றில் குத்துகிறார்)

**பிரே:** நான் அமைதியைச் சொன்னேன் ராஜா.

**செ:** ஏங்க, அமைதியைச் சொல்லக்கூட ஒரு பொண்ணுபேருதான் பிடிச்சு வைச்சிருக்கீங்க. நீங்க என்ன கன்னிராசியா சாமி? உங்களுக்கு கன்னிராசி, திவ்வியாவுக்கு காளை ராசி.

**பிரே:** ஏன் ராஜா என் வயிற்றெரிச்சலை கிளப்புறே? உனக்கு பாரதியார் பாடல் ஒண்ணு சொல்லட்டுமா ராஜா.

**கச்சணிந்த கொங்கை மாந்தர்**
**கணைகள் வீசும் போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை**
**அச்சமென்பதில்லையே**

**செ:** பாரதியாரு பயங்கரமா சைட் அடிச்சிருப்பார் போலிருக்கு. அவங்க முறைச்சிருப்பாங்க போலிருக்கு. நீங்க சொல்லுறது நிஜம்தான் சாமி, அச்சமில்லாமல் போனதால்தானே அந்த ஆட்டம் ஆடியிருக்கீங்க.

**பிரே:** (மொட்டைத்தலையை தடவிக்கொள்கிறார்) அவங்க என் முடியிலே கைவைச்சாங்க, நீ என் மடியிலே கைவைக்கிறியே ராஜா. என்னைப் பார்க்க ஏன் வந்தே ராஜா?

**செ:** அவசரமா ஒரு லிங்கம் தேவைப்பட்டுச்சு சாமி. உங்க நினைப்பு வந்துடுச்சு. பொடி நடையா வந்துட்டேன்.

**பிரே:** ஐயோ ராஜா, லிங்கம் லிங்கமா எடுத்துக் குடுத்துக்கிட்டிருந்தேன் பாரு, உயிர்த்தோழிகளுக்குக்கூட சுடச் சுட எடுத்துக் கொடுத்தேம்பா. அப்போ நீ வரலையே, இப்ப வந்து நிக்கிறியே, நான் எங்கே போவேன், என்ன பண்ணுவேன்..

**செ:** ஏன் சாமி தல்லயில காடு மாதிரி முடி இருந்தாத்தான் கையை உயர்த்த உயர்த்த மோதிரம், வாட்சு, செயின் எண்ணு வந்து கொண்டிருக்குமா சாமி? முடிக்குள்ளே என்ன சுப்பர் மார்க்கெட்டா வைச்சிருந்தீங்க? ஏன் சாமி, உங்க சுப்பர் மார்க்கெட்டில் ஒரு மாருதிக் காரோ, ஹொண்டா மோட்ட பைக்கோ பதுக்கி வைச்சு எடுத்துக் கொடுத்திருந்தா கின்னஸ் புத்தகத்திலேயே போட்டிருப்பாங்கல்ல. சான்ஸ்லை தவறவிட்டுட்டீங்களே சாமி!

**பிரே:** காலைவாரி விட்டுட்டியே ராஜா. ஏன் ராஜா, வீரப்பனுக்குக்கூட மன்னிப்புக் கொடுக்கலாம் என்கிறாங்க, எனக்கு மட்டும் ஜெயில் கொடுத்துட்டாங்களே, இது நியாயமா ராஜா?

**செ:** வீரப்பன் சந்தன மரத்தைத்தான் வெட்டினாரு, நீங்க சுந்தரப் பெண்ணுங்களை கட்டிக் கொண்டீங்க. அவரு தந்தம்தான் கடத்தினாரு, நீங்க சிஷ்யைகள் கூட பந்தம் வச்சுக்கிட்டீங்க. அவரு சண்டை போட்டுக்கிட்டு பிரபலமானாரு, நீங்க காவித் துண்டைப் போட்டுக்கிட்டு பிரபலமானீங்க. அவரு மீசையை மட்டும் தான் வளர்த்தாரு, நீங்க ஆசையைத்தான் வளர்த்துக்கிட்டீங்க. அவரு கண்ணி வெடி தான் வைச்சாரு, நீங்க கன்னிகளோடல்ல சகவாசம் வைச்சுக்கிட்டீங்க. எல்லாமே டிஃபரன்ட்டா இருக்கே சாமி.

**பிரே:** போதும் ராஜா! வெந்த புண்ணில வேலைப் பாய்ச்சாதே!

**செ:** திவ்வியா மாதாஜி எங்கே சாமி? ரொம்ப திவ்வியமா இருப்பாங்களாமே.

**பிரே:** ஏன் ராஜா கேட்குறே?

**செ:** நம்ம தொழில்ல எக்கச்சக்கமான போட்டி சாமி. நமக்கும் சான்ஸ் கம்மியாகிட்டே போகுது.

**பிரே:** ஏன் ராஜா கவுண்டமணி இனி உன்னை உதைக்கமாட்டேன் எண்ணு சொல்லிப்புட்டாரா?

**செ:** அதை ஏன் கேட்குறீங்க சாமி, என்னை உதைச்ச ராசி பாருங்க, இப்போ புதுசா வாற காமெடியன் எல்லாம் அவருகிட்டப் போய் அண்ணே உதையுங்கண்ணே எண்ணு கியூவில நிக்கிறாங்க.

**பிரே:** யார் யாரை உதைக்கணும் எண்ணு ஒரு விவஸ்தையே இல்லாமல் போச்சுதா ராஜா?


**செ:** ஆமாம் சாமி, இப்பெல்லாம் கவுண்டமணி யாரை உதைச்சாலும் ஜனங்க சிரிக்க ஆரம்பிச்சுட்டாங்க. தப்பு என்மேலதான். என்னை மட்டும்தான் உதைக்கணும் எண்ணு அவருகிட்ட பட்டா எழுதி வாங்கிருயிக்கணும்.

**பிரே:** ஆமாம் ராஜா, நானும் எங்கூட கூட்டுவைச்சிருந்த அரசியல்வாதிகளிட்ட எழுதி வாங்கியிருக்கணும். ஆசிரமத்துக்கு வந்தவங்க எங்கூட மட்டும்தான் கூட்டு வைச்சிருந்தாங்க எண்ணா நினைக்குறே? (மர்மமாகப் புன்னகைக்கிறார்)

**செ:** என்ன சாமி புதிர் போடுறீங்க?

**பிரே:** வேண்டாம் ராஜா, அத மட்டும் கேட்காதே. என் உயிருக்கே உலைவைச்சுடுவானுக.

**செ:** விடுங்க சாமி, என் தொழில்ல டல் அடிக்க ஆரம்பிச்சதாலதான் திவ்வியா வோட விலாசம் கேட்டேன். தனியா தொழில் தொடங்கி உங்களமாதிரி ஒஹோ எண்ணு வளரணும்.



**பிரே:** அதுக்கு வித்தை தெரியணுமே ராஜா.

**செ:** வித்தை கத்துக்கத்தானே சாமி திவ்யா வோட விலாசம் கேட்கிறேன். புரியாத சாமியா இருக்கீங்களே.

**பிரே:** (ஏதோ நினைவில் மூழ்கிவிட்டு பாடுகிறார்)

**அவள் பறந்து போனாளே**
**அவள் மறந்து போனாளே**
**டொலர் டொலராய் கறந்து போனாளே**
**அந்தப் பணத்துக்கு கணக்கில்லை**
**இந்தச் சாமிக்கு துணையில்லை**
**அவள் மறந்து போனாளே**
**ஃபொரினுக்கு பறந்து போனாளே?**

**செ:** சாமி கலங்காதீங்க சாமி. அடுத்த திட்டம் என்ன சாமி?

**பிரே:** அப்பீல் பண்ணப்போறேன் ராஜா. சுப்ரீம் கோட்டு எதுக்கிருக்கு?

**செ:** சுப்ரீம் கோட்டும் நீங்கதான், சூப்பர் பவரும் நீங்கதான் எண்ணு ஆடினீங்க, இப்ப சுப்ரீம் கோட்டை நம்பி இருக்கீங்க!

**ஆசையிலே சில நாள்-பெரும்**
**அவதியிலே சில நாள்**
**காதலிலே சிலநாள்-மனக்**
**கவலையிலே சில நாள்**
**வாழ்வதுவோ சில நாள்- இதில்**
**வாடுவதேன் பல நாள்?**

சுப்ரீம் கோட்டும் உங்களை காப்பாற்ற முடியாது சாமி. முடியாது. அந்தச் சிந்தனையில இருக்காதீங்க.

**சென்றதெல்லாம் வருமோ? அதைச்**
**சிந்தனைதான் தருமோ**
**வந்ததை யார் தடுத்தார்-இனி**
**வருவதை யார் மறுப்பார்?**

**பிரே:** செந்திலு, ராஜா! இப்பதான் ராஜா நான் உண்மையாவே ஞானியாகிட்டேன். எப்படின்னு கேட்கிறியா ராஜா?

**தொட்டிலுக்கு அன்னை**
**கட்டிலுக்குக் கன்னி**
**பட்டினிக்குத் தீனி**
**கெட்ட பின்பு ஞானி**
**ஹா ஹா ஹா-**
**நான் கெட்டபின்பு ஞானி.**
**ஹா ஹா ஹா**



பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன.
கிளை : 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06. 580130
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# முடிவும் தொடக்கமும்





→ ஆறுதலாக யோசித்துப்பார்த்தால் டயானாவுக்கு கிடைத்துள்ள புகழும், பிரபலமும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

உலக மக்களுக்காகவோ, அல்லது பிரிட்டிஷ் மக்களுக்கோ டயானா செய்த சேவைதான் என்ன? நாள் ஒன்றுக்கு பல இலட்சம் ரூபாய்கள் செலவு. ஒருநாள் அணிந்த உடையை மறுநாள் அணிவதில்லை. ஒரே நாளில்கூட புதிய புதிய ஆடைகள் அணிகலன்கள். வருடாந்த செலவு மட்டும் பல கோடி ரூபாய்கள்.

டயானா நினைத்திருந்தால் அன்னை தெரேசாவைவிட ஆயிரம் மடங்கு ஏழைகளுக்கு சேவை செய்திருக்கலாம். மருத்துவமனைகளை நிறுவியிருக்கலாம். ஒரு தடவை தொழுநோயாளர்களைச் சென்று பார்த்தது பெரிய செய்தி. ஆனால் அன்னை தெரேசா இந்த தள்ளாத வயதிலும் தொழுநோயாளரையும், அநாதைகளையும் பராமரித்துவருவதைவிட, ஒரு அழகான பெண் தொழுநோயாளரை பார்க்கச் சென்றதுதான் செய்தியாளர்களைக் கவர்ந்தது. அத்தோடு டயானாவும் அவர்களை மறந்துவிட்டார்.

கண்ணிவெடி எதிர்ப்பு விடயத்திலும்கூட டயானாவை வைத்து பிரசாரம் செய்தால் மக்களின் கவனத்தைப் பெறும் என்பதால் டயானாவை இணங்கவைத்து எதிர் பிரசாரத்தில் ஈடுபடுத்தினார்கள். அதனை ஒரு பொழுது போக்காக செய்துவிட்டு அடுத்த வாரமே உல்லாசப் பயணம் சென்றுவிட்டார் டயானா.

பணம் படைத்தவர்கள் எப்போதாவது ஏழைகளுக்கு அன்னதானம் போடுவது போன்ற வகையில்தான் டயானாவின் சேவைகளும் இருந்தன. டயானா வாழ்ந்த காலம் 36 ஆண்டுகள். இந்த 36 ஆண்டுகளில் டயானா பொதுச்சேவைக்கு செலவிட்ட மொத்த நேரத்தைக் கணக்கிட்டால் 36 நாட்கள்கூட இருக்காது என்பது உங்களுக்கு ஆச்சரியம் தரலாம். ஆனால் அதுதான் உண்மை. பின்னர் ஏன் இத்தனை மரியாதை? இத்தனை சோகம்? இத்தனை பிரபலம்? செய்தி உலகம் உயிர்கொடுத்து உருவாக்கிய தேவதைதான் டயானா. பிரிட்டிஷ் குடும்ப மருமகள் என்ற தகுதியும், டயானாவின் வசீகரமும், பிரிட்டிஷ் குடும்ப இரகசியங்களை அறிய மக்களுக்கு இருந்த ஆர்வமும் இளவரசி டயானாவை ஒரு தேவதையாக சிருஷ்டிக்க உதவின. நடிகை மர்லின் மன்றோ, கென்னடியின் மனைவி ஜாக்குலின் என்று செய்தி உலகுக்கு தீனிபோட்ட தேவதைகள் பலர் இருந்தனர். அவர்கள் காலத்தைவிட டயானா காலத்தில் செய்தி தொடர்பு ஊடகங்கள் பெற்ற வளர்ச்சியும் டயானாவின் பிரபலத்துக்கு பெரிதும் காரணமாகின.

கவர்ச்சி, கிசு கிசு, காதல்கதைகள் என்பவற்றை கழித்துவிட்டு பார்த்தால் டயானா பூச்சியமாகிவிடுவார். அவற்றை தவிர்த்துவிட்டு டயானா பற்றி நீங்கள் வேறு என்ன அறிந்துள்ளீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். பூச்சியம்தானே! அழகில்லாத ஒரு பிரிட்டிஷ் குடும்ப மருமகளாக டயானா இருந்திருந்தால் அக் குடும்பத்தின் ஏனைய மருமகள்கள்போல முக்கியத்துவம் இல்லாமல் போயிருப்பார். இளவரசர் அன்ட்ரூவின் முன்னாள் மனைவி சாரா கூட சில சமூக சேவைகள் செய்துவருகிறார். எனினும் அவர் டயானா போல் அழகில்லை.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் டயானாவை அடுத்து பரபரப்பு செய்திகளுக்கு செய்தி உலகம் நம்பியிருப்பது இளவரசர் வில்லியமை. கவர்ச்சிகரமான இளைஞரான வில்லியம் இதுவரை வெளியேகூட ஒழுங்காக தலை காட்டியதில்லை. மக்களுக்கும் ஒன்றும் செய்ததில்லை. ஆனாலும் பிரிட்டனில் நடந்த ஒரு கருத்துக் கணிப்பில் தங்களை கவர்ந்த ஆண் வில்லியம் என்று பெரும்பாலான இளம்பெண்கள் அடித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இளவரசர் வில்லியம்மீதுதான் இனி கமரா வெளிச்சங்கள் படையெடுக்கும்.



SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

# தண்டனை



# செம்மை




↑ செக்கச் செவேலென்று காணப்படும் இந்தரக நண்டுகளின் பின்னால் ருசிகரமான தகவல்கள் இருக்கின்றன.

இந்து சமுத்திரத்தில் உள்ள கிறிஸ்மஸ் தீவுகளின் கடற்கரைக்கு வருடத்துக்கு ஒருமுறை செம் நண்டுகள் படை எடுக்கின்றன. அங்குள்ள மேட்டு நிலப்பாறைகளில் வசிக்கும் இந்த நண்டுகள் பருவ மழைக்காலத்தில்தான் படையெடுப்பை நடத்துகின்றன. கிட்டத்தட்ட இரு வாரங்கள் பயணம் செய்து கடற்கரையை நாடுகின்றன. கடற்கரை மணலைக் கண்டதும் குஷியாகி அதில் புரண்டுவிட்டு, பின்னர் கடல்நீரில் மூழ்கி எழுகின்றன. அதுதான் நண்டுக் குளியலுங்கோ.

குளியல் முடிந்ததும் மிக சிரத்தையாக ஆண் நண்டும் பெண் நண்டும் சோடி சேர்கின்றன. காரியம் முடிந்ததும் ஆண் நண்டுகள் தங்கள் மேட்டு நிலப்பாறைகளை நோக்கி கிளம்பிவிடுகின்றன. பாவம் பெண் நண்டுகள் மட்டும் சினையைத் தாங்கி கடற்கரை மணலில் முட்டையிட்டுவிட்டு செல்வதற்காக அந்த பத்துநாட்கள் தரித்திருக்க வேண்டும். பின்னர்தான் அவை தங்கள் இருப்பிடத்திற்கு செல்ல முடியும்.

கடலில் நீர்பெருகி மணலில் புதைந்துகிடக்கும் முட்டைகளில் நீர் பட்டதும் குஞ்சு பொரிக்கும். இக்காட்சியைக் காணும்வரைதான் தாய் நண்டுகள் கடற்கரையில் தாமதிக்கின்றன. குஞ்சுகள் முட்டையை விட்டு வெளிவந்ததும் தாய் நண்டுகள், தங்கள் ஆண் துணைவர்கள் சென்ற திசையில் திரும்பிவிடுகின்றன.

குஞ்சுகள் 25 நாட்கள்வரை கடற்கரையில் திரிந்துவிட்டு தங்கள் பெற்றோர் போன அதே பாதையில் புறப்படுகின்றன. இதே நண்டுகள் அடுத்த வருட பருவமழை ஆரம்பமானதும் சோடி சேர்ந்து இன விருத்திக்காக மீண்டும் கடற்கரை வருகின்றன.

ஒவ்வொரு நண்டும் சராசரி ஒரு இலட்சம் முட்டைகளை இடுகின்றன. பயங்கரமான இனப்பெருக்கம். நண்டுக் குஞ்சுகள் கடற்கரையில் நடமாடித் திரியும்போது அவற்றை உணவாகக் கொள்ள வேறு பிராணிகளும் போட்டி போடுவதுண்டு. இருப்பினும் பெரும்பாலானவை மீண்டும் தங்கள் பெற்றோர் நண்டுகள் போய்ச் சேர்ந்த இடத்துக்கே போய்விடுகின்றன.

→ ஒரு மனிதனை கிரேனில் கட்டி தொங்கவிட்டிருக்கிறார்களே. இதென்ன அநியாயம் என்றா நினைக்கிறீர்கள். இவன் மனிதனே அல்ல. மாபாவி. நான்கு மாதங்களுக்குள் ஒன்பது இளம் பெண்களை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவு கொண்டிருக்கிறான். பின்னர் அப்பெண்களை கழுத்தை திருகி கொலை செய்திருக்கிறான். ஈரான் நாட்டின் தலைநகரான டெஹ்ரானில் தான் இந்தப் பகிரங்கத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. இரத்தக் காட்டேரி என்று பட்டம் சூட்டி தூக்கில் போட்டனர். இவனுக்கு 28 வயது.

தூக்கில் போட முன்னர் பலியான பெண்களின் உறவினர்களால் மொத்தம் 214 கசையடிகள் கொடுக்கப்பட்டன. செம சாத்து! ஆயிரக்கணக்கான மக்கள் இக்காட்சியை நேரில் கண்டனர்.

யார் முகத்திலும் சோகத்தின் நிழல்கூட எட்டிப்பார்க்கவில்லை. சபாஷ் சரியான தண்டனை. ■

# வாழ்க வளமுடன்



யதுசன் - 06.08.97 · விதுசன் - 07.09.97

சாவகச்சேரி மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடா டொரொன்டோவில் வசிப்பவர்களுமான ஜெயகுமார்–துஷ்யந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வர்கள் **யதுசன்** தனது இரண்டாவது பிறந்த நாளை **06.08.97** இலும் **விதுசன்** தனது முதலாவது பிறந்த நாளை **07.09.97** இலும் டொரன்டோவில் உள்ள இல்லத்தில் கொண்டாடினார்கள்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா, மீசாலையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, பூட்டிமார், மாமா, அத்தை, நிரோஜன் மச்சான், தர்சி மச்சாள், பிரான்சில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, பிரஷா அக்கா, சுஜன் அண்ணா, பிரிந்தன், இத்தாலி சித்தப்பா, சித்தி, கார்த்திகன் தம்பி, கனடாவில் இருக்கும் அம்மம்மா, சித்தப்பா, சித்திமார், மாமாமார், மாமிமார், அன்ரா, அத்தைமார், தம்பிமார், தான்யா மச்சாள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மாரியம்மன் அருளால் பல்கலையும் பெற்றுச் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: எஸ்.கே. நடராசலிங்கம் (அப்பப்பா), மீசாலை தெற்கு.

# இனிமை



→ மஞ்சள் மேனி. தலையில் மட்டும் தொப்பி போட்டது போல் கறுப்பு நிறம். இந்தப் பறவையின் பெயர்: 'காஞ்சனப் புள்'. இதன் குரல் படு அசத்தல். இசை போல குரல் ஒலிக்குமாம். இதன் குரல் இனிமை கேட்போரை மயக்கும் சக்தி கொண்டதாம். தென் ஆபிரிக்காவின் வடகிழக்கே உள்ள குருகர் தேசிய வனத்தில் இதேபோல வித்தியாச ரகப் பறவைகள் ஏராளமாக உள்ளன. ■